நிறுவனர் : நா.மகாலிங்கம்

டிசம்பர் 2021

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்...க மா... இதழ்

₹15/-



மனித்த பிறவியும் வேண்டுவதே...

அன்புடன்...

மார்கழி மாதம் இறைவனால் பெருமைப்படுத்தப்பட்ட மாதம். மனிதர்களின் ஓர் ஆண்டு என்பது தேவர்களின் ஒருநாள். அதில் மார்கழி மாதம் முழுவதும் தேவர்களின் அதிகாலைப் பொழுது. அந்தப் பொழுதில் தேவர்கள் அனைவரும் இறைவனின் சந்நிதியில் கூடியிருந்து இறைவனை வழிபடுகிறார்கள். இதையே தொண்டரடிப் பொடி ஆழ்வார், 'கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் என்ற பள்ளியெழுச்சி பாசுரத்தில், 'வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி எதிர்திசை நிறைந்தனர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மார்கழி மாதம் முழுவதுமே இறைவழிபாட்டுக்கு உகந்த மாதம் மட்டுமல்ல; நம் உடல் ஆரோக்கியத்துக்கும் மிகவும் ஏற்ற மாதம். மார்கழி மாதத்தின் சிறப்புகள் பற்றிய கட்டுரை இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது.

மார்கழி மாதத்தில்தான் நடராஜப்பெருமானுக்கு மிகவும் உகந்த ஆருத்ரா திருவிழா நடைபெறுகிறது. நடராஜப்பெருமானின் திருவடிவம் இந்தப் பிரபஞ்ச இயக்கத்தின் தத்துவத்தை எப்படி உணர்த்துகிறது என்பது பற்றியும், ஆருத்ரா தரிசனம் எவர் பொருட்டு நடைபெற்றது என்பது பற்றியும் விளக்கும் ஒரு கட்டுரை; தற்காலச் சூழலைக் கருத்தில் கொண்டு, அருட்செல்வரின், 'இந்து மதத்தை எப்படிக் காப்பாற்றுவது' என்ற கட்டுரை, புறச்சமயம் சார்ந்த தன் கணவர் கூன்பாண்டியனை தாய்ச் சமயமாம் சைவம் தழுவ பெரும் முயற்சிகள் மேற்கொண்ட மங்கையர்க்கரசியார் பற்றிய கட்டுரை போன்ற கட்டுரைகளும், இந்திய ராணுவத்தின் மிக உயரிய விருதான பரம் வீர் சக்ரா விருதை முதன்முதலில் பெற்ற பெருமைக்கு உரிய மேஜர் சோம்நாத் சர்மா அவர்களின் வீரம் செறிந்த வாழ்க்கையும் இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

இன்னும் ஓரிரு மாதங்களில் தன்னுடைய 40-வது ஆண்டில் பயணிக்க இருக்கும் ஓம்சக்தி இதழ், மேலும் மேலும் புதுப் புது அம்சங்களைத் தாங்கி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். எப்போதும்போல் உங்கள் அன்பும் ஆதரவும் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையுடன்...

-பொறுப்பாசிரியர்

வீரமணி ராஜு | படங்கள்: கே.எம்.பிரசன்னா

என் வாழ்வில் ஐயப்பன்

ஐயப்பன் பாடல்கள் என்றாலே நம் நினைவுக்கு வருபவர் கலைமாமணி கே.வீரமணிதான். இன்றைக்கு அவருடைய வழித்தடத்தில் ஐயப்பன் புகழ் பாடிப் பரவும் வீரமணி ராஜு, தனக்கும் சபரிமலை ஐயப்பனுக்கும் ஏற்பட்ட பந்தத்தை சிலிர்ப்புடன் விவரிக்கிறார்.

–பொறுப்பாசிரியர்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஹரிஹர சுதன் ஐயப்பனின் மகிமைகளை, ஐயப்பன் அற்புதங்களை ஓம் சக்தி வாசகர்களோடு பகிர்ந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 'பள்ளிக்கட்டு சபரிமலைக்கு' பாடல் பதிவான நாள் முதல் எங்கள் குடும்பத்திற்கு ஐயப்பன்தான் எல்லாம் என மாறிப் போனது. இந்தப் பாடல் 1969 அக்டோபர் மாதத்தில் பதிவானது. இன்று அந்தப் பாடல் காலங்களைக் கடந்து, ஜாதி மதங்களைக் கடந்து, இன்று ஐயப்பன்மார்களின் தேசிய கீதமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்றால் அதற்கு அந்த ஐயப்பன் அருள் மட்டுமே காரணம் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

1969-ல் இந்தப் பாடல் பதிவாகும் வரை எனது சித்தப்பா மற்றும் என் குரு, என் வழிகாட்டி, கலைமாமணி கே. வீரமணி அவர்கள் திரைப்படத் துறையில் மெல்லிசை மாமன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் குழுவில் பாடிக் கொண்டிருந்தது மட்டுமின்றி அவரோடு பாடல் பதிவுகளில் எல்லாம் உடன் இருந்திருக்கிறார். ஆனால், இந்தப் பாடல் வெளி வந்த பிறகு, அவருடைய வாழ்வின் திசையையே முற்றிலும் மாற்றிப் போட்டது. இன்றும் ஓர் இடத்தில் ஐயப்பன் பூஜை நடக்கிறது என்றால், 'பள்ளிக்கட்டு' பாட்டு பாடப்படாமல் அந்த பூஜை நிறைவடையாது என்று சொல்கிற அளவுக்கு, அந்தப் பாடல் பக்தர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இன்னும் பெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து எங்கள் குடும்பமே அந்த ஐயனுக்கு அடிமையானது என்று சொன்னால் மிகையாகாது.



இந்தப் பாடல் பாடிய பின்னர் தான் வீரமணி அவர்களால் சபரிமலை போக முடிந்தது. ஆனால் அதற்கு முன்பாகவே, என் தந்தையார் சோமு அவர்கள் (பள்ளிக்கட்டு பாடலை எழுதியவர்) 1959-ம்





ஆண்டிலிருந்தே மலைக்குச் சென்றிருக்கிறார். நானும், என் தந்தையார் சோமு மற்றும் வீரமணி அவர்களோடு முதன் முறையாக 1971-ம் ஆண்டு சபரிக்குச் சென்றோம். அப்போது தான் குருசாமி நம்பியார்சாமி அவர்களோடு தொடர்பு ஏற்பட்டு, பல அனுபவங்களைப் பெறுகிற பாக்கியம் கிடைத்தது.

ஐயப்பனின் அருள் இருந்தால் மட்டுமே, அதாவது ஐயப்பன் நம்மைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் மட்டுமே நாம் மாலை போடமுடியும். அவருடைய அருள் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. நம்பியார் குருசாமி அடிக்கடி சொல்வதுண்டு. அதாவது ஐயப்பன் தனது பக்தர்களைக் காக்க, தர்மத்தை நிலைநாட்ட சபரிமலையில் தவம் செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்வார். எனவே, சபரிமலை செல்பவர்கள் முறையாக ஒரு மண்டலம் விரதமிருந்து, எப்போதும் மனதில் ஐயனை நினைத்து, முறையாக விரதத்தை நிறைவேற்றினால் அந்த பக்தர் வாழ்வில் வீழ்ச்சி என்பதே இருக்காது. ஒரு சரணம் சொன்னாலே ஓடோடி வருகிற தெய்வம் ஐயப்பன். எனவே மலைக்கு வருபவர்கள் அந்த மலையின் புனிதத்தை கருத்திற்கொண்டு முறையாக விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் பலன்களை விவரிக்க வார்த்தைகள் போதாது.

சபரிமலை பாதை ஐயப்பன் நடந்த பாதை. ஐயப்பனின் பாதம் பட்ட புனித பூமி. எனவே, அந்த மரியாதையோடு



நாம் மலையைக் கடக்கவேண்டும். ஒரு முறை பதினெட்டாம் படி ஏறிவிட்டால், நம் வாழ்வில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும் என்பது சத்தியம். சபரிமலைக்கு வந்தால் நமக்கு இது கிடைக்குமா அது கிடைக்குமா என்று சந்தேகத்தோடு வராமல், சபரிமலைக்கு வந்தால் நிச்சயமாக ஐயப்பன் கொடுப்பான் என்ற நம்பிக்கையோடு வரவேண்டும் என்று எனது குருசாமிமார்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட சத்திய தெய்வம் ஐயப்பன். மிக மிகச் சாதாரணமாக இருந்த வீரமணி ராஜு என்ற என்னை இன்று உலகத்தினர் அனைவரும் அறிந்திருக்கிறார்கள் என்றால், அதற்கு அந்த ஐயப்பனே காரணம். ஐயப்பன் பாடல்களைப் பாடியதால் கிடைத்த மரியாதையே தவிர வேறு ஒன்றும் இல்லை. **காலங்கள் நகர்வதை வயது சொல்லும்; என் வாழ்க்கை உயர்வதை சபரி சொல்லும்; இதில் மூடி மறைத்திட ஒன்றுமில்லை; என் மூச்சில் நீயின்றி ஈரமில்லை.**

என்ற பாடல் வரிகளுக்கேற்ப என் வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறிவிட்ட ஐயப்பன் பல அற்புதங் களை எங்கள் வாழ்வில் செய்திருக்கிறார் என்பது நிதர்சனமான உண்மை.

எத்தனையோ அனுபவங்கள்... எதைச் சொல்வது... எதனை விடுவது... சபரிமலை பயணம் என்பதே ஐயப்பனால் நிர்ணயிக்கப்படுவது. நாம் போகிறோம்... நாம் நடக்கிறோம்... என்று நினைக்க முடியாது. நீங்கள் மாலை போட்டுவிட்டாலே ஐயப்பன் உங்கள் வீட்டிற்கு வந்துவிடுகிறார் என்று என் குருசாமி சொல்வார். அவர் உங்களுடனேயே சபரிமலை வந்து உங்களை பத்திரமாக வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பார் என்று நம்பியார் குருசாமி சொல்வார்.

இவை எல்லாம் தெரிந்த பின்னும், நான் ஒருமுறை ஏதோ ஆர்வத்தினால் (எனக்கு சபரிமலையில் எல்லா இடமும் தெரியும் என்ற எண்ணத்தில்... ஆணவத்தில் என்றுகூட சொல்ல லாம்.) வழிமாறிப் போய்விட்டேன். ஆனால், சிறிது தூரம் சென்ற பிறகுதான் அந்த ஆபத்து புரிந்தது... நான் அடர்த்தியான காட்டுக்குள் நுழைந்து விட்டேன் என்று... கூட என் நண்பர்கள் 4 பேர்... பின் என் தவறுக்கு, எனது ஆணவத்திற்கு ஐயனிடம் மன்னிப்பு கேட்ட சிறிது நேரத்தில், ஒரு கழுதை அந்தப் பக்கம் வந்தது. அப்போது மீண்டும் என் நண்பர்களிடம், ஒரு கழுதை அங்கு வருகிறது என்றால் நிச்சயமாக அங்கே ஒரு பாதை இருக்கும் என்று எண்ணி, ஐயப்பனை துதித்து, சரணங்களைப் போட்டு அந்தக் கழுதையை பின்தொடர்ந்தோம்.

எனது நண்பர்கள்கூட அந்த நேரத்தில் என்னை



கேலி செய்தார்கள். ஆனால், அப்போது அந்தச் சூழ்நிலையில் எனக்கு வேறு வழி தெரியவில்லை. முன்னால் ஒரு பத்தடி சென்ற கழுதை மீண்டும் யூ டர்ன் போட்டு மீண்டும் நாங்கள் வந்த பாதைக்கே திரும்பியது. அப்போதும் என் நண்பர்களின் கேலி. ஆனாலும் கழுதையை விட்டால் எங்களுக்கு வேறு வழியில்லை. தொடர்ந்தோம்... பின்தொடர்ந்தோம்... அந்தக் கழுதையை... ஆனால் சில நிமிடங்களில் நாங்கள் எந்த இடத்தில் வழி மாறினோமோ, அதே இடத்திற்கு வந்துவிட்டோம். ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். ஐயப்பனை மனதாரத் துதித்து நன்றி தெரிவித்தோம். வழி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கழுதையை மறந்தோம். அப்போது அங்கு (சபரி பீடம் அருகில்) தேநீர் கடை வைத்திருந்த ஒரு நபர் என் பெயரைச் சொல்லி என்னை அழைத்தார்.

அவர் நான் அந்தத் தவறான பாதையில் போவதைப் பார்த்திருக்கிறார். நாங்கள் வேறு ஏதோ இயற்கை உபாதைக்காக போகிறோம் என நினைத்திருக்கிறார். ஆனால், கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகியும் நாங்கள் வராததைக் கண்டு தவித்துப் போயிருக்கிறார். பல பக்தர்களிடமும் இதனைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவருடைய பதற்றம் கண்டு, 'நீங்கள் பதறும் அளவுக்கு அந்தப் பாதையில் என்ன இருக்கிறது?' என்று கேட்டேன். அதற்கு பதில் சொல்லாமல், 'நீங்கள் எப்படி சரியான பாதையில் திரும்பி வந்தீர்கள்?' என்று



> **சபரிமலைக்கு வந்தால் நமக்கு இது கிடைக்குமா அது கிடைக்குமா என்று சந்தேகத்தோடு வராமல், சபரிமலைக்கு வந்தால் நிச்சயமாக ஐயப்பன் கொடுப்பான் என்ற நம்பிக்கையோடு வரவேண்டும்**

எதிர்க்கேள்வி கேட்டார். நான் கழுதையை பற்றிக் கூறியதும் அவர் பெரிதாகச் சத்தம் போட்டுச் சிரித்தார். எங்களுக்குக் காரணம் புரியவில்லை. அவரிடம் விவரம் கேட்டபோது, 'நீங்கள் மாலை போட்டுக் கொண்டிருந்தும் பொய் சொல்கிறீர்களே, அதை நினைத்துதான் சிரித்தேன்.

காரணம், 'அந்தப் பாதையில் கழுதை வருவதற்கு வாய்ப்பே இல்லை' என்றார். அது மட்டுமில்லாமல் அந்தப் பகுதி கடுவாய்ப் புலிகளின் நடமாட்டம் அதிகமிருக்கும். அதனால் கழுதை வந்திருக்காது. அப்படி வந்திருந்தால் அந்தக் கழுதையைக் காட்டுங்கள் என்றும் அப்படிக் காட்டிவிட்டால் அவருடைய கடையை எங்களுக்குத் தந்துவிடுவதாகவும் கூறினார்.

அப்போதுதான் எங்களுக்கு அந்தக் கழுதையின் நினைவு வந்தது. மக்கள் அடர்த்தியாக நின்று கொண்டிருக்கிற அந்த இடத்தினை கடந்து போக கழுதைக்கு குறைந்த பட்சம் 15 நிமிடங்களாவது ஆகும். நான் உடனே அந்த இடத்திற்குச் சென்று பார்த்தேன். ஒரு கழுதையையும் காணவில்லை. (அந்தக் கடையில் நான் 5 நிமிடங்கள் இருந்திருப்பேன்). சுற்றுமுற்றும் பார்த்தும் கழுதையைக் காணவில்லை. ஆனால் நாங்கள் அந்தக் கழுதையை பின்தொடர்ந்துதான் வந்தோம் என்பதனை கடைக்காரரிடம் நிரூபிக்க அங்கு மீண்டும் தேடினோம்.

கடைக்காரரையும் அழைத்துக்கொண்டு தேடியதுதான் வேடிக்கை. ஆனால் ஒரே ஓரிடத்தில் பார்த்தபோது அங்கு கழுதையின் கால் குளம்புகள் தெரிய, அதைப் பார்த்ததும் கடைக்காரர் மயக்கம் போடாத குறை..... பிறகுதான் அவர் சொன்னார். 'சுவாமி நீங்ஙள் ஐயப்பனக் கண்டு' (மலையாளத்தில்) என்று.

நாங்கள் மெய்சிலிர்த்துப் போனோம். சபரிமலையில் எல்லாம் எனக்குத் தெரியும் என்ற ஆணவத்திற்கு ஐயப்பன் கழுதையை அனுப்பி பதிலடி கொடுத்தார். சபரிமலையில் ஐயப்பனைத் தவிர நமக்கு வேறு குருசாமி இருக்க முடியாது. நம்பியார் குருசாமியிடம் போய் நீங்கள்தான் பெரிய குருசாமி என்று யாராவது சொன்னால், அவர் சொல்வார்... ஐயப்பன்தான் குருசாமி என்று. இதுதான் சத்தியம்.

எனவே சபரிமலை செல்பவர்களுக்கு ஐயப்பன் உடன் வருவார். என்ன வேண்டுதல் இருந்தாலும் இருமுடியில் நெய் ஊற்றும்போது உங்கள் கோரிக்கைகளை வையுங்கள். உடனேயே உங்கள் கோரிக்கைகள் செவி சாய்க்கப்படும். இது உண்மை. ஐயப்பனை உணர்ந்து, அவரது மகிமையை அறிந்து சபரிமலைக்கு புனித விரதத்தோடு செல்லுங்கள். விளையாட்டிற்காக, பொழுதுபோக்கிற்காக செல்கிற மலை அல்ல அது என்பதை சுவாமிமார்கள் புரிந்து கொள்ள வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக ஐயப்பன் வாழ்வில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார் என்பது சத்தியம். ●

லக்ஷ்மிதரன் | படம்: கே.எம்.பிரசன்னா

ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயம் ஆகும் அத் தாண்டவம்
ஆமே சங்காரத்து அருந் தாண்டவங்களே

-திருமந்திரம்

சிதம்பரம் பொற்சபையில் நடராஜப்பெருமான் ஆடும் கூத்துகள் ஐந்து வகை என்று கூறும் திருமூலர், தொடர்ந்து சிருஷ்டிக்கும் தொழிலைச் செய்வது - அற்புதக் கூத்து; இன்பம் நல்கும் கூத்து - ஆனந்தக் கூத்து; சுவாச இயக்கக் கூத்து - அனவரதக் கூத்து; தூக்கத்தைச் செய்யும் - கூத்து ஊழிக் கூத்து; ஜீவன்களைத் தன்பால் அணைத்துக்கொள்ளும் கூத்து பேரொடுக்கக் கூத்து என்று அவற்றின் தத்துவங்களையும் விவரிக்கிறார்.

சங்க இலக்கியங்களிலும் நடராஜப்பெருமானின் தாண்டவங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பிற்கால இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பதினொரு வகையான நடனங்களில் கொடுகொட்டி, பாண்டரங்கம், மல்லாடல், குடக்கூத்து ஆகிய கூத்துகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இவை நான்கும் நடராஜப்பெருமான் ஆடிய கூத்துகளாகும். இவை தவிர மேலும் பல கூத்துகளை நடராஜப்பெருமான் நிகழ்த்தியிருக் கிறார். சிலப்பதிகாரத்தில் காபாலக் கூத்து குறிப்பிடப்படவில்லை.

திரிபுரம் எரித்த நிலையில் பறைகள் பல ஒலிக்க இறைவனும் இறைவியும் நால்வகை ரசங்கள் காட்டி ஆடிய கூத்து கொடுகொட்டி. திரிபுரம் எரித்தபோது ஊழிக்காலப் பிரளயம் போல் ஆடியது பாண்டரங்கம். பிரம கபாலத்தை கையில் ஏந்தி ஆடியது காபாலம் என்று ஒவ்வொரு கூத்தையும் எதன் பொருட்டு நிகழ்த்தினார் என்பதுகூட இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.



திருமந்திரமும், திருமுறைகளும், சங்க இலக்கியங்களும் விவரிக்கும் நடராஜப் பெருமானின் தலங்களில் முதன்மையான தலம் என்ற சிறப்பினுக்கு உரியது சிதம்பரம். பொற்சபை, ரத்தினசபை, ரஜதசபை (வெள்ளியம்பலம்), தாமிரசபை, சித்திரசபை ஆகிய நடராஜப்பெருமானுக்கு உரிய ஐந்து சபைகளில் சிதம்பரத்தில் அமைந்திருப்பது பொற்சபை. இந்த சபையில் பெருமான் ஆடும் நடனம் ஆனந்த நடனம்.

சிதம்பரம் கோயிலில் மார்கழி மாதம் பத்து நாள்கள் நடைபெறும் ஆருத்ரா தரிசனம் மிகவும் விமர்சையான விழாவாகும். அந்த விழாவைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன் நடராஜரின் உருவத் தத்துவம் விளக்கும் பிரபஞ்ச ரகசியத்தைப் பற்றித் தெரிந்துகொள்வோம்,

இந்தப் பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது என்பதை விவரிக்க வந்த விஞ்ஞானிகள், ‘ஓர் அணுவைப் பிளந்து பார்த்தால் அது எப்படி இயங்குகிறதோ அப்படித்தான் பிரபஞ்சமும் இயங்குகிறது. ஏனெனில் ஒவ்வொரு பொருளும் கோடானு கோடி அணுக்களால் உருவானதுதான்’ என்கிறார்கள். அணு எப்படி இயங்குகிறது என்று கேட்டால், சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆடுவதுபோல்தான் இயங்குகிறது என்கிறார் மேலைநாட்டு விஞ்ஞானியான டாக்டர் ஃப்ரிட்ஜ் ஆஃப் காப்ரா. அவர் தன்னுடைய The Tao of Physics என்ற நூலில், ‘The Cosmic Dance’ என்ற பகுதியில் பின்வருமாறு விவரித்திருக்கிறார்:



மனித்த பிறவியும் வேண்டுவதே...



மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக் மற்றும் மிராக்கிள் பானம் பற்றி ஓம்சக்தி மே, ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஓம்சக்தி இதழ்களில் வெளியான கட்டுரைகளின் டிஜிட்டல் வடிவம் தேவைப்படுவோர் omsakthimagazine@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

'அணுவின் நுண் பகுதியில் ஒன்று சதா ஆடிக்கொண்டு இருக்கிறது. அதன் ஆட்டத்தில் மற்ற நுண்துகள்கள் சம்பந்தப்படுவதால் சதா அழித்தலும், புதிய புதிய உருவாக்குதலும் நடந்துகொண்டே இருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் பிரபஞ்சம் இயங்குகிறது. இந்த விஞ்ஞானக் கொள்கையைத்தான் இந்திய நாட்டுத் தத்துவங்களில் கூறப்படும் சிவபெருமானின் ஆனந்த நடனம் உணர்த்துகிறது'

இப்போது ஆருத்ரா விழாவுக்கு வருவோம்...

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறார் மகாவிஷ்ணு. வழக்கத்துக்கு மாறாக அவர் சற்று கனமாக இருப்பதை உணர்ந்த ஆதிசேஷன், 'பிரபோ, தாருகாவனத்துக்குச் சென்று திரும்பியதில் இருந்து தங்கள் திருமேனியின் பாரம் அதிகரித்திருக்கிறதே. அதன் காரணத்தை நான் அறியலாமா?' என்று கேட்டார்.

அதற்கு மகாவிஷ்ணு, 'தாருகாவனத்தில் ஈசனின் திருநடனத்தை தரிசித்ததால் ஏற்பட்ட ஆனந்தமே எம் பாரத்துக்குக் காரணம்' என்றார். உடனே ஆதிசேஷனுக்கும் ஈசனின் திருநடனத்தை தரிசிக்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டுவிட்டது. தன் விருப்பத்தை விஷ்ணுவிடம் தெரிவித்தார். விஷ்ணு கூறியபடி சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றினார். சிவபெருமானின் கட்டளைப்படி மனித முகமும் பாம்பு உடலும் கொண்ட பதஞ்சலி முனிவராக பூமியில் தோன்றினார். அவர் பொருட்டு மார்கழி மாதம் பௌர்ணமி திதியும் ஆருத்ரா நட்சத்திரமும் கூடிய நாளில் சிவபெருமான் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆனந்த நடனம் ஆடியதாகவும், அதன் பொருட்டே மார்கழி மாதம் பத்துநாள்கள் ஆருத்ரா திருவிழா கொண்டாடப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. பிரபஞ்ச இயக்கத்துக்கு ஒரு உருவமாகத் திகழும் நடராஜப் பெருமானின் திருவடிவம் மிக அற்புத அழகுடன் கூடிய திருவடிவம். பூமியில் மனிதராகப் பிறந்தவர்கள் எவருமே இனியொரு பிறவி இல்லாத நிலையைத்தான் வேண்டுவார்கள். ஆனால், நடராஜப்பெருமானின் திருவடிவ தரிசனம் கண்டபோது திருநாவுக்கரசர் மறுபடி மறுபடி மனிதப்பிறவி வேண்டும் என்ற தன் விருப்பத்தை இப்படிப் பாடுகிறார்:

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடனே எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே

இறை வடிவங்களில் மிகவும் அற்புத அழகும் நளினமும் கொண்டதும், பார்ப்பவர்கள் அனைவரையும் பரவசப்படுத்துவமான வடிவம் நடராஜர் வடிவம். பிரபஞ்ச இயக்கத்தின் விளக்க உருவமாக அமைந்திருக்கும் நடராஜப் பெருமானுக்கு உகந்த ஆருத்ரா நாளில் பெருமானை தரிசித்து அருள் பெறலாமே.

●

சக்தி களஞ்சியம்



நா.மகாலிங்கம்



இந்து மதத்தை எப்படிக் காப்பாற்றுவது?

இப்போது நாடெங்கும் 'இந்து மதத்தைக் காப்போம்' என்கிற முழக்கம் பெரிதாகக் கேட்கிறது. இந்துமதத் தலைவர்களும், மடாதிபதிகளும், ஆத்திக சிரோன்மணிகளும் சங்கநாதம் செய்கிறார்கள். மகாநாடுகள் நடத்துகிறார்கள்; ஊர்வலம் போகிறார்கள்.

காவிக் கொடியுடன் மத்தகஜங்கள் அசைந்தாடிச் செல்கின்றன. பார்க்க மிக நன்றாக இருக்கிறது. திருப்தியாகவும் இருக்கிறது. நம்முடைய பாரததேசத்திடம் உள்ள ஆன்மிகச் செல்வத்துக்கு ஈடு கிடையாது; இணையும் கிடையாது. இது ஞானபூமி; மனிதனை அடுத்த பரிணாமத்திற்கு வித்திட்டு வரும் ஞானபூமி.

இந்த ஆன்மிகச் செல்வத்தைக் கண்டுபிடித்து, அளித்து, அபிவிருத்தி செய்தவர் ஒரே ஒரு நபர் அல்ல; தலைமுறை தலைமுறையாக அபிவிருத்தி



அடைந்து வந்த ஓர் உன்னதமான வாழ்க்கை முறை - ஞானச் சிந்தனை - ஒழுக்க வழி - அது.

அதனால்தான் அது பிற மதங்களை ஒடுக்க மதம் பிடித்து அலையவில்லை. தன்னை நிலை நிறுத்திக்கொள்ளவும், பரப்பவும் அது வாள் எடுக்கவில்லை; மதமாற்றம் என்கிற காரியத்தை அது செய்ததில்லை.

அதிலே பிறந்த அரசர்கள் ஞானிகளாக இருந்தார்கள். அநாதி காலத்துக்கு முன்பே, இயற்கையாக எழுந்த கருத்தாக அது இருந்தபடியால், அது அசைக்க முடியாத அடிப்படையில் இருந்து எழுந்து, இத்தனை காலமும் இளமையுடன் வாழ்ந்து வளர்ந்து வருகிறது.

இனியும் அது வாழ வேண்டாமா? வாழும்படிச் செய்ய வேண்டாமா? அது எப்படி என்பது தான் கேள்வி.

"ஒற்றுமையாக இருப்போம்; இந்து மதத்தைக் காப்பாற்றுவோம்" என்று முழங்குவதன் மூலமாகக் காப்பாற்ற முடியுமா? முடியாது. ஆனால் எப்படிக் காப்பாற்ற வேண்டும்?

நம் இந்துசமய நடைமுறைகளில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்து மதத்திற்கு இன்று ஏற்பட்டிருக்கும் அபாயம் பிற மதத்தினரால் மட்டும் அல்ல. இந்து மதத்தின் மீது வருங்கால இந்து சந்ததிக்கே நம்பிக்கை இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது!

நம் வருங்கால சந்ததியினர் முழுவதுமே நம்முடைய ஆலயங்களிடமும், சாத்திரங்களிடமும், சடங்குகளிடமும், தெய்வங்களிடமும் நம்பிக்கை இழந்துவிட்டால், என்ன ஆகும்?

ஒரே தலைமுறையில் இந்து மதமே மறைந்துவிடும் அபாயம் வந்துவிடும். இளைய தலைமுறையினர் இந்து மதத்தில் நம்பிக்கை வைப்பதற்கான வழிவகைகளைப் பற்றி சிந்தித்து, அதன் முடிவுகளைச் செயல்படுத்த வேண்டும்.

இந்து மதம் என்பது இரண்டு பகுதிகளை உடையது. முதலாவது வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள் போன்ற ரிஷிகள் அருளிய ஞானச் செல்வமும், அவர்கள் வகுத்தளித்த வாழ்வும் ஒரு பகுதி.

இரண்டாவது, வெளிப்படையாக நாம் அனுசரிக்கும் சின்னங்கள், ஆலயங்கள், சடங்குகள் முதலியன.

முதல் பகுதியைப் பொறுத்தவரையில் அது மிகப் பாதுகாப்பாக இருக்கிறது. அதுதான் இந்து மதத்திற்கே அடிப்படை. அதை யாரும் எதுவும் செய்துவிட முடியாது.

ஆனால், இரண்டாம் பகுதி அப்படியல்ல; அது நம் நித்ய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் கூடவே வருகிறது. சாப்பிடும்போது, குளிக்கும்போது, பிறப்பு - இறப்பின்போது எல்லாம் கூடவே வருகிறது.

இந்த இரண்டாம் பகுதியில்தான் வேண்டாத விஷயங்கள் நிறைய சேர்ந்துவிட்டிருக்கின்றன.

முதல் பகுதிக்கு முரணான முள்கள் எல்லாம் முளைத்திருக்கின்றன.

உண்மையான பக்தி உடையவர்களையும், நம்பிக்கையுடன் தேடி வருபவர்களையும் அது மனமுடையச் செய்கிறது. வெறுப்பு ஏற்படுத்துகிறது.

இந்து மதத்தின் வெளிப்படையான அம்சங்களில் முதன்மையாக இருப்பது எது? -

சக்தி களஞ்சியம்

கோயில்கள், மடங்கள். இந்த இரண்டும் மக்களுடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு இடங்களிலும்தான் இந்து மதத்திடம் வெறுப்பு ஏற்படுத்தும் பல விஷங்கள் சேர்ந்து விட்டிருக்கின்றன.

முதலில் நம்முடைய கோயில்களை எடுத்துக் கொள்ளலாம். இன்று நம் கோயில்களின் நிலை என்ன?

ஒரு பக்கம் அதன் பொருளாதார நிலை மிகப் பரிதாபமாக இருக்கிறது.

பல கோயில்களில் குப்பையும் கூளமும், புதரும் மண்டி, பாழடைந்தே போய்விட்டன. கோயில் சொத்துக்களை 'பயமே' இன்றி ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த முதலில் ஆவன செய்ய வேண்டும்.

தருமகர்த்தாக்களுக்கு இந்து மதத்தின் அடிப்படை ஞானம் வேண்டும். அப்படிப்பட்ட ஞானவான்களேயே தருமகர்த்தாக்களாக நியமிக்க வேண்டும். இரண்டாவது திருப்பதி போன்ற பெரிய கோயில்கள் எல்லாம் வணிகத் தலமாகக் காட்சி தருகிறது.

பதவியும், செல்வாக்கும் உள்ள பக்தன் சாமி அருகில் போய் எத்தனை நேரம் வேண்டுமானாலும் நிற்கலாம். ஏழை பக்தனுக்கோ அவன் மீது இரக்கம் காட்டுவது போல 'தரும தரிசனம்' - அதுவும் அரை விநாடி கூட சந்நிதியில் நிற்க முடியாது. விரட்டுவார்கள்.

இந்த நிலைமை இப்படியே நீடித்தால் இளைய தலைமுறையினருக்கு இந்து மதத்தில் ஆர்வம் ஏற்படுமா?

கோயிலுக்கு வரும் இளைஞர்கள் கூட்டம் குறைந்து வரும் நாளில் பெரிய கோயில்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

'நாள்தோறும் பல ஆயிரக் கணக்கான பேர்கள் வருகிறார்கள். எல்லோருக்கும் தரிசனம் செய்ய வசதி செய்து தர வேண்டாமா?' என்று கோயில் அதிகாரிகள் கேட்கிறார்கள்.

கூட்டம் அதிகமாக இருந்தால் பிரச்னைதான்; அதைச் சமாளிப்பது கடினம்தான். ஆனால், பிரச்னையைப் பிரச்னையாக வைத்துக் கொண்டிருந்தால் என்ன லாபம்? அதற்கு என்ன வழி என்று ஆலோசிக்க வேண்டியதுதானே?

> **"தருமகர்த்தாக்களுக்கு இந்து மதத்தின் அடிப்படை ஞானம் வேண்டும். அப்படிப்பட்ட ஞானவான்களேயே தருமகர்த்தாக்களாக நியமிக்க வேண்டும்."**

திருப்பதி போன்ற கோயில்களை குறைந்தபட்சம், கருவறைக்கு எதிரில் உள்ள கூடங்களையும், தூண்களையும் அகற்றிவிட்டு சந்நிதிக்கு நேரே பிரம்மாண்டமான கூடங்களை அமைத்து மக்கள் ஆயிரக்கணக்கில் ஒரே சமயத்தில் தரிசிக்கவும், தரிசனத்துக்கு வருவதற்கு ஒரு வழியும், தரிசனம் முடிந்து செல்வதற்கு ஒரு வழியும் செய்துவிட்டாலே பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

திருப்பதி, பழநி, மதுரை போன்ற கூட்டம் தாங்காத கோயில்களை எல்லாம் உடனடியாக இப்படி மாற்றி அமைத்துவிட வேண்டும்.

நம்முடைய கோயில்கள் எல்லாம் நம் போன்ற மனிதர்களால் கட்டப்பட்டவைதான்.

ஒரு காலத்தில் நம் கோயில்கள் சின்னஞ்சிறு ஓலைக் குடிசைகளிலோ, மரத்தடிகளிலோ இருந்தவைதான்.

பல்லவர்கள் குகைகளிலே கோயில்களை அமைத்தார்கள். பிறகு கற்களை அடுக்கி சிறு கோயில்களைச் சமைத்தார்கள். ராஜராஜசோழன் காலத்திலேதான் கற்றளிகள் தோன்றலாயின.

அதற்கு முன்னால் செங்கற்களால் அமைக்கப்பட்ட மாடங்களாகத்தான் கோயில்கள் இருந்தன. அவற்றை இடித்து விட்டுத்தான் கல்மாடங்களை அமைத்தார்கள்.

பிற்காலத்தில் வந்த அரசர்கள், அந்தக் கருவறைகளின் முன்னால் மண்டபங்களையும், பிராகாரங்களையும் அமைத்துக் கோயிலை விரிவுபடுத்திக் கொண்டே போனார்கள். இன்றைய கோயில்களின் வடிவம் பூர்த்தியானதெல்லாம் விஜயநகரப் பேரரசர்கள் காலத்தில்தான். ஒரு சில கோயில்கள் மட்டுமே பெரிதாக இருந்தன.

அது எப்படி இருந்தாலும் இப்போதுள்ள எந்தக் கோயிலுமே

ஒரே அரசனால் முழுமையாகக் கட்டப்பட்டவை அல்ல. சின்னதாகத் தோன்றி, தலைமுறை தலைமுறையாக அபிவிருத்தி பெற்றவையே.

காலத்திற்கு ஏற்ப, செல்வத்திற்கும், தேவைக்கும், கலைஞான ஆசைகளுக்கும் ஏற்றார்போல அவை மாறுதல் பெற்று அபிவிருத்தி அடைந்தன.

ஆனால், அந்த அபிவிருத்தி எல்லாம் விஜயநகர அரசர்களுக்குப் பின் நின்று போய்விட்டன. அதன்பின் கோயில்களின் வளர்ச்சியும் குன்றியது.

கோயில்களும் அவற்றிற்கு மன்னர்கள் விட்டுச் சென்ற சொத்துகளும், தருமகர்த்தாக் களும் பரம்பரை பூசாரிகளுமே எஞ்சினார்கள்.

இன்றும் நம் கோயில்களுக்கு 'மாறுதல்'கள் தேவையாக இருக்கிறது. மாறுதல்கள் என்றால், புனருத்தாரணமோ, குடமுழுக்கோ அல்ல. குடமுழுக்கு செய்வது ஒன்றும் பிரமாத விஷயமல்ல. அதை யார் வேண்டுமானாலும் செய்துவிடலாம்.

ஆனால், 'மாறுதல்' உண்மையில் உள்ளேதான் தேவைப்படுகிறது. கோயில்களுக்குள்ளே இருக்கிற அனாவசிய தூண்கள், சுவர்கள், குறுக்கீடுகள் எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும். ஆகம முறைப்படியே கர்ப்பக்கிருகத்தையும் அதற்கு எதிரில் இருக்கும் மண்டபத்தையும் விசாலமாகக் காற்றோட்டமாக ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக இறைவனை வழிபடக் கூடிய முறையில் அமைக்கலாம்.

அந்தக் காலங்களில் கோயில்களில் அன்னம் வைத்துப் படைத்துவிட்டு, அதை ஏழைகளுக்கு விநியோகிக்கும் ஒரு 'தரும' காரியமாகவே இதை முதலில் ஆரம்பித்தார்கள். கோயிலை நம்பியுள்ள குடும்பங்களுக்கே இந்த அன்னம் அளிக்கப்பட்டது.

அந்த நிலை எப்படியோ மாறிவிட்டது.

இந்தக் காலத்தில் அதை மீண்டும் கௌரவமான முறையில் புனிதமாக்குவது எப்படி என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

அறங்காவலர்கள், தருமகர்த்தாக்கள், நிர்வாக அதிகாரிகள் எல்லாம் கோயிலுக்கு வரும் வருமானங்களைக் கோயில் காரியங்களுக்கே செலவழிப்பதில் குறியாக இருக்க வேண்டும்.

பூஜை வேளைகளிலேதான் பாருங்கள். நம் கோயில்களிலே குருக்கள், அதிகாரிகள், சாமி தூக்கிகள், கோயில் எடுபிடிகள் எல்லாம் என்ன கத்தல் கத்துகிறார்கள்; என்ன ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்? கொஞ்சமாவது தெய்வ சந்நிதானத்திலே நிற்கிறோமே என்கிற அச்சம் அவர்களிடம் காணப்படுகிறதா?

'கடவுள் உள்ளே இருக்கிறார்' என்கிற பயத்தை அறவே தூக்கி எறிந்துவிட்ட கோயில் அதிகாரிகளைப் பார்க்கும்போது மற்ற பக்தர்களுக்கும், அந்த பயம் போய்விடுவதில் வியப்பு என்ன?

நம்முடைய கோயிலிலே உள்ள இன்னொரு வேதனைக்கு உரிய அம்சம்; இறைவனைத் தொட்டு வழிபாடு செய்விக்கிறவருக்கு நாம் மதிப்பே கொடுக்காமலிருப்பது!

நம் கோயில்களில் நிர்வாக அதிகாரிதான் ராஜா. அவர் சுத்தமாக, தருமத்திற்கும், தெய்வத்திற்கும் அஞ்சிய குருக்களுக்கு, கடவுளின் பிரதிநிதியாக நியமித்திருக்கும் குருக்களுக்கு மரியாதை கொடுப்பது இல்லை. அவர் ஒரு சாதாரண கோயில் ஊழியர் போல நடத்தப்படுகிறார்.

நம்முடைய முன்னோர்கள் மிகுந்த அறிவாற்றல் படைத்தவர்கள். சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து, 'சுத்தத்தை நோக்கி, படிப்படியாக உயர்ந்து சென்று' பல படிகளில் ஏறிச் சென்றவர்கள்.

இன்று குருக்கள், அந்தணர் என்று சொல்லப்படுபவரின் முன்னோர்கள் எல்லோரும், இப்படிப் பரிணாமத்தில் மேலே ஏறி வந்தவர்கள்தான்.

அணு உலைகளையும், அணுசக்தி கேந்திரங்களையும் நடத்துவதற்கு எப்படி விசேஷ பாதுகாப்புடன் விஞ்ஞானிகளைத் தயாரிக்கிறோமோ, அப்படியே மனிதனை தெய்வநிலைக்கு மாற்றும் 'உலை'களான கோயில்களுக்கு உரிய 'மெய்ஞ்ஞான விஞ்ஞானி'களை அவர்கள் உருவாக்கி வந்தார்கள். சுத்தம், சுகாதாரம், சாத்விக உணவு, சத்தியம், அறிவு வேட்கை, ஆன்மிக ஆய்வுகள், யோகப் பயிற்சிகள் – என்கிற அங்கங்களைக் கொண்ட ஒரு வாழ்க்கை முறையைத் தோற்றுவித்து, அவற்றில் பாரம்பர்யமாக ஈடுபடுத்தி, அந்தத் தலைமுறையினரைக் கோயில்களில் நியமித்து, அந்த ஞான விஞ்ஞான தீபத்தைக் காக்கும் கடமையை ஏற்படுத்திவிட்டுச் சென்றார்கள். ●

உங்கள்

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்

கடந்த முப்பத்தி ஒன்பது வருடங்களாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஓம் சக்தி ஆன்மிக, கலை, இலக்கிய மாத இதழ் தற்போது ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் என்று சமூக வலைதளங்களிலும் தன் பயணத்தைத் தொடர்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்


கீழே உள்ள Qr code- ஐ ஸ்கேன் செய்து பார்க்கவும்

Facebook Twitter Instagram



தம்பு ப.கிருஷ்ணசாமி

மாதங்களில் நான் மார்கழி



தமிழ் மாதங்கள் பன்னிரண்டில் ஒன்பதாவது மாதமாக வருவது மார்கழி. நம்முடைய சாஸ்திரங்கள் ஓர் ஆண்டை, உத்தராயணம் என்றும் தட்சிணாயனம் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றன. ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய உள்ள காலம் தட்சிணாயன காலமாகும். தை முதல் ஆனி முடிய உள்ள காலம் உத்தராயண காலமாகும். தட்சிணாயன காலம் தேவர்களின் இரவுக் காலம் என்றும், உத்தராயணக் காலம் அவர்களின் பகல் பொழுது என்றும் மேலும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்படிப் பார்க்கும்போது மார்கழி மாதம் தேவர்களின் அதிகாலைப் பொழுதாக அமையும்.


ஒருநாளின் அதிகாலைப் பொழுது என்பது மிகவும் விசேஷமானது. விடியற்காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை உள்ள அதிகாலை நேரம் பிரம்மமுகூர்த்த காலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு நம்முடைய நாளைத் தொடங்கினால், மிகவும் உற்சாகமாகச் செயல்பட முடியும் என்பது அனுபவத்தில் பலரும் உணர்ந்த உண்மை.

மார்கழி மாதத்தில் இரண்டு முக்கியமான விழாக்கள் வருகின்றன. ஒன்று சிவபெருமானுக்கு உரிய ஆருத்ரா; மற்றொன்று திருமாலுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசி. மற்ற பண்டிகைகளை விடவும் இந்த இரண்டு பண்டிகைகளுமே செலவுகள் இல்லாத விரத நாள்கள்தான் என்பது குறிப்பிடத்தக்க விசேஷம்.

இந்த இரண்டு நாள்களிலும் உணவும் நீரும் துறந்து இறைவழிபாட்டில் மனதை ஈடுபடுத்தும் முழு விரத நாள்களாகும். வயதானவர்கள் எளிய சாத்விக உணவைக் கொள்ளலாம்.

இந்த இரண்டு நாள்கள் மட்டுமில்லாமல், மார்கழி மாதம் முழுவதுமே உடலையும் உள்ளத்தையும் இறைவனிடம் ஒருமுகப்படுத்தி, எளிமையான முறையில் வழிபாடுகள் செய்து மனத்தூய்மை மற்றும் ஆன்மிக முன்னேற்றம் அடைய ஏற்ற மாதம் மார்கழி.

மார்கழி மாதத்தில் அதிகாலை எழுந்து நீராடி கண்ணனை வழிபட ஆண்டாளின் திருப்பாவையும், சிவபெருமானை வணங்கிட மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் பாடி மாசற்ற பக்தியுடன் இறைவனை வழிபடக்கூடிய புனிதமான மாதம் மார்கழி. அதிகாலை பிரம்மமுகூர்த்த வேளையில்



எழுந்திருக்கும் பெண்கள், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல், வாசல் தெளித்து, கோலமிட்டு, பூசணி மலர்களை அலங்காரமாக வைத்து, நீராடி இறைவனை வழிபட்ட பிறகு அன்றைய நாளைத் தொடங்கினால், உடலுக்கு ஆரோக்கியமும் செல்வச் செழிப்பும் ஏற்படும். மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் பெருக்கெடுக்கும்.

மார்கழி மழைக்காலம் முடிந்து பனிக்காலம் ஆரம்பிக்கும் மாதம். பனி படரும் அதிகாலை வேளை. பற்கள் கிட்டித்துப் போகும் அளவுக்கு குளிர் வீட்டுக்குள்ளும் விரவிக் கிடக்கும் அந்தப் பொழுதில் இன்னும் இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கலாம் என்றுதான் எல்லோருக்கும் தோன்றும்.

அந்தப் பொழுதில் எழுந்து குளித்துவிட்டு பஜனைப் பாடல்களைப் பாடியபடி வீதி வழியே வரும் சம்பிரதாயத்தை நம்முடைய இந்து தர்மம் ஏற்படுத்தியிருக்கிறது. நடுக்கும் குளிர்காலத்தில் இப்படி ஒரு நடைமுறை தேவைதானா என்று சிலர் சிந்திப்பது உண்டு. நம்முடைய முன்னோர்கள் வகுத்துத் தந்த வழிபாட்டு முறைகள் சாஸ்திர ரீதியாக மட்டுமில்லாமல், விஞ்ஞானபூர்வமாகவும் பயன் தரத்தக்க வகையில்தான் உள்ளது. வழிபாட்டு முறைகளை ஆன்மாவின் பொருட்டு மட்டுமின்றி, உடல் ஆரோக்கியம் கருதியும், அமைதியான வாழ்க்கை அமையவும் வகுத்துத் தந்துள்ளனர்.

ஒவ்வொரு நாளும் அதிகாலை நேரத்தில் காலை 4 மணி முதல் 6 மணி வரை காற்றிலுள்ள பிராணவாயு (ஆக்ஸிஜன்) வலுவான தூய நிலையில் அதாவது O3 என்று விஞ்ஞானிகள் குறிப்பிடும் ஓசோன் (Ozone) பூமியை ஒட்டிய காற்று மண்டலத்தில் அடர்த்தியாக வியாபித்திருக்கும். உயிர் வாழவும், மனித உறுப்புகள் சிறப்பாகச் செயல்படவும், ரத்தம் சுத்தமடையவும், நோய்களில் இருந்து பாதுகாக்கவும் தூய்மையான பிராணவாயு மிக அதிக அளவில் தேவை. கார்களும், பேருந்துகளும், தொழிற்சாலைகளும் காற்று மண்டலத்தில் வியாபித்து காற்றை மாசுபடுத்தியிருக்கும் இந்தக் காலத்தில் மற்ற நேரங்களில் நல்ல ஆக்ஸிஜன் நிரம்பியுள்ள தூய காற்று கிடைப்பது அரிது. எனவே, அதிகாலை



யில் கிடைக்கும் ஓசோன் என்னும் தூய பிராண வாயு தற்கால வாழ்க்கையில் மார்கழி மாதத்தில் மட்டுமில்லாமல் ஆண்டின் எல்லா நாள்களிலும் அவசியத் தேவையாகி விட்டது. மற்ற மாதங்களை விடவும் பனி படர்ந்திருக்கும் மார்கழி மாதத்தின் அதிகாலை வேளையில் இந்த ஓசோன் பிராண வாயு அதிக அளவில் பூமண்டலத்தில் வியாபித்திருக்கிறது. இந்த மாதத்தின் அதிகாலை வேளையில் இந்தப் பிராண வாயுவினால் கிடைக்கும் சக்தியைப் பெறாமல் ஏன் வீணடிக்கவேண்டும்?

ஆண்டு முழுவதும் இல்லாவிட்டாலும், மார்கழி மாதம் மட்டுமாவது இந்த அதிகாலை பிராண வாயுவைப் பெறுவதற்காக விழித்தெழுவது உடல் ஆரோக்கியத்துக்கு அவசியமாகிறது. குறிப்பாக வீதியில் இறைவனின் நாமங்களைப் பாடியபடி செல்லும்போது அதிக அளவு ஆக்ஸிஜனை சுவாசிக்க முடிகிறது. இறை நம்பிக்கை இல்லாதவர்கள்கூட காலை 6 மணிக்கு மேல் நடைப் பயிற்சி மேற்கொள்வதைவிட அதிகாலைப் பொழுதில் மேற்கொள்வது நல்லது. இந்த நல்ல தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனைவரையும் எழுப்பவேண்டியது ஒரு சேவையாகவே அமைகிறது. உறங்கிக்கொண்டிருப்பவர்களை தட்டி எழுப்பினால் அவர்களுக்கு எரிச்சல் ஏற்படும். ஆனால், இறைவனின் திருநாமங்களைப் பாடியபடி வரும்போது உறங்கிக் கொண்டிருப்பவர்கள் தாங்களாகவே எழுந்திருக்கிறார்கள். இறைவனின் திருநாமங்களைக் கேட்டபடி கண் விழித்ததில் மனம் அளவற்ற ஆனந்தம் அடைகிறது.



ஓயாமல் உழைத்திட பல நாள்கள், விழா கொண்டாடி மகிழ சில நாள்கள் என்று பல மாதங்களில் பல நாள்கள் இருக்கும்போது, உடலையும் உள்ளத்தையும் வலுப்படுத்தி அமைதியும் ஆனந்தமும் பெற சில நாள்கள் அமையவேண்டும் என்பதற்காகவே இறைவன் மார்கழி மாதத்தைப் படைத்திருக்கிறான் போலும். அதனால்தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், 'மாதங்களில் நான் மார்கழி' என்று மார்கழிக்கு மகிமை சேர்த்திருக்கிறார் போலும்1 ●

கற்பூரவல்லி என்னும் கற்பூரவள்ளி

தெய்வ மூலிகைகள் 7

மு.அரி

'கற்பூர வள்ளியின் கழறிலை யைத்தின
நற்பாலர் நோயெலா நாசமா யகலுமே'

– தேரையர் குணபாடம்.

இது கடுமையான மழைக்காலம். எங்கும் நீர் தேங்கி குளுமையாகி அதனால் சளியும், இருமலும், காய்ச்சலும் பெருகும் காலம். குறிப்பாகக் குழந்தைகள் அதிகம் அவதிப்படும் நேரம் இது. சளியும் அதனால் உருவாகும் மெல்லியக் காய்ச்சலுக்கும் உகந்த எளிய மருத்துவ மூலிகை என்றால் அது கற்பூரவள்ளிதான். அநேகமாக எல்லா இடங்களிலும் எளிதில் வளர்க்கக் கூடிய மூலிகை இது.

வள்ளி என்றால் படைப்பு, வல்லி என்றால் விரைவான என்று பொருள். தேவர்களால் படைக்கப்பட்டது, விரைவாக நோய்களை விரட்டக்கூடிய மூலிகை என்ற வகையில் கற்பூர வள்ளி அல்லது கற்பூரவல்லி என இரண்டு பெயருமே இதற்கு சிறப்பானதுதான். கற்பூரம் என்றால் நறுமணம்.

கற்பூரவள்ளி அல்லது கற்பூரவல்லி என்றும் அழைக்கப்படும் இதன் அறிவியல் பெயர் பிளெக்ட்ரான்டஸ் அம்போயினிகஸ் எனப்படுகிறது. ஆங்கிலத்தில் இந்தியன் போரேஜ் என்றும் ஜீவ மூலிகை, தேவ இலை, நற்றிலை, ஓமவல்லி, ஓதப்பன்னா, பாசானபேதி என்றும் அழைக்கப் படுகிறது. இலைகள் மென்மையாக ஆனால் தடித்து இருக்கும். இதன் சாறு சுவைமிக்க காரத் தன்மை கொண்டது. கற்பூரவள்ளியை பச்சையாகவும் மென்று சாப்பிடலாம். அதன் சாறு மார்புச் சளியை கரைக்கக் கூடியது. குழந்தைகளுக்கு கஷாயமாகவும் டீயாகவும் போட்டுக் கொடுக்கலாம். சாறெடுத்து மார்பில் தடவவும் செய்யலாம்.

கற்பூரம், கற்பூரவள்ளி சாறு கலந்து சூடாகக் காய்ச்சி தலை மற்றும் மார்பில் தடவ, தலைவலி, சளி, லேசான காய்ச்சல்கள் நீங்கும். தொண்டையில் கோழைச் சளி இருந்தால் இந்த இலைகளை மென்றால் நிவாரணம் பெறலாம். நாசி பிரச்னைகள் மற்றும் தொண்டைப் புண் ஆற்ற இது உதவும். ஆஸ்துமா மற்றும் மூச்சுக் குழாய் அழற்சிக்கு இந்த மூலிகை உதவுகிறது. வெற்றிலை போல வயிற்றின் செரிமானத்திற்கு இதுவும் உதவுகிறது. கிழக்காசிய நாடுகளில் இது உணவுகளின் சுவையில் பயன்படுத்தப்படுகிறது. வடநாடுகளில் ஏடிஸ் வகைக் கொசுக்களை விரட்ட கற்பூரவள்ளி செடிகள் அதிகம் நடப்படுகிறது.

அதிக அளவு ஊட்டச்சத்துகள் கொண்ட இந்த கற்பூரவள்ளி இலைகளை அடிக்கடி சாப்பிட்டு வந்தால், உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி வலிமையடையும். இதனால் உடலைத் தாக்கும் பல்வேறு நோய்களில் இருந்து விடுபடலாம். ஒரு கிராம் கற்பூரவள்ளி இலையில் ஒரு ஆப்பிளை விட 42 மடங்கு



ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகளான வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் சி சத்துகள் உள்ளன என்று ஆய்வுகள் சொல்கின்றன. கற்பூரவள்ளி இலைகளில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால், மலச்சிக்கல் நீங்கும். ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கும். ரத்தக் கொதிப்பு மட்டுப்படும்.


இதன் சாறுடன் தேன் கலந்து அருந்தி வந்தால் மூக்கில் நீர்வடிதல், மூச்சு விடுவதில் சிரமம், தலைபாரம், ஆஸ்துமா, தொண்டைக்கட்டு, தொண்டைக்கமறல் போன்றவை குணமடையும். இதன் சாறோடு பனங்கற்கண்டு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் மாந்தம் குணமாகும். குளிர்ச்சி யான உடல் கொண்டோருக்கு வரும் நுரையீரல் பாதிப்பு நீங்கவும் மூச்சுக்குழல் அடைப்பு சீராகவும் கற்பூரவள்ளி சாறு மிகவும் உதவும். கற்பூரவள்ளி எண்ணெய் சரும நோய்களுக்கு மருந்தாகவும் உள்ளது. மூட்டுவலிக்கான தைலமாகவும், புற்றுநோய் வருவதைத் தடுக்கும் நிவாரணியாகவும் உள்ளது. கற்பூரவள்ளி தலைச் சாயமாகவும் பயன்படுகிறது. புகைப் பிடிப்பதால் நுரையீரலில் தேங்கியிருக்கும் நச்சுகள், மாசுகளை கற்பூரவள்ளி இலைச்சாறு நீக்கும். மேலும் நுரையீரல் சம்பந்தமான புற்றுநோய் ஏற்படுவதையும் தடுக்கும்.

வியர்வைப் பெருக்கியாகவும், காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் இது பயன்படுகிறது. சீதள இருமல், அஜீரண வாந்தி போன்ற கோளாறுகளை இதன் சாறு நீக்கும். இதன் இலைகளை வைத்துக் கட்ட கட்டிகள் கரையும். தசைகள் சுருங்குவதைத் தடுக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், இளைப்பு நோய், கண் அழற்சி மட்டும் அல்ல நரம்புகளுக்குச் சத்து மருந்தாகவும் மனக் கோளாறுகளைச் சரிசெய்யும் நிவாரணியாகவும் இது பயன்படுகிறது. சிறுநீரை எளிதில் வெளியேற்றவும் ரத்தத்தை சுத்தப்படுத்தும் மூலிகையாகவும் இது சித்தர் பெருமக்களால் பயன்படுத்தப்பட்டது. கற்பூரவள்ளி ஒரு சிறந்த கிருமிநாசினியாகவும் உள்ளது. இது வளரும் இடத்தில் நுண்கிருமிகள் அண்டாது. இது இருக்கும் தோட்டத்தில் மற்ற செடிகள் பூச்சிகளால் பாதிக்காது.



குழந்தைகளுக்குக் கொடுக்கும்போது தேன் கலந்து கொஞ்சமே கொஞ்சம் கொடுக்கலாம். உங்கள் உடல் தன்மையை ஆராய்ந்த பிறகே இந்தச் சாறை பயன்படுத்த வேண்டும். எதற்கும் ஒரு சித்த மருத்துவரைக் கலந்து ஆலோசித்த பிறகே எடுத்துக் கொள்ளவும். இவ்வாறு பல நன்மைகள் வழங்கும் கற்பூரவள்ளியை நாமே வளர்த்து பலன் பெறுவதே நன்மை அளிக்கும். ●

ராசிபலன்



மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

மாதப் பிற்பகுதியில் அதிகார தோரணையுடன் காணப்படுவீர்கள். கௌரவமாக நடத்தப்படுவீர்கள். மிகவும் துணிச்சலான செயல்களைச் செய்து அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். ஆனால் தந்தையுடன் வாக்குவாதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும். குடும்பம் மகிழ்ச்சியில் திளைக்கும். குடும்பத்தில் மாத முற்பகுதியில் பெண் குழந்தைகள் சம்பந்தமாகவும் மனைவி மூலமாகவும் சுப காரியம் நடக்கலாம். எதிர்பாராத மிகப் பெரிய தொகையை தந்தையிடமிருந்து பெறுவீர்கள். தங்கள் உடல்நலனில் சற்று கவனம் தேவை. மேலும் மாத முற்பகுதியில் குழந்தைகளின் உடல் நலனிலும் கவனம் தேவை. ஆனாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. நிலம் சம்பந்தமான பத்திரப்பதிவு செய்யும் எண்ணம் இருந்தால் அதனை மாதத்தின் கடைசி மூன்று நாள்களில் செய்வதைத் தவிர்க்கவும்.வேலை செய்பவர் களுக்கு அலுவலகத்தில் எல்லா வேலைகளையும் சற்று சிரமப்பட்டு முடிக்க வேண்டியிருக்கும். சீக்கிரமே கடின உழைப்புக் கேற்ற பாராட்டு கிடைக்கப் போகிறது. அலுவலகத்தில் வயதில் பெரியவர்களுடன் சற்று அனுசரித்து நடந்துகொள்ளுங்கள்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மாத முற்பகுதியில் சுமாரான வியாபாரம் இருந்தாலும் பிற்பகுதியில் அமோகமாக வியாபாரம் இருக்கும். குருபகவானின் பார்வை தங்கள் வியாபாரத்திற்கு உறுதுணையாக இருப்பதால் பொருளாதாரம் சிறக்கும்.

பெண்களுக்கு இந்த மாதம் விருந்து விசேஷம், சுபகாரியம் என மிகவும் குதூகலத்துடனும் ஆனந்தத்துடனும் செல்லும். உற்றார் உறவினரை சந்தித்து மகிழ்ச்சியில் திளைக்கப் போகிறீர்கள். அலுவலகத்தில் வேலை சற்று சிரமமாக இருந்தாலும் சக ஊழியர்களின் உதவியுடன் திறம்படச் செய்து முடிப்பீர்கள்.

சாதகமான நாள்கள்: 1,8,11,14,17,20,24,26,28

சந்திராஷ்டம நாள்கள்: 2 மாலை முதல் 3, 4, 5 காலை வரை மற்றும் 30 பிற்பகல் முதல் 31

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமானை சஷ்டி கார்த்திகை நட்சத்திரம் அன்றும், சனீஸ்வர பகவானை சனிக்கிழமை அன்றும் தீபமேற்றி மலர் சாத்தி வழிபட சகல முன்னேற்றமும் ஏற்படும்.



ரிஷபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1,2-ம் பாதம்)

தாயார் வழியில் பெரிய ஆதாயம் கிடைக்கும் மாதம் இது. இதுவரை செய்து முடிக்காத விஷயத்தை வாழ்க்கைத்துணையின் உதவியுடன் செய்து முடிக்கப்போகிறீர்கள். சகோதர சகோதரி வகையில் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. எவருடனும் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். மாதப் பிற்பகுதியில் வெகு நாள்களாக எதிர்பார்த்திருந்த ஆடம்பரப் பொருள்கள் திடீரென வந்து சேரும். குடும்பத்தில் பணவரவு நிறைந்து காணப்படும். சிலர் வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். வயிறு சம்பந்தமான பிரச்னைகள் ஏதேனும் இருந்தால் உடனே மருத்துவரிடம் சென்று சிகிச்சை மேற்கொள்வது நல்லது. வங்கியில் நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த கடன் தொகை கிடைக்கும். நிறுத்தி வைத்திருந்த வீடு கட்டும் வேலையை மறுபடியும் கட்டத் தொடங்குவீர்கள். தாய்மாமனுடன் மாத முற்பகுதியில் சிறிது பிணக்கு ஏற்பட்டு சில நாள்களில் சரியாகி விடும். வாகனத்தில் செல்லும்போது சற்று கவனமுடன் செல்லவும். நண்பர்களால் மிகுந்த ஆதாயம் உண்டு.

வேலையில் எந்தவித பிரச்னையும் இருக்காது. வேலைகளை சரிவர செய்து முடிப்பீர்கள். ஆனால் மறைமுக எதிரிகளின் தொந்தரவு உண்டு. எப்போதும் போல் சாமர்த்தியமாக சமாளிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இந்த மாதம் முழுவதுமே வியாபாரம் மிகவும் சிறந்து காணப்படும். விற்பனையில் புது முயற்சியில் இறங்கலாம் வெளியூர்ப் பயணம் செல்லும் சூழ்நிலை ஏற்படும். மிகுந்த பொருளாதார வளம் ஏற்படும்.

பெண்களுக்கு மாத முற்பகுதி மிகவும் நன்றாக உள்ளது. விருந்து விசேஷம் என்று வீட்டு உறவினருடன் கூடி மகிழ்வீர்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சில பெண் ஊழியர்களால் பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

சாதகமான நாள்கள்: 2,8,10,13,16,19,22,28,30

சந்திராஷ்டம நாள்கள்: 5 காலை முதல் 6, 7 பிற்பகல் வரை

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்கிர பகவானையும் மகாலட்சுமியையும் ஒவ்வொரு வெள்ளியன்றும் தீபம் ஏற்றி மலர் சாத்தி வழிபட சகல சவுபாக்கியங்களும் உண்டாகும்.

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் ஜோதிடர் **பூமணி நாராயணன்,**
B.A. (Tamil) M.Sc (Astrology) ஜோதிடக் கலை பயிற்றுநர்



மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்)

மிகவும் மதிப்பும் மரியாதையுடனும் நடத்தப்படுவீர்கள். ஆலய சம்பந்தமான திருப்பணிகளுக்கு உதவுவீர்கள். உடன்பிறப்புகளுடன் சற்று அனுசரித்து நடந்துகொள்ளவும். தாங்கள் வெகு நாள்களாக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த அரசாங்க சம்பந்தமான அலுவல்கள் விரைவிலேயே முடிவடையும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று ஒரு முறை வழிபட்டு வர எல்லா பிரச்னைகளும் விரைவிலேயே சூரியனைக் கண்ட பனிபோல விலகும். திருமணத்திற்காகக் காத்திருந்தவர்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்களால் பிரச்னை வர வாய்ப்பு உள்ளதால் அனுசரித்து நடக்கவும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். உடல் நலம் சிறந்துவிளங்கும். வாழ்க்கைத் துணைவழியில் அனுகூலமான பலனை எதிர் பார்க்கலாம். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பெண் குழந்தைகளால் பெருமை அடைவீர்கள். வெளியூரில் வசிக்கும் சகோதர சகோதரிகளைச் சந்தித்துப் பேசி மகிழ்ச்சி அடைவீர்கள்.

அலுவலகத்தில் மிகவும் தைரியத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பீர்கள். சக நண்பர்கள் உதவி செய்வார்கள். மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த அரசு உதவிகள் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் வியாபாரம் செழித்து பொருளாதாரம் பெருகும். புதிய முயற்சியில் தற்போது ஈடுபட வேண்டாம்.

பெண்கள் குடும்பத்தில் மிகவும் தைரியத்துடன் உலா வருவீர்கள். தாயாரின் ஆதரவுடன் எல்லா செயல்களையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்குப் பணவரவு அதிகரிக்கும்.

சாதகமான நாள்கள்: 2,5,12,15,17,21,24,28,29

சந்திராஷ்டம நாள்கள்: 7 பிற்பகல் முதல் 8, 9 மாலை வரை

வழிபட வேண்டிய தெய்வம்: சதுர்த்தி தினத்தன்று விநாயகப் பெருமானை அருகம்புல் வைத்து தீபம் ஏற்றி வழிபடவும்.



கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

குடும்பத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுக்கும் மாதம். குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். வீடு நிலம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சகோதர சகோதரிகளுடன் பேசி சுமுகத் தீர்வு காண்பீர்கள். உறவினர்களின் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். வேலை வாய்ப்பிற்காகக் காத்திருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். மிகுந்த தைரியத்துடன் உலா வருவீர்கள். பெற்றோருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சிறிது நேரத்தில் சரியாகும். குடும்ப செலவிற்காகச் சிறிது கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கண் தொடர்பான நோய்கள் தோன்றி மறையும். குருவின் பார்வையினால் பணவரவுக்குக் குறைவிருக்காது. பொருளாதாரம் சிறந்து காணப்படும். விரயச் செலவுகளைக் கட்டுப்படுத்தினால் நிறைய பணத்தை மிச்சப்படுத்தலாம். உற்றார் உறவினர்களிடையே மிகவும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். வாகனம் ஓட்டும்போது மட்டும் சற்று கவனமுடன் இருக்கவும். குடும்பத்தில் உள்ள பெண்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

அலுவலகம் செல்பவர்கள் சோம்பேறித்தனமாக உணர்ந்தாலும், கடினமான வேலைகளைக் கூட சற்று சிரமப்பட்டு முடித்து விடுவீர்கள். உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்கள் வியாபாரத்தில் புதிய முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடுவது நல்லது. மாத முற்பகுதியில் வியாபாரம் செழித்து விளங்கும். வியாபார விஷயமாக வெளியூர் செல்லும் சூழ்நிலை ஏற்படும்.

பெண்களுக்கு மாத முற்பகுதி சிறப்புடன் காணப்படும். நீங்கள் சொல்வதுதான் குடும்பத்தில் சட்டமாக இருக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு மேலதிகாரியிடம் இருந்து ஒரு நல்ல செய்தி வந்து சேரும். சக ஊழியர்கள் எல்லோரையும் அனுசரித்துச் சென்றால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம்.

சாதகமான நாள்கள்: 1,4,7,14,19,23,26,28,30

சந்திராஷ்டம நாள்கள்: 9 மாலை முதல் 10, 11 மாலை வரை

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியை ஒவ்வொரு திங்கள்கிழமையும் விளக்கேற்றி பூ சாற்றி வழிபடவும்.



(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

இந்த மாதம் முழுவதும் தங்கள் தேகஆரோக்கியம் மிகவும் சிறந்து காணப்படும். மிகவும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். அரசாங்க சம்பந்தமான நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மறு பேச்சு இருக்காது. எல்லோரும் அனுசரித்து அன்புடன் நடந்துகொள்வார்கள். நிலம் வாங்க வேண்டும் அல்லது வீடு கட்ட வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு சரியான தருணம் இது. நினைத்ததற்கு அதிகமாகவே பணவரவு வந்து சேரும்.இளைய சகோதரரிடமிருந்து நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். உடல்நலனில் மட்டும் சற்று கவனம் தேவை. மாத இறுதியில் பத்திரப்பதிவு செய்கிறீர்கள் என்றால் கவனமுடன் இருக்கவும். மற்றபடி. எதிர்பார்த்த, எதிர்பாராத அனைத்து நல்ல விஷயங்களுமே நடக்கும் மாதம் இது. தாய் தந்தையின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். வயிறு தொடர்பான பிரச்னைகளுக்கு உடனே சிகிச்சை எடுத்துக் கொள்ளவும். மாதப் பிற்பகுதியில் குடும்பத்தில் உள்ள பெண்களால் சிறு சச்சரவு ஏற்பட்டு சரியாகும்.வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் எடுத்துக்கொள்ளவும்.

அலுவலகம் செல்பவர்கள் பணிகளில் மிகுந்த கவனமாக இருப்பது நல்லது. அதிகாரிகளிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு வியாபாரம் சிறந்து விளங்கும். பொருளாதாரம் சிறக்கும். பணவரவு நீங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கும்.

பெண்களுக்கு மாத முற்பகுதி மிகவும் அமோகமாக உள்ளது. ஏதாவது ஆடம்பரப் பொருள்கள் நகைகள் வாங்க நினைத்திருந்தால் முதல் வாரத்திலேயே வாங்கிவிடவும். அலுவலகம் செல்லும் பெண்களுக்குச் சிறிது கவனக்குறைவு ஏற்படக்கூடும். என்றாலும் விரைவிலேயே கவனமாகச் செயல்பட்டு பணிகளை முடித்துவிடுவீர்கள்.

சாதகமான நாள்கள்: 3,4,7,15,17,20,23,25,28

சந்திராஷ்டம நாள்கள்: 11 மாலை 12, 13

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமானை திங்கட்கிழமை என்றும் பிரதோஷம் அன்றும் தீபம் ஏற்றி வில்வதளம் சாத்தி வழிபடவும்.



(உத்திரம் 2,3,4 -ம் பாதம் ஹஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்)

இந்த மாதம் முழுவதும் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள். பெற்றோர்களின் ஆரோக்கியம் சிறந்து விளங்கும். குலதெய்வ வழிபாட்டை அவசியம் நிறைவேற்றுங்கள். குடும்பத்தில் தடைப்பட்டுக் கொண்டிருக்கும் நல்ல விஷயங்கள் நடக்க ஆரம்பிக்கும். தாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தந்தையால் மாத முற்பகுதியில் சற்று தடை ஏற்பட்டாலும் பிற்பகுதியில் அது நீங்கி விடும். அனைத்து விதத்திலும் உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். நெடுநாள்களாகத் திருமணம் தடைப்பட்டவர்களுக்கு திடீரென திருமண ஏற்பாடு நடக்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. தாயுடன் சச்சரவினை தவிருங்கள். பணவரவு அதிகரித்துக் காணப்படும். வாய்வு சம்பந்தமான உணவு வகைகளில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையால் அனுகூலம் உண்டு. வெளியூர் அல்லது வெளிநாட்டில் உள்ள மகளிடம் இருந்து பணவரவு உண்டு.

வேலையில் மறைமுக எதிரிககளால் ஆபத்து உள்ளதால் சற்று கவனமுடன் இருக்கவும். இருப்பினும் குருவின் பார்வையினால் எல்லாவற்றையும் சமாளித்து விடுவீர்கள். இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மிகுந்த முன்னேற்றமான மாதம். தாங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வெகுநாள்களாகத் தேங்கியிருந்த கடன்கள் வந்துசேரும்.

பெண்கள் வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். ஆடை ஆபரணம் வந்து சேரும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலையில் சிறிது மனக்குழப்பம் ஏற்பட்டாலும் குருவின் பார்வை அதனைச் சரிசெய்துவிடும். எனவே புத்துணர்ச்சியுடன் வேலை பார்ப்பீர்கள்.

சாதகமான நாள்கள்: 3,6,9,11,19,21,26,29,30

சந்திராஷ்டம நாள்கள்: 14,15,16 பிற்பகல் வரை

வழிபட வேண்டிய தெய்வம்: குரு பகவானை மஞ்சள் மலர் கொண்டு அர்ச்சித்து தீபமேற்றி வழிபட, சகல சௌபாக்கியங்களும் ஏற்படும்.

துலாம்

(சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்)

மாதம் முழுவதும் மிகுந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள். தந்தையால் அனுகூலம் உண்டு. முயற்சிகளுக்குத் தந்தை உதவி செய்வார். மாதப் பிற்பகுதியில் உடல்நலனில் சற்று கவனம் தேவை. வீடு நிலம் சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு விஷயங்களில் மிகவும் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். மாத முற்பகுதியில் பணவரவு மிகுந்து காணப்படும். உடன்பிறப்புகளின் உதவியால் சில விஷயங்களில் தைரியமாக ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். கண், பல், இடுப்பு எலும்பு, சளி சம்பந்தப்பட்ட பிரச்னைகள் வந்து போகும். தாயாரின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். தாய்மாமனுடன் மறைமுகமான பகைமை இருந்து கொண்டிருக்கும். சிலர் நண்பர்களுடன் குறுகிய தூரப் பயணமாக சுற்றுலா சென்று வருவீர்கள். தந்தைவழி உறவினர்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் சென்றால் பல விஷயங்களை சாதிக்கலாம்.

அலுவலகம் செல்பவர்களுக்குச் சனி பகவானின் தாக்கத்தினால் வேலைப்பளு அதிகம் இருந்தாலும் குருபகவானின் பார்வையினால் அதனை எதிர்கொண்டு சமாளித்து விடுவீர்கள். பதவி உயர்வுடன் சேர்ந்த இடமாற்றம் சிலருக்குக் கிடைக்கக்கூடும்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்குச் சனி பகவான் பார்வை தொழில் ஸ்தானத்தில் இருப்பதால் சற்று கஷ்டப்பட்டு முன்னேற வேண்டிய காலம்தான். இருப்பினும் தங்களுடைய முழு முயற்சியினாலும் குரு பகவானின் அருளாலும் முன்னேற்றம் உண்டாகும்.

பெண்களுக்குத் தாயாரின் உதவி எப்பொழுதுமே இருக்கும். மாத முற்பகுதியில் சிலர் ஆபரணங்களை வாங்குவீர்கள். கையில் பணப்புழக்கம் இருக்கும். அலுவலகம் செல்லும் பெண்கள் கவனமுடன் வேலை பார்க்கவேண்டிய நேரம். மேல் அதிகாரிகளுடன் அனுசரித்துச் செல்லுங்கள்.

சாதகமான நாள்கள்: 2,5,8,13,20,23,26,29,30

சந்திராஷ்டம நாள்கள்: 16 பிற்பகல் முதல் 17, 18

வழிபட வேண்டிய தெய்வம்: சக்கரத்தாழ்வாருக்கு எள் சாதம் நைவேத்யம் செய்து வழிபாடு செய்யவும். எல்லா வித முன்னேற்றமும் ஏற்படும்.

விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

மிகவும் தைரியத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயல்படும் மாதம் இது. உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு உண்டு. மாத முற்பகுதியில் தங்களின் அன்பான பேச்சினால் எல்லோரையும் கட்டிப் போட்டு விடுவீர்கள். மாதப் பிற்பகுதியில் உடன்பிறப்புகளுடன் சில பிணக்குகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகி விடும். தொலைவிலுள்ள பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்தி வந்து சேரும். தந்தையினால் நன்மையுண்டு. சிலருக்கு அரசாங்க அனுகூலம் ஏற்படும். பல வழிகளிலும் லாபங்கள் வரும் மாதம் இது. சுற்றத்தார்களால் கௌரவப் படுத்தப்படுவீர்கள். குடும்ப நிம்மதிக்கு பங்கம் விளைவித்த மறைமுக எதிரிகள் காணாமல் போவர். வீட்டிலிருந்து கணினியில் வேலை பார்ப்பவர்கள் கண் சம்பந்தமான பாதுகாப்பினை மேற்கொள்வது நன்மை பயக்கும். தங்களுக்குப் பிடித்த வீடும் கிடைக்கும். குழந்தைகளின் நடவடிக்கைகளில் பெற்றோரின் கண்காணிப்பு அவசியம். உறவினர் வீட்டு சுபகாரியங்களில் குடும்பத்துடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

அலுவலகம் செல்பவர்களுக்கு நல்ல நேரம் இது. மேலிடத்தில் தங்கள் வார்த்தைக்கு மதிப்பு கிடைக்கும். வேலையில் முன்னேற்றம் காணப்படும். மேலதிகாரிகளால் கௌரவப்படுத்தப்படுவீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு குருவின் அருளினால் வியாபாரமும் தொழிலும் நன்கு முன்னேற்றம் அடைந்து பொருளாதாரம் சிறக்கும். விரயச் செலவுகள் இனி இருக்காது. புதிய முயற்சிகளில் இறங்கலாம்.

பெண்களுக்கு இந்த மாதம் முழுவதும் குடும்பம் மங்களகரமாக விளங்கும். பூஜை அறைக்குத் தேவை யான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தனவரவு அதிகரிக்கும். அலுவலகத்தில் நிம்மதியாக வேலை பார்ப்பீர்கள். சிலருக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றமும் ஏற்படும்.

சாதகமான நாள்கள்: 2,6,9,11,16,23,27,29,30

சந்திராஷ்டம நாள்கள்: 19, 20, 21 பிற்பகல் வரை

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவானையும், தட்சிணாமூர்த்தியையும் மஞ்சள் நிற மலர்களாலோ முல்லை மலர்களாலோ அர்ச்சித்து விளக்கேற்றி வழிபடவும்.



தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்)

வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை மரியாதை அதிகரிக்கும். அதிகாரத் தோரணையில் இருப்பீர்கள். குலதெய்வக் கோயிலுக்குக் குடும்பத்தாருடன் ஒருமுறை சென்று வருவது எல்லா விதத்திலும் நன்மை பயக்கும். மாதக் கடைசியில் உடன் பிறந்த சகோதர சகோதரிகளின் உதவிகள் கிடைக்கும். நிலம், வீடு வாங்குவது சம்பந்தமான விஷயங்களில் தற்போது தாராளமாக ஈடுபடலாம். தங்களின் எல்லா விஷயங்களிலும் வாழ்க்கைத்துணையின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் அநாவசியமான செலவினங்களைத் தவிர்த்தல் நலம். தந்தையின் ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும். நண்பர்களிடமிருந்து ஆதாயம் பெறுவீர்கள். உடன் பிறந்தோருடன் சிறிது வாக்குவாதம் ஏற்பட்டு உடனே சரியாகி விடும். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான செய்தி ஒன்று வந்து சேரும். குறுகிய தூரப் பயணத்தால் நன்மை உண்டு. அரசு வழியில் தாங்கள் நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். இதுவரை பேசாமல் இருந்த சகோதரிகளில் ஒருவர் தங்களுடன் ஒற்றுமையாகித் தங்களுடைய செயல்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

அலுவலகம் செல்பவர்களின் வார்த்தைகளுக்கு அதிகாரிகள் மதிப்பு கொடுப்பர். அலுவலகத்தில் கௌரவப்படுத்தப்படுவீர்கள். தாங்கள் எதிர்பார்த்த சம்பளஉயர்வுடன் பதவிஉயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்கள் வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். நிச்சயம் அது வெற்றி அடையும். மாதக் கடைசி நாள்களில் மட்டும் புது முயற்சிகளைத் தவிர்க்கவும்.

பெண்களுக்கு திடீரென ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. தனவரவு அதிகரிக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு தங்கள் விடாமுயற்சியினால் வேலைகளை நல்லபடியாக முடிப்பீர்கள்.

சாதகமான நாள்கள்: 1,5,9,12,16,25,26,28,29

சந்திராஷ்டம நாள்கள்: 21 பிற்பகல் முதல் 22, 23

வழிபட வேண்டிய தெய்வம்: வேங்கடேச பெருமாளை மலர்களால் அலங்கரித்து தீபம் ஏற்றி வழிபட, சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.



மகரம்

(உத்திராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்)

துணிச்சலுடன் செயல்படும் மாதம். நிலம் சம்பந்தமான விஷயங்களில் ஆதாயம் உண்டு. தாயின் உடல் நலனில் சற்று கவனம் தேவை. தந்தையுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். பணவரவுக்குக் குறைவிருக்காது. ஆனாலும் சிக்கனமாகச் செலவு செய்தீர்கள் என்றால் மாதக் கடைசியில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். புதிய முயற்சிகளை சற்று தள்ளிப் போடவும். ஒருமுறை குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்கும் இஷ்ட தெய்வ கோயிலுக்கும் சென்று வழிபாடு செய்து வாருங்கள். மாதப் பிற்பகுதியில் தந்தை வழியிலோ அரசு வழியிலோ திடீரென ஓர் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் நகை விஷயமாகவோ பணம் விஷயமாகவோ விவாதம் செய்வதைத் தவிருங்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வீட்டு விசேஷங்களுக்குக் குடும்பத்துடன் சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். அயல்நாட்டில் உள்ள நண்பரிடமிருந்து விசேஷ செய்தி ஒன்று வந்து சேரும்.

அலுவலகத்தில் சக ஊழியர் உதவியுடன் வேலைகளைச் செவ்வனே செய்து முடித்து. சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு.

வியாபாரத்தில் சற்று யோசித்துச் செயல்பட வேண்டும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். தற்போது செய்து கொண்டிருக்கும் வியாபாரத்தை நல்ல முறையில் செய்துவாருங்கள். பழைய கடன் வசூல் ஆகும்.

பெண்களுக்குத் தந்தையின் வழியில் அனுகூலம் உண்டு. அக்கம்பக்கத்தினர் உங்கள் உதவிகளை நாடி வருவார்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு வேலைப்பளு சற்று அதிக மாக இருந்தபோதிலும் சமாளித்து விடுவீர்கள். ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு.

சாதகமான நாள்கள்: 2,4,7,11,15,18,21,29,30

சந்திராஷ்டம நாள்கள்: 24, 25, 26 காலை வரை

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமானை செவ்வாய் மற்றும் சஷ்டி நாள்களில் தீபம் ஏற்றி மலரால் அர்ச்சித்து வழிபடவும். தாங்கள் நினைத்தது விரைவில் நிறைவேறும்.



கும்பம்

(அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம்)

இந்த மாதம் முழுவதும் தாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் மிகவும் வெற்றிகரமாக முடியும். நிலம், சகோதர சகோதரிகளிடம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சிகள் நடந்து எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். செலவுகள் சுப விரயமாக இருக்கும். நண்பர்களிடமிருந்து நீங்கள் கேட்ட உதவிகள் உடனே கிடைக்கும். உங்கள் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளிடமிருந்து சுபச்செய்தி ஒன்று வந்து சேரும். பெண்களின் திருமணம் தொடர்பான முயற்சிகள் அனுகூலமாக முடியும்.

வீட்டிற்குத் தேவையான மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனத்தில் செல்லும்போது சற்று எச்சரிக்கையுடன் செல்லுங்கள். சிலருக்கு வேறு வீட்டுக்குக் குடியேறும் வாய்ப்பு ஏற்படும். அரசு வழியில் தாங்கள் நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உடலில் நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறுகள் வர வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் மிகவும் தைரியத்துடனும் சுறுசுறுப்புடனும் அனைத்து வேலைகளையும் செய்து முடித்து மேலதிகாரிகளிடம் பாராட்டு பெறுவீர்கள். ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு.

வியாபாரிகளுக்கு அமோகமான மாதம் இது. தொழிலைப் பெருக்கி பொருளாதாரத்தை அதிகரிக்கப் போகின்றீர்கள்.

பெண்களுக்கு கணவரால் ஆதாயம் உண்டு. நீங்கள் கேட்ட பொருள் அனைத்தும் வீடு தேடி வரும் நேரம் இது. அலுவலகம் செல்லும் பெண்களுக்கு நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த அரசு சம்பந்தமான நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். முயற்சிகள் அனைத்தும் நிறைவேறும்.

சாதகமான நாள்கள்: 1,4,8,12,15,19,22,24,30

சந்திராஷ்டம நாள்கள்: 26 காலை முதல் 27, 28 பிற்பகல் வரை

வழிபட வேண்டிய தெய்வம்: ஒவ்வொரு சனிக்கிழமை அன்றும் கோயிலுக்குச் சென்று சனீஸ்வர பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடவும்.



மீனம்

(பூரட்டாதி 4 - ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

அனைத்து வசதிகளும் தேடி வரும் மாதம் இது. சுற்றத்தாரிடம் நல்ல பெயர் எடுப்பீர்கள். ஆடை ஆபரணங்கள் சேரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். உற்றார் உறவினருடன் கூடி மகிழ்வீர்கள். மாதக் கடைசி நாள்களில் நண்பர்களுடன் அனுசரித்துப் போகவும். தனவரவு அதிகரிக்கும். இருந்தாலும் திட்டமிட்டுச் செலவு செய்தீர்கள் என்றால் பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்திற்காக சுபவிரயம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. முகஸ்துதிக்கு மயங்கவேண்டாம். எதிர்பார்த்த கடன் நிச்சயம் கிடைக்கும். முன்பின் தெரியாத நபர்களுக்கு ஜாமீன் கையெழுத்துப் போடுவதைத் தவிர்க்கவும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். யாருக்கும் எதற்கும் வாக்குறுதி கொடுக்காதீர்கள். தாய்மாமன் வழியில் அனுகூலம் உண்டு. சகோதர சகோதரிகளின் உதவிகள் கிடைக்கும். தாயாரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். தாயிடமிருந்து நீங்கள் நினைத்த உதவிகள் கிடைக்கும். தங்க நகைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். தாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் நிறைவேறும்.

அலுவலகத்தில் கீழ்நிலை உதவியாளர்களிடம் அனுசரித்துச் செல்லுங்கள். அவர்கள் கேட்கும் உதவிகளை முடிந்தவரை செய்து கொடுங்கள். தங்களின் வார்த்தைக்கு மறு பேச்சு இருக்காது.


வியாபாரிகளுக்கு அரசு வழியில் உதவியோ கடனோ கிடைக்கும். அதனைப் பயன்படுத்தி வியாபாரத்தை விரிவுபடுத்தலாம். மிகவும் முன்னேற்றமான மாதம் இது.

பெண்களுக்கு வாழ்க்கைத்துணையுடன் வீண் விவாதம் தவிர்த்தால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். அலுவலகம் செல்லும் பெண்களுக்குச் சற்று வேலைப்பளு அதிகமாக இருக்கும். நகைச்சுவையாய் பேசுகிறேன் என்று வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

சாதகமான நாள்கள்: 5,6,8,11,16,18,20,24,26

சந்திராஷ்டம நாள்கள்: 1, 2 மாலை வரை மற்றும் 28 பிற்பகல் முதல் 29, 30 பிற்பகல் வரை

வழிபட வேண்டிய தெய்வம்: வெள்ளிக்கிழமை அன்று துர்க்கை அம்மனுக்கு மலர் சாற்றி விளக்கு ஏற்றி வழிபட சகல துன்பங்களும் விலகும். ●



முருங்கையைப் பத்தி உங்களோட பகிர்ந்துக்கிடலாம்னு நினைக்கிறேன். ‘முருங்கையை நட்டவன் வெறுங்கையோட போவான்’னு ஒரு பழமொழி உண்டு. ஆனா, இந்தப் பழமொழியை தப்பா புரிஞ்சிக்கிட்டு வேற வேற மாதிரி அர்த்தம் சொல்லிட்டிருக்காங்க. முருங்கைல அதோட கீரை, காய், பூ, பிசின்னு எல்லாத்துக்கும் மருத்துவ குணம் உண்டுங்கிறதோட இதை தினமும் சாப்பிட்டு வந்தாலே ஒரு மனுசன் நோய் நொடியில்லாம இருக்கலாம். அதுமட்டுமில்ல வயசானாலும் இளமையா இருக்கலாம். குடுகுடு கிழவனா ஆனாலும் கம்பு ஊணி நடக்காம கம்பீரமா நடக்கலாம். அந்த அளவுக்கு முருங்கைக்கு சக்தி இருக்கு.

முருங்கைக்கீரைல கால்சியம் சத்து, இரும்புச்சத்துன்னு ஏராளமான சத்துகள் இருக்கு. தினமும் முருங்கைக்கீரையை எதாவது ஒரு வடிவத்துல சாப்பிட்டு வந்தாலே நோய் நொடியில்லாம இருக்கலாம். ஒருநாள் கீரை பொரியல் இல்லன்னா கூட்டு செஞ்சி சாப்பிடலாம். சாம்பாரோட சிலபேர் சேர்த்துக்கிடுறாங்க. இன்னும் சிலபேர் கஞ்சியோட முருங்கைக்கீரை சேர்த்துக்கிடுற பழக்கமும் இருக்கு. சிலபேர் முருங்கைக்கீரை இல்லாம அடை செய்யமாட்டாங்க. எங்க வீட்டுல முருங்கைமரம் இருக்கிறதால அடை செய்யும்போது மரத்துல இருந்து பறிச்சி சேர்த்துக்கிடுவோம். ஒருநாள் முருங்கைக்கீரைல சூப் செய்வோம்.

முருங்கைக்கீரை சூப் ரொம்ப நல்லது.

பலன்கள் பல அள்ளித்தரும் முருங்கை!

முருங்கைக்கீரையோட கொஞ்சம் மிளகு, சீரகம், சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து நல்லா வேக வச்சி கடைசியில உப்பு சேர்த்தா முருங்கைக்கீரை சூப் தயார். முருங்கைக்கீரை சூப்பை காலைல 11 மணி வாக்குல செஞ்சி குடிக்கலாம். அதேபோல சாயங்காலமும் செஞ்சி குடிக்கலாம். முக்கியமா காய்ச்சல் வர்ற நேரங்கள்ல இந்த சூப்பை குடிச்சிட்டு வந்தா சோர்வு இல்லாம தெம்பா இருக்கும். கொரோனா காலகட்டத்துல பலபேர் வீட்டுல முருங்கைக்கீரை சூப்தான். செலவில்லாதது மட்டுமில்ல உடனடியா பலன் தரக்கூடியது இந்த முருங்கைக்கீரை சூப்.

முருங்கைக்கீரை மட்டுமில்ல அதோட காயை சாம்பார், கூட்டுன்னு செஞ்சி சாப்பிடலாம். முத்திப்போன முருங்கைக்காயை சூப் வச்சி குடிக்கலாம். நல்லா முத்திப்போனா அதை வெயில்ல காய வச்சி எடுத்துக்கோங்க. இப்போ நாட்டு மருந்துக்கடைகள்லகூட முருங்கைவிதை விக்கிறாங்க. முருங்கைவிதையை சாப்பிடும்போது அதுக்கு உள்ளே இருக்கிற பருப்பை மட்டுந்தான் சாப்பிடணும். பிஞ்சா இருக்கும்போது அப்பிடியே சாப்பிடலாம். ஆனா, காய்ஞ்சிபோன முருங்கை விதையை உடைச்சி அதுக்கு உள்ளே இருக்கிற பருப்பை மட்டும் எடுத்துச் சாப்பிடணும்.

முருங்கை விதை சாப்பிடுறதால தீராத பல நோய்கள்கூட தீருதுன்னு சொன்னா நீங்க ஆச்சர்யப்படுவீங்க. ஆஸ்துமா வந்தா அவ்வளவுதான்... காலம் முழுக்க மருந்து சாப்பிட்டுதான் ஆகணும்னு சொல்வாங்க. ஆஸ்துமா நோயாளிகள் மட்டுமில்ல மூச்சுவிட முடியாம கஷ்டப்படுறவங்க, நுரையீரல்ல பிரச்னை உள்ளவங்கன்னு எல்லோருமே முருங்கை விதையை சாப்பிடலாம். கொரோனா நேரத்துல பலபேர் மூச்சுவிட முடியாம ஆக்சிஜன் சிலிண்டர் உதவியோட மூச்சு விட்டாங்க. அப்பிடி செஞ்சும்கூட பலபேருக்கு பயனில்லாமப்போனது எல்லோருக்கும் தெரியும். அந்த மாதிரி பிரச்னைக்கு முருங்கை விதை நல்ல பலன் தரும்.

கொரோனாவால பாதிக்கப்பட்ட பலபேரை நான் இந்த முருங்கைவிதையை சாப்பிடச் சொன்னேன். அப்பிடி சாப்பிட்ட பலபேர் எந்த பிரச்னையும் இல்லாம மூச்சுவிட்டாங்க. யாருக்கும் எந்த பாதிப்பும் வரல. ஏற்கெனவே கொரோனாவுக்கு வேற சில இயற்கை மருந்துகள் சாப்பிடச் சொல்லியிருக்கேன். அதுலயே நல்ல பலன் கிடைச்சது. அதோட முருங்கை விதையையும் சாப்பிடச் சொன்னேன். மூச்சுவிட முடியாம சிரமப்பட்டவங்க அந்தப் பிரச்னையில இருந்து மீண்டு எழுந்தாங்க. இந்த முருங்கை விதை மருத்துவத்தை எங்க பகுதியில உள்ள சித்த மருத்துவமனையில மருந்தாளுநரா வேலை பார்த்து பணி ஓய்வுபெற்ற ஸ்ரீதர்ங்கிறவர் சொன்னார். அவரை இங்க அறிமுகப் படுத்துறதுல பெருமைப்படுறேன்.

முருங்கை விதை மட்டுமில்ல... முருங்கை விதையை அரைச்சி எண்ணெயாக்கி அதோட சக்கை பிண்ணாக்கு வடிவத்துல வரும்போது அதை காய வச்சி கொடுக்கும்போது சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல தீர்வா இருக்கு. முருங்கைப் பிண்ணாக்கோட விலை ரொம்ப குறைச்சல்தான். முருங்கை விதைல உள்ள கசப்பும், துவர்ப்பும் சர்க்கரை நோய்க்கு நல்ல மருந்து. இதுமாதிரி ரொம்ப எளிமையா கிடைக்கிற முருங்கையோட ஒவ்வொரு பொருளும் மனுசனுக்கு மருந்தாகுது. இதை நான் உணர்ந்துதான் சொல்றேன். பல நோய்களுக்கு முருங்கை நல்ல மருந்து. முதல்ல சொன்ன பழமொழி மாதிரி நிச்சயம் எல்லோருக்கும் பலன் தரும். வயசானாலும் இளமையா இருக்கலாம். ●

காயத்ரி கணேஷ்

அழகன் முருகனின் ஆற்றுப்படை



ஆவினன்குடியை அடுத்து நக்கீரர் சுவாமிமலைக்கு வருகிறார். புராணச் சிறப்பு கொண்ட தலம் சுவாமிமலை. இதையே திருஏரகம் என்பர். முருகப்பெருமான் ஈசனுக்கே குருவாக அமர்ந்து தகப்பன் சாமியாய் அருள் செய்யும் திருத்தலம்.

வழக்கமாக ஒரு தலத்தின் சிறப்பினைப் பாடும்போது அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெருமைகளையும் அந்த நகரின் சிறப்பினையும் அழகுறப் பாடும் நக்கீரர், திரு ஏரகம் குறித்துப் பாட வரும்போது கொஞ்சம் மாறுபட்டுப் பாடுகிறார். மற்ற தலங்களைப் பாடும்போதெல்லாம் அந்தத் தலத்தோடு தொடர்புடைய புராணச் செய்திகளையும் சேர்த்துப் பாடுபவர் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடும்போது அவற்றைப் பாடவில்லை.

மொத்தம் பதிமூன்றே அடிகள். இதில் 12 அடிகள் அந்த ஊரில் வாழும் அந்தணர்களைப் பற்றிச் சொல்லி கடைசி அடியில் அந்தத் தலத்து இறைவனைச் சுட்டிப் பாடுகிறார். இது இந்தத் தலத்தின் சிறப்பினை இன்னும் விரிவாக எடுத்துக் கூறுகிறது என்கிறார்கள் முன்னோர்கள்.

ஓர் ஊரில் மக்கள் நல்லவர்களாக அவர்களின் கடமைகளிலிருந்து தவறாதவர்களாக வாழ்கிறார்கள் என்றால் அதன் பொருள் அந்த ஊர் சகல செல்வங்களும் நிறைந்து விளங்குகிறது என்பதாகும். அங்கே அவர்கள் தங்களின் கடமையைச் செய்ய எந்தத் தடையும் இல்லை எனலாம். அதிலும் அந்தணர்கள் முறையாக அவர்களுக்கான தொழில்களைச் செய்து வாழ்கிறார்கள் என்றால் அந்த ஊர் சாந்நித்யமும், சாஸ்திரமும், சகல செல்வமும் நிறைந்த ஊர் என்று சொல்லிவிடலாம். அப்படி ஓர் ஊராக திருஏரகம் விளங்கியது என்பதைத்தான் தன் பாடல் மூலம் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பழங்காலந்தொட்டே அந்தணர்கள் வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள்

அந்தணர் துதிக்கும் ஏரகத்து இறைவன்

- திருஏரகம்



வாழும் பகுதிகள் அகரங்கள் என்று அழைக்கப் பட்டன. அப்படி ஓர் அகரம் திருவேரகம். காவிரி ஆற்றின் கரையில் அமைந்த தலம். இந்தத் தலத்தில் அந்தணர்கள் கூட்டமாக வாழ் கிறார்கள்.

இருமூன் றெய்திய வியல்பினின் வழா–

இரு மூன்று – என்றால் ஆறு. அந்தணர்கள் அறுவகைத் தொழிலைப் புரிபவர்கள். அதில் வழுவாமல் இருப்பவர்கள். அது என்ன அறுவகைத் தொழில்?

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கோடல், கொடுத்தல் என்பனவே அறுவகைத் தொழில்கள். அந்தணர்கள் தினமும் வேதம் ஓதுவர். அதே போன்று வேதத்தைக் கற்றுக் கொடுக்கவும் செய்வர். அன்றாடம் அவர்கள் செய்யவேண்டிய வேள்விகள் சில உண்டு. அதேபோன்று பிறருக்காக வேள்விகள் செய்து வைக்கவும் செய்வர். இவை எல்லாம் அக்காலத்தில் ஏரகத்தைச் சுற்றி செழுமையான குடி இருந்தது என்பதைக் குறிப்பால் உணர்த்து கின்றன. இந்த அந்தணர்களின் குடும்பங்கள் திடீரென்று குடியேறியவர்கள் அல்லர். தொல்குடிகளாக இங்கு வாழ்பவர்கள். பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?

'அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்

டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை'

உடையவர்கள் என்கிறார் புலவர்.





அதாவது அறுநான்கு என்றால் இருபத்தி நாலு. அறுநான்கு இரட்டித்தால் நாற்பத்தி எட்டு. வாழ்வின் இளமைக்காலமே மிகக் குறைவு. சிறுவயதிலேயே அந்தணர்கள் உபவீதம் தரித்துக் கல்வி பயில குருகுல வாசம் சென்றுவிடுவார்கள். அந்தக் கல்வியை முழுமையாகக் கற்று நல்ல ஒழுக்கங்களைப் பயின்று பிரம்மச்சர்யம் காப்பார்கள். இதற்கு நாற்பத்தி எட்டு ஆண்டுகள் ஆகிவிடுமாம். அப்படி, உலக நன்மைக்காக நாற்பத்தி எட்டு ஆண்டுகள் வேதம் ஓதுதலையும் வேள்வி செய்தலையும் கடைப்பிடிக்கும் குணசீலர்களாக இவர்கள் விளங்கினார்கள் என்கிறார் புலவர்.

சரி, அந்தணர்களின் செல்வம் எது தெரியுமா?



மந்திரங்களில் ஆறெழுத்து மந்திரம் மிகவும் சிறப்புமிக்கது. பிரணவத்தின் விரிவாக வருவது. 'ஓரெழுத்தை ஆறெழுத்தாய் ஓதுவித்த பெருமானே' என்று அருணகிரியார் பாடுகிறார்.

'மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து'

அவர்கள் காத்துவரும் மூன்றுவகை அக்னிகளே அவர்களின் செல்வங்கள். ஒரு அக்னி, வேதத்தை வழங்க, மற்றொன்று, தேவர்களுக்கு தட்சிணை கொடுக்க, மூன்றாவது பூலோக நன்மைக்கான பொருள்களை வேண்ட...

தங்கள் வாழ்வின் தேவைகள் அனைத்தையும் தங்களின் வேள்விகள் மூலமே பெற முடியும் என்னும் நம்பிக்கை கொண்ட குடியாக ஏரகத்து அந்தணர்குடி இருந்துள்ளது.

சரி, இவர்களின் தெய்வம் யார்? அந்த தெய்வத்தை இவர்கள் எவ்வாறு தொழுகிறார்கள்?

'ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞ்
புலராக் காழகம் புலர வுடீஇ'

தங்களின் மார்பில் ஒன்பது என்னும் எண்ணிக்கையில் வருமாறு முப்புரிநூல் அணிந்தவர்கள், பொழுது புலரும் முன்னரே நீராடி அந்த ஈர ஆடையோடு அவன் சந்நிதிக்கு வந்து வழிபடுகிறார்கள்.

'உச்சிக் கூப்பிய தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்தி'

இவர்கள் தங்களின் இறைவனின் சந்நிதிக்கு முன்வந்து நிற்கிறார்கள். அவர்களின் கரங்கள்

தலைக்குமேல் உச்சியில் கூப்பியபடி இருக்கிறது. அவர்கள் நாவோ முருகனின் புகழைப் பாடிக்கொண்டிருக்கிறது. ஆறு எழுத்து மந்திரத்தை தங்களுக்குள் உபதேசமாகப் பெற்று தங்களின் நாக்கு புரளுமாறு அதனை உச்சாடனம் செய்கிறார்கள். பின்பு தங்களின் கரங்களில் நறுமணம் கமழும் மலர்களை ஏந்தியிருந்து வழிபடுகிறார்கள் என்கிறது திருமுருகாற்றுப்படை.

மந்திரங்களில் ஆறெழுத்து மந்திரம் மிகவும் சிறப்புமிக்கது. பிரணவத்தின் விரிவாக வருவது. ‘ஓரெழுத்தை ஆறெழுத்தாய் ஓதுவித்த பெருமானே’ என்று அருணகிரியார் பாடுகிறார். சரவணபவ என்பார் சிலர். நச்சினார்க்கினியரோ, ‘நமோ குமாராய’ என்பார். இதனைக் குறிப்பிடும் உ.வே.சா அவர்கள் ‘நமக் குமராய’ என்று இலக்கண சுத்தமாக எழுதுகிறார்.

நம சிவாய, நமோ நாராயணாய என்னும் பஞ்சாட்சர, அஷ்டாட்சர மந்திரம்போல் இன்று பெரும்பாலானவர்கள் அறியாத ‘நமஹ’ என்னும் ஒலியோடு கூடிய குமார ஷடாக்ஷர மந்திர உபதேசமும் இருந்திருக்கிறது என்று எடுத்துரைக்கிறார் கி.வா.ஜ. இங்கு அந்தணர்கள், முருகப்பெருமான் மீதான பல துதிகளையும் பாடிப் பின்பு ஆறெழுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்கிறார்கள்.

‘பெரிதுவந் தேரகத் துறைதலு முரிய னதாஅன்று.’

இப்படி அந்தணர் பெருமக்கள் தங்கள் வாழ்வைத் தூய்மையாகக் கடைப்பிடித்து அறத்தின் வழி நின்று தன்னை வாயாரப் போற்றும் இந்த ஏரகத் தலத்தில் அந்த முருகப் பெருமான் விரும்பி உறைகிறான் என்று இத்தலம் குறித்துப் பாடி முடிக்கிறார் நக்கீரர்.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பார்கள். இங்கே அந்தணர்கள் வேதங்களாலும் மந்திரங்களாலும் எப்போதும் முருகப்பெருமானை வழிபட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அந்த வேதத்தின் வடிவான அந்த சுவாமிநாதன் இந்தத் தலத்தில் விரும்பி உறைகிறான். இந்தத் தலத்தின் புராணத்தின் படி, பிரணவத்தின் பொருள் உபதேசம் செய்யவே முருகப்பெருமான் குருவாய் எழுந்தருளினார். அப்படிப்பட்ட தலத்தில் அவனை வேதத்தால் போற்றுவதுதானே முறை. வேதம் முழங்கும் இடங்களில் எல்லாம் அந்த வேலவன் குடியிருப்பான். அப்படி வேலவன் தானே விரும்பிக் குடியேறியிருக்கும்



தலம் என்னும் தனிச்சிறப்பு வாய்ந்தது திருஏரகம் என்கிறார் நக்கீரர்.

எது ஏரகம்?

இந்தத் தலத்தை சுவாமிமலை என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டபின் திருமுரு காற்றுப்படையில் பாடப்படும் திருஏரகம் இதுதானா என்ற கேள்வி சில ஆய்வாளர் களுக்குள்ளும் உண்டானது. நாஞ்சில் நாட்டில் உள்ள குமரக் கோயிலே திருஏரகம் என்று சொல்பவர்கள் உண்டு. நாஞ்சில் என்ற சொல்லே ஏரைக் குறிப்பது. எனவே அந்தத் தலம் ஏரகம் என்று அழைக்கப்பட்டது என்பார்கள். மேலும் இந்தத் தலத்தில் ஈர உடையுடன் இறைவனை வழிபடும் வழக்கம் இன்றும் உள்ளது. எனவே இதுவே திருஏரகம் என்பார்கள்.

ஆனால், முருகக்கடவுளின் தலங்களில் சந்தேகம் என்றால் திருப்புகழை நாடுவதே சிறந்தது என்கிறார் கி.வா.ஜ.

அருணகிரிப் பெருமான்,

‘ஏரக வெற்பெனும் அற்புத மிக்க
சுவாமிமலைப்பதி மெச்சிய சித்த’
‘ஏரக வெற்பெனும் அற்புத மிக்க
சுவாமிமலைப்பதி நிற்கும் இலகண’

‘தனி ஏரகத்தின் முருகோனே தருகா விரிக்கு வடபாரிசத்தில் சமர்வேல் எடுத்த பெருமாளே’ என்று பல்வேறு பாடல்களில் வரும் வரிகளைச் சுட்டி கி.வா.ஜ எடுத்துரைத்திருப்பது, சுவாமிமலையே திருஏரகம் என்பதை விளக்கப் போதுமானதாகும். ●

மோகனா

ஆண்டாளின் கிளி





இந்து புராணங்களில் வெவ்வேறு பறவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆண்டாள், மீனாட்சி, காமாட்சி ஆகியோர் தங்கள் கரங்களில் கிளியை வைத்துக்கொண்டு காட்சி தருகின்றனர். முருகப்பெருமான் மயிலையும் சேவலையும் கொண்டுள்ளார். மேலும் காகம், ஆந்தை, அன்னம், கருடன் என்று பல்வேறு வாகனங்கள் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனால், பார்க்கும்போதே நம்மைப் பரவசத்தில் ஆழ்த்தும் பறவை என்றால், அது ஆண்டாளின் கரத்தை அலங்கரிக்கும் கிளிதான் என்று உறுதியாகச் சொல்லிவிடலாம்.

ஆண்டாளின் உற்சவ மூர்த்தம் வீதியுலா வரும்போது மட்டும் ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தங்கக் கிளியுடன் அலங்கரிக் கப்பட்டிருந்தாலும், ஆலயத்துக் கருவறையுள் இருக்கும்போது பச்சிலை களாலும் மலர்களாலும் வடிவமைக்கப்பட்ட கிளியுடனே காட்சி தருவாள். ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யரான



ஆண்டாள் கரத்தை அலங்கரிக்கும் கிளியை வடிவமைக்கும் விதம்

முதலில் வாழைத்தண்டில் கிடைக்கும் நார்களிலிருந்து மெல்லிய நூல் போன்ற இழைகளாகப் பிரிக்கப்பட்டு கலைநயத்துடன் ஒரு கிளியின் உருவமாகச் செய்யப்படுகிறது. பிறகு அந்தக் கிளிவடிவம் மரவள்ளிக்கிழங்கு இலைகளால் மூடப்படும். மாதுளைப் பூ கொண்டு கிளிக்கு அலகும், வாலுக்கு வெள்ளை அரளி இலைகளும், இறகுகளுக்கு பச்சைப் பனையோலைகளும், கால்களுக்கு மூங்கில் குச்சிகளும் பயன்படுத்தப் படுகின்றன. பிறகு அவை செவ்வரளி மற்றும் நந்தியாவட்டை மலர்கள் கொண்டு பூச்செண்டு மாதிரி தயாரிக்கப்பட்டு, அதில் மூங்கில் கால்களுடன் இருக்கும் கிளி பொருத்தப்படுகிறது. தங்களின் நுட்பமான கலைத்திறனைக் கொண்டு மூங்கிலின் மேலடுக்கை லேசாகச் சீவி கிளியின் காதுகளுக்கு உயிர் கொடுக்கின்றனர். காக்காபொன் எனப்படும் மிளிரும் மைக்கா கற்களைக் கொண்டு கிளிக்குக் கண்கள் பொருத்தப்படுகின்றன.

ஸ்ரீராமாநுஜரால் நியமிக்கப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பரம்பரை பரம்பரையாக பச்சிலைகள் மற்றும் மலர்களைக் கொண்டு தினமும் புதிதாகத் தயாரிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குடும்பத்தினர் கடந்த எழுநூற்றைம்பது வருடங்களாக ஒரு தெய்விக சேவையாகவே இதைச் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளின் இடக் கரத்தில் காணப்படும் கிளி, ஸ்ரீரங்கத்தில் அவளுடைய வலக் கரத்தில் காணப்படுகிறது. காரணம், ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதரைத் திருமணம் செய்துகொண்ட பிறகு ஆண்டாள் அவருக்கு வலப்புறத்தில் நின்றிருப்பாள். அப்போது தன் இடக் கரத்தில் வைத்திருக்கும் கிளி தனக்கும் இறைவனுக்குமிடையே இருக்கக்கூடாது என்பதற்காகத் தன்னுடைய செல்லக் கிளியை வலக் கரத்தில் வைத்திருக்கிறாளாம். ஸ்ரீவில்லிபுத்தூரில் தன் இடக் கரத்தில் வைத்திருக்கும் கிளியை வலக் கரத்தினால் செல்லமாகத் தட்டிக்கொடுத்து முகஸ்துதி செய்து, ஸ்ரீரங்கநாதரிடம் தான் கொண்டிருக்கும் காதலுக்குத் தூதாக அனுப்புகிறாளாம். என்ன ஒரு ரசமான விளக்கம்!

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலயக் கருவறையில் இருக்கும் ஆண்டாளின் கிளி தினம்தோறும் புத்தம் புதிய இலைகளாலும் மலர்களாலும் செய்யப்படுகின்றன. ஸ்ரீரங்கத்தில் இருக்கும்போதோ தங்கத்தினால் செய்யப்பட்ட கிளியுடன் காணப்படுகிறாள். ரங்கநாதரைக் கல்யாணம் செய்துகொள்ள பரிவாரங்களுடன் ஆண்டாள் ஸ்ரீரங்கத்துக்கு வந்தபோது மணப்பெண்ணுக்கு பெற்றோர் பாரம்பர்யமாக வழங்கும் சீர்வரிசையான ஆடை, அணிகலன்களுடன் வந்தாள். அவற்றுள் தங்கத்தினால் செய்யப்பட்ட கிளியும் இருந்தது. இதன் காரணமாகவே அவள் ஸ்ரீரங்கத்தில் தங்கக் கிளியுடன் காட்சி தருகிறாள்.

நிவேதிதா | ஓவியம்: ஸ்யாம்





மேஜர் சோம்நாத் சர்மா



(பரம் வீர் சக்ரா விருது முதன்முதலில் பெற்ற பெருமைக்கு உரிய வீரரின் வீர காவியம்)

இந்திய ராணுவத்தின் மிக உயரிய விருதான பரம் வீர் சக்ரா விருதினை, முதன் முதலில் பெற்றவர் என்ற பெருமைக்கு உரியவர் மேஜர் சோம்நாத் சர்மா. இந்த வீர விருதை வடிவமைத்தவர் இவருடைய சகோதரரின் மாமியார் சாவித்திரி கனோல்கர் என்பது தற்செயலாக அமைந்த ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலைக்குப் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற முதல் யுத்தத்தில் வீர சாகசம் புரிந்து தன்னுடைய உயிரைத் தியாகம் செய்ததற்காக சோம்நாத் சர்மாவுக்கு இந்த வீர விருது வழங்கப்பட்டது.

இந்தியா விடுதலை பெற்ற இரண்டாவது மாதமான அக்டோபர் மாதம். பிரிட்டிஷாரின் சூழ்ச்சியின் காரணமாக இந்தியா - பாகிஸ்தான் என்று தேசம் இரண்டாகப் பிளவுபட்டிருந்த நேரம். பொதுவாக ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினை என்று வந்துவிட்டாலே ஏகப்பட்ட பிரச்னைகள் ஏற்பட்டுவிடும். அப்படியிருக்க, இரண்டாகப் பிரிக்கப்பட்ட நாடுகளுக்கிடையே பாகப்பிரிவினை என்று வந்துவிட்டால் ஏற்படும் விளைவுகளுக்குக் கேட்கவா வேண்டும்?

ஒவ்வொரு விஷயத்துக்கும் மிகப் பெரிய அளவில் விவாதங்களும் சர்ச்சைகளும் எழுந்தன. போதும் போதாதற்கு குடிமக்கள் பரிமாற்றத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் வேறு. மேலும், அதுவரை பிரிந்து கிடந்த சமஸ்தானங்களாலும் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டன. சமஸ்தான மன்னர்கள் சமரசத்துக்கு ஆங்கிலேயரிடம் ஆலோசனை கேட்டனர்.

போர் முனைக்கு அனுப்பாமல் விமான தளத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆனால், அந்தப் பொறுப்பு தான் அவருடைய வீரசாகசத்துக்கும் பின்னர்

அவர்களோ மன்னர்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறி ஒதுங்கிக்கொண்டனர்.

இந்நிலையில் இந்தியாவில் இருந்த சமஸ்தானங்களில் காஷ்மீரைத் தவிர அனைத்து சமஸ்தான மன்னர்களும் தங்கள் சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்துக்கொண்டனர். அப்போது காஷ்மீர் சமஸ்தானத்தின் மன்னராக இருந்தவர் மகாராஜா ஹரிசிங் என்பவர். அவருக்கு தன்னுடைய சமஸ்தானத்தை தனக்கு மட்டுமே உரிய தனி நாடாகக் கொண்டுவிடலாம் என்ற பேராசை. அதன் காரணமாகவே அவர் பல விளைவுகளைச் சந்திக்க நேரிட்டது.

தனித்து நிற்கும் காஷ்மீரை எப்படியும் கைப்பற்றிவிடவேண்டும் என்ற பேராசை கொண்டு பாகிஸ்தான் ராணுவம் காஷ்மீருக்குள் ஊடுருவியது. யுத்தமுறைகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு வன்முறையில் ஈடுபட்டார்கள். கொள்ளை, பாலியல் பலாத்காரம், தீவைப்பு என்று என்னென்ன அக்கிரமங்கள் இருக்கிறதோ அத்தனை அக்கிரமங்களையும் அரங்கேற்றினார்கள்.

பாகிஸ்தான் ராணுவத்தினரோ முசாராபாத் நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டதுடன், ஊரி நகரத்தையும் கைப்பற்றிக்கொண்டனர். மின்சார நிலையத்தை முற்றுகையிட்டு மின் தடையையும் ஏற்படுத்திவிட்டனர். ஆனால், மேற்கொண்டு முன்னேறாமல் சொத்துகளைக் கொள்ளையிடுவதிலேயே குறியாக இருந்துவிட்டனர்.

காஷ்மீர் மன்னர் ஹரிசிங்கிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குரங்கின் கையில் அகப்பட்டுக்கொண்ட பூமாலை போல் நம் சமஸ்தானத்தின் நிலை ஆகிவிட்டதே என்று கதிகலங்கி நின்றார். இக்கட்டான அந்தச் சூழ்நிலையில் அவருக்கு ஏதேனும் ஒரு முடிவை எடுத்தே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டது. வேறு வழியில்லாமல் தன்னுடைய சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

உடனே இந்திய ராணுவம் களத்தில் இறங்கியது. ஸ்ரீநகர் விமான தளத்தை முதலில் கைப்பற்றிவிட வேண்டும். அப்போதுதான் விமானங்கள் மூலம் போதுமான ஆயுதங்களுடன் வீரர்களை விமானத்தில் அனுப்பி வைக்க வசதியாக இருக்கும்.

ஸ்ரீநகர் விமான தளத்தை கைப்பற்றும் படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்தான் மேஜர் சோம்நாத் சர்மா.

****

மேஜர் சோம்நாத்தின் குடும்பமே ராணுவத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட குடும்பம். ராணுவத்தில் டாக்டராக இருந்த அமர்நாத் சர்மா என்பவருக்கும் லீலாதேவி என்பவருக்கும் 1923-ம் வருடம் ஜனவரி 31-ம் தேதி மகனாகப் பிறந்தார். நைனிடாலில் பிரசித்தி பெற்றிருந்த ஷெர்வுட் கல்லூரியில் தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் டேராடூனில் இருந்த வேல்ஸ் இளவரசர் ராணுவக் கல்லூரியிலும் தொடர்ந்து ராயல் ராணுவக் கல்லூரியிலும் சேர்ந்து படித்தார். சிறுவயதிலேயே அவருடைய பாட்டனார் அவருக்கு பகவத்கீதையை உபதேசித்ததில் இருந்து கிருஷ்ணனிடமும் அர்ஜுனனிடமும் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.

ராணுவக் கல்லூரியில் படித்து முடித்த பின்னர் 1942-ம் வருடம் பிப்ரவரி 22-ம் தேதி அப்போதைய பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தின் ஹைதராபாத் ரெஜிமெண்டின் 19-வது படைப்பிரிவின் 8-வது பட்டாலியனில் நியமன உத்தரவு பெற்றார். (இந்தப் படைப்பிரிவுதான்



ஒப்படைக்கிறாரே என்று நினைத்துத் தனக்குள் புழுங்கினார் சோம்நாத். பரம் வீர் சக்ரா விருதை முதலில் பெறுவதற்கும் காரணமாக இருந்தது.



பின்னாளில் இந்திய ராணுவத்தின் குமோனி படைப்பிரிவின் 4-வது ரெஜிமெண்ட் என்று மாற்றம் பெற்றது). இந்தப் படைப் பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது அவருக்கு வயது 20 கூட நிறைவு பெறவில்லை.

அப்போது இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை. சோம்நாத் சர்மாவின் படைப்பிரிவும் அந்த யுத்தத்தில் ஈடுபடவேண்டி இருந்தது. களத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு அவர் தன் தாயாரிடம் விடைபெறச் சென்றார். இருபது வயதுகூட நிரம்பாத தன் மகனை களத்துக்கு அனுப்ப அந்தத் தாய் சற்றுத் தயங்கியபோது, 'தன் பெயர் எழுதப்பட்டிருக்கும் தோட்டாவைத் தவிர வேறு தோட்டாவினால் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது' என்று நம்பிக்கை வார்த்தைகளைக் கூறித் தேற்றினார்.

ஒரு படைப்பிரிவின் தலைவனுக்கு அழகு, மரபுகளைப் பெரிதுபடுத்தாமல் ஆபத்தான நிலையில் இருக்கும் தன்னுடைய வீரர்களைக் காப்பாற்றுவதுதான். அப்படித்தான் ஒருமுறை யுத்தத்தில் காயம் பட்ட தன்னுடைய ஆர்டர்லியை உயரதிகாரியின் உத்தரவையும் மீறித் தன்னுடைய தோளில் சுமந்து சென்று உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்கச் செய்து காப்பாற்றினார். இதன் காரணமாக அவருடைய படைப்பிரிவில் இருந்த வீரர்கள் அவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

அப்படி தன்னுடைய வீரர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்த சோம்நாத் சர்மாவின் படைப்பிரிவுதான் ஸ்ரீநகர் விமான நிலையத்தைக் கைப்பற்ற அனுப்பப்பட்டது. சோம்நாத் சர்மாவின் இடது கை முறிந்திருந்த நிலையில் அவரை யுத்தகளத்துக்கு அனுப்ப உயரதிகாரி விரும்பவில்லை. ஆனாலும், சோம்நாத் பிடிவாதமாக அனுமதி பெற்று படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்று 1947-ம் வருடம் அக்டோபர் 31-ம் தேதி 70 வீரர்களுடன் போர்முனைக்குப் புறப்பட்டார்.

கை ஒடிந்த நிலையில் இருந்த சோம்நாத்தை போர்முனைக்கு அனுப்ப விரும்பாத அவருடைய உயரதிகாரி, விமான தளத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அவருடைய வீரர்களுடன் மேற்கொள்ளும்படி உத்தரவிட்டார். போர் முனைக்கு அனுப்பாமல் விமான தளத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறாரே என்று நினைத்துத் தனக்குள் புழுங்கினார் சோம்நாத். ஆனால், அந்தப் பொறுப்பு தான் அவருடைய வீரசாகசத்துக்கும் பின்னர் பரம் வீர் சக்ரா விருதை முதன்முதலில் பெறுவதற்கும் காரணமாக இருந்தது.

காஷ்மீர் மன்னரின் ஒரே விமானத்துக்காக இருந்த விமான தளம் அது. பெரிய விமானங்கள் இறங்க முடியாது. இறக்க முயற்சி செய்வது மிகவும் ஆபத்தானதும்கூட. ஆனாலும், இந்திய வீரர்கள் போர்க்கருவிகளை ஏற்றிக்கொண்டு ஸ்ரீநகருக்கு வந்த வண்ணம் இருந்தனர். விமான தளத்தில் அசம்பாவிதம் நடப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. எனவே, சோம்நாத் மறுபடியும் தன் அதிகாரியிடம் போர்முனைக்குச் செல்ல அனுமதி கேட்டும் மறுக்கப்பட்ட நிலை. அந்த நிலையில்தான் அந்த அசம்பாவிதம் நடந்தேவிட்டது.

ஆம். தொலைவில் ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்கள் பயங்கர ஆயுதங்களுடன் எதிர்ப்பட்டனர். வெறும் 70 வீரர்களை மட்டுமே வைத்துக்கொண்டிருந்த சோம்நாத், முதலில் தற்காப்புக்கான வியூகம் அமைக்கிறார். விமான தளம் போர்க் களமாயிற்று. எதிரி வீரர்கள் தாக்குதல் தொடுக்க, அவர்களுக்கு இந்திய வீரர்கள் பதிலடி கொடுக்க, சோம்நாத் ஒடிந்த கையுடனே தன்னுடைய வீரர்களின் துப்பாக்கிகளுக்கு குண்டுகளை நிரப்பிக்கொண்டே அவர்களை உற்சாகப்படுத்தியபடி இருந்தார். இருக்கும் துருப்புகளை வைத்துக்கொண்டு இரவுப் பொழுதை சமாளித்துவிட்டால் காலையில் அதிக அளவில் படைகள் வந்துவிடும் என்று நினைத்தவர் கைவசமுள்ள ஆயுதங்களையும் தோட்டாக்களையும் திட்டமிட்டுப் பயன் படுத்தினார். சோம்நாத்தின் தற்காப்பு வியூகம் எதிரிகளைச் சோர்வடையச் செய்துவிட்டது.

காலைப் பொழுதில் இந்திய வீரர்களுக்குக் காத்திருந்தது மாபெரும் அதிர்ச்சி. ஆம், அவர்களுடைய பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய சோம்நாத் சர்மா குண்டுகள் துளைத்த நிலையில் மண்ணில் சாய்ந்திருந்தார்.

அவ்வளவுதான். நம்முடைய வீரர்களுக்கு ஏற்பட்ட சோகத்தையும் ஆவேசத்தையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ‘மேஜர் ஐயாவைக் கொன்றவர்களை அடியோடு வீழ்த்துவோம்’ என்று வீராவேசத்துடன் எதிரிகளைத் தாக்கினர். ஒரு வீரருக்கு ஏழு பகைவர்கள் என்ற இலக்குடன் வீறு கொண்டு எழுந்த இந்திய வீரர்களின் ஆவேசத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். தன்னுடைய உயிர்த் தியாகத்தால் விமான தளத்தை மட்டுமில்லாமல், காஷ்மீரின் வரலாற்றையும் மாற்றிய மேஜர் சோம்நாத் சர்மாவின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் அவருக்கு ராணுவத்தின் உயரிய விருதான பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

புதுடில்லி தேசிய போர் நினைவுச் சின்னத்தில் பரம் வீர் சக்ரா விருது பெற்றவர்களுக்கான ’பரம் யோதா ஸ்தல்’ என்ற இடத்தில் மேஜர் சோம்நாத் சர்மாவின் திருவுருவச் சிலை கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது ●













சக்தி சுகர்ஸ் தலைவர் ம.மாணிக்கம் அவர்களின் பல வருட ஆராய்ச்சியின் விளைவாக, பாரம்பர்ய மருத்துவமும் நவீன மருத்துவமும் ஒருங்கிணைந்த மருத்துவ மையமாக, பொள்ளாச்சியில் 'மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்' என்ற பெயரில் ஒரு மருத்துவ மையத்தை நாச்சிமுத்து பாலிடெக்னிக் – டாக்டர்.மகாலிங்கம் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் கடந்த 2018-ம் வருடம் தொடங்கினார். இந்த மருத்துவ மையம் பற்றியும் அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றியும் ஓம்சக்தி ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத இதழ்களில் விரிவான கட்டுரை வெளியாகி உள்ளது.

சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்பு பொள்ளாச்சியில் தொடங்கப்பட்ட 'மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்' கின் புதிய கிளையை, கோவை வரதராஜபுரம் கஸ்தூர்பா – காந்தி அறக்கட்டளை வளாகத்தில், மகாலிங்கம் மாரியம்மாள் அறக்கட்டளை சார்பில் 27.10.2021 அன்று சக்தி சுகர்ஸ் தலைவர் ம.மாணிக்கம் தலைமையில், கோவை பாரதிய வித்யாபவன் தலைவர் டாக்டர் பி. கே.கிருஷ்ணராஜ வாணவராயர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்.

டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ வாணவராயர், “சிந்திப்பவர்கள் சிலர்; அதிலும் வித்தியாசமாகச் சிந்திப்பவர்கள் வெகு சிலர்; சிந்தனையைச் செயல்படுத்துபவர்கள் மிக மிகச் சிலரே. அந்த மிகச் சிலரில் ஒருவர்தான் மாணிக்கம். அவருடைய வித்தியாசமான சிந்தனையில் தோன்றிய இந்த மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக் பல இடங்களிலும் கிளைகளைத் தொடங்கி வெற்றியடைய வேண்டும்” என்று தன்னுடைய சிறப்புரையில் சிலாகித்துப் பேசினார்.

மிராக்கிள் வெல்னெஸ் கிளினிக்கின் தலைமை மருத்துவர் டாக்டர் அருள், அங்கு அளிக்கப்படும் சிகிச்சை முறை குறித்து விளக்கியதுடன், கோவையில் தொடங்கப்பட்டுள்ள கிளையில் கோவை, திருப்பூர்,







கோவையிலும் ஓர் அற்புதம் ‘மிராக்கிள் வெல்னஸ் கிளினிக்’





ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சிறப்பு வாய்ந்த இந்தச் சிகிச்சையைப் பெறலாம் என்று குறிப்பிட்டவர் தொடர்ந்து ஏபிடி நிறுவன தயாரிப்பான மிராக்கிள் பானம் கொரோனா காலத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியது பற்றியும் குறிப்பிட்டார். இந்த மிராக்கிள் பானம் பற்றியும் ஓம்சக்தி மே மற்றும் ஜூலை இதழ்களில் விரிவாக வெளிவந்துள்ளது.

சக்தி பைனான்ஸ் துணைத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ம.பாலசுப்பிரமணியம், ஏபிடி நிர்வாக இயக்குநர் மா.ஹரிஹரசுதன், இ.எஸ்.ஐ. மருத்துவமனை டீன் டாக்டர் ரவீந்திரன் மற்றும் சக்தி மற்றும் ஏபிடி குழுங்களின் உயர் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் கலந்துகொண்ட இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை மக்கள் தொடர்பு மேலாளர் ப.மகேந்திரன் சிறப்பாகச் செய்திருந்ததுடன் விழா நிறைவில் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

-சக்தி காமராஜ்







வெளிமாநிலக் கோயில்கள்


மூன்று நதிகளின் சங்கமத் தலத்தில் அருளும் இறைவன்!

ஒரு சிவலிங்கத்தில் பன்னிரண்டு சிவலிங்கங்கள் உள்ள துவாதச சிவலிங்க மூர்த்தம் அமைந்திருக்கும் ஓர் ஆலயம் ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம் அனிமேளா கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில்.

மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி தவழும் வாகினி, கிழக்கில் இருந்து மேற்கு தோன்றி தவழும் பாபாக்னி, பவானி ஆகிய மூன்று ஆறுகள் சங்கமிக்கும் தலம் என்பதால் இறைவன் சங்கமேஸ்வரர் என்ற திருப்பெயர் கொண்டு அருள்புரியும் ஆலயம் அது!

கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் ஆலயத்தின் ராஜகோபுரம் ஐந்து நிலைகளுடனும் ஏழு கலசங்களுடனும் சந்தன நிறத்தில் மிக அழகாக அமைந்திருக்கிறது. கோபுரத்தில் ஒவ்வொரு நிலையிலும் துவாரபாலகர்கள் காவலிருக்க, கோபுரம் முழுவதும் சிவபெருமானின் தட்சிணாமூர்த்தி வீரபத்திரர், நடராஜர் என்று சிவனாரின் எண்ணற்ற சிற்பங்கள் சுதைவடிவில் வண்ணமயமாக இருப்பதைக் காணலாம்.

ஆலயத்துக்குள் செல்கிறோம். முதலில் ஒரு கொடிமரம் அமைந்துள்ளது. இந்தக் கொடிமரத்தின் உச்சியில் ஒரு பச்சைக்கிளி காணப்படுகிறது. இந்தக் கொடி மரம் மூழ்கும் அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து பச்சைக்கிளியை அந்தத் தண்ணீர்





ஸ்பரிசித்தால் கலியுகம் முடிந்துவிடும் என்று 'காலக் ஞான பிரம்மம்' என்ற நூலில் கூறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கொடிமரத்தை நமஸ்கரித்துவிட்டு, தொடர்ந்து சென்றால் தட்டை ஓடுகளால் வேயப்பட்ட ஒரு மண்டபத்தில் மிகப் பெரிய அளவில் நந்திதேவர் சந்தன நிற மேனியராகக் காட்சி தருகிறார். பிராகாரம் வலம் வருகிறோம்.

மிகத் தூய்மையாகப் பளிச்சிடும் பிராகாரத்தை ஒட்டியுள்ள மதில்சுவர்களும் செங்காவியும் வெண்சுண்ணாம்பும் பூசப்பட்டு ஆலயத்தின் தூய்மைக்கு மேலும் தூய்மை சேர்க்கின்றன.

பிராகாரத்தில் ஈசனின் கருவறை விமானம் செந்நிறத்தில் சதுர வடிவில் அமைந்திருக்கும் அடித்தளத்தின்மீது உயர்ந்து காட்சி தருகிறது. விஜயநகர மன்னர்கள் காலத்திய கட்டடக் கலை பாணியில் அமைந்திருக்கிறது ஆலயம். விமானத்தில் சிவபெருமானின் பல திருவடிவங்கள் சுதைவடிவில் காட்சி தருவதைக் காணலாம். தொடர்ந்து ஆலயத்தின் மற்றொரு பகுதியில் அமைந்திருக்கும் கோபுரத்தைக் காணலாம். ஐந்து நிலைகளும் ஐந்து கலசங்களுமாக தூய வெண்மை நிறத்தில் ஆலயத்தின் கம்பீரத் தொன்மையை எடுத்துச் சொல்வதைப் போல் காட்சி தருகிறது.

ஆலயத்துக்குள் ஒரு புற்று உள்ளது. மஞ்சள், குங்குமம் பூசி சாமந்தி மாலை அணிவித்துக் காட்சி தரும் இந்தப் புற்றுக்குள் இருக்கும் பாம்பு தினமும் இரவு வேளையில் சங்கமேஸ்வரரை வழி படுவதாகச் சொல்கிறார்கள்.

பிராகாரம் வலம் வந்து சந்நிதிகளுக்குச் செல்கிறோம். முகப்பு மண்டபத்தின் மீது விநாயகருடன் சிவபெருமான் பார்வதி தேவி ஆகியோர் வண்ணச் சுதைச் சிற்பமாகக் காட்சி தருவதைப் பார்த்தபடி முகப்பு மண்டபத்துக்குள் செல்கிறோம். மண்டபத்தைத் தாங்கி நிற்கும் கருங்கல் தூண்கள் ஏதோ வர்ண ஜாலத்தை நிகழ்த்துவதுபோல் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று பல வண்ணங்கள் பூசப்பட்டு அந்த வண்ணங்களை மண்டபம் முழுவதும் பிரதிபலிக்கிறது.

ஐயன் சங்கமேஸ்வரரை தரிசிப்பதற்கு முன்பாக அம்பிகை பிரமராம்பிகையை தரிசிக்கச் செல்கி றோம். கருவறையில் அம்பிகை ஆரஞ்சு வண்ணப் பட்டினால் ஆன வஸ்திரம் உடுத்தி, நறுமணம் கமழும் மலர்மாலைகள் அணிந்து மஞ்சள் காப்பு திருமுகத்துடன் மங்கலகரமாக எழிலார்ந்த கோலத்தில் காட்சி அளித்த அம்பிகையை தரிசித்தபோது, அம்பிகையை தரிசிப்பவர்களின் வாழ்க்கையில் என்றென்றும் சகல ஐஸ்வர்யங் களும் நிறைந்திருக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அம்பிகையின் இடப் புறத்தில் திரிசூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மலர்களாலும்

வளையல்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அம்பிகையின் திருவடியின் கீழ் அம்பிகையின் அருவுருவ வடிவமான மகாமேரு கல்லில் வடித்து பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அருகிலேயே பஞ்சலோகத்தினால் ஆன மற்றொரு மகாமேருவும் இருப்பதைக் காண்கிறோம். அம்பிகையின் சந்நிதிக்கு வெளியில் ஒரு பித்தளை வட்டிலில் மற்றொரு சிறிய பஞ்சலோக மகாமேருவும், சிறிய நாக வடிவங்களும் வைத்திருப்பதையும் காண்கிறோம். பக்தர்கள் குங்கும அர்ச்சனை செய்வதற்காக வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

நவகிரக சந்நிதியில் நவகிரகங்களுக்கு பக்தர்கள் தங்கள் கைகளினாலேயே அபிஷேகம் செய்கிறார்கள். இந்தக் கோயிலில் அனைத்து தெய்வங்களுக்கும் பக்தர்களே தங்கள் கைகளினால் அபிஷேக ஆராதனைகள் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

ஐயனை தரிசிக்கச் செல்கிறோம். ஐயனின் சந்நிதிக்கு முன்புள்ள மண்டப விதானத்தில் அஷ்டதிக் பாலர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றுக்குக் கீழே காணப்படும் கல்லின் மீது அமர்ந்து ரிஷிகள் யாகம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. வீட்டில் ஏதேனும் ஒரு பொருள் காணாமல் போனாலோ அல்லது திருட்டுப் போனாலோ இங்கு வந்து அஷ்டதிக் பாலகர்களின் உருவத்துக்குக் கீழே விளக்கேற்றி பிரார்த்தித்துக்கொண்டால், காணாமல் போன பொருள் எங்கே இருக்கிறது என்று தெரிந்துவிடும் என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்கள் பக்தர்கள்.


ஐயனின் கருவறையின் ஒருபுறம் விநாயகப் பெருமான், மற்றொருபுறம் பின்னணியில் மயில் இருக்க, நின்ற கோலத்தில் காட்சி தரும் முருகப்பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். இந்தக் கோயிலின் க்ஷேத்திரபாலகர் இவர்தான் என்றும், இவரே பாம்பின் வடிவத்தில் கோயிலை பாதுகாக்கிறார் என்றும் பக்தர்கள் நம்புகிறார்கள்.


சந்நிதி வாயில் முகப்பில் இருபுறங்களிலும் யானைகள் இருக்க, அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள் கஜலட்சுமி. ஐயனின் சந்நிதியில், தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்வதற்கு பக்தர்கள் காத்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதற்கு முன்பாக அவர்களுக்கு ஐயனின் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படுகிறது. தீர்த்தம் பருகி தங்களின் உடலையும் மனதையும் தூய்மைப் படுத்திக்கொண்ட பக்தர்கள், ஐயன் சங்கமேஸ்வரருக்கு தங்கள் கைகளினாலேயே அபிஷேகம் செய்யத் தொடங்குகிறார்கள். அபிஷேகத்துக்கு முன்பாக அலங்காரம் எதுவுமின்றி காணப்பட்ட சிவலிங்கத் திருமேனியின் உச்சியில் இரண்டு பள்ளங்கள் அருகருகில் காணப்படுகின்றன.

அதற்கான காரணம்...

சிவ பார்வதி திருமணத்தின்போது சமநிலை தவறிய பூமியைச் சமன்படுத்த தென்திசைக்கு புறப்பட்ட அகத்தியர், பல இடங்களில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். அப்படி அவர் வாகினி, பாபாக்னி, பவானி ஆகிய மூன்று நதிகள் சங்கமிக்கும் இந்தப் புனிதத் தலத்துக்கு வந்தபோது, அவருக்கு இறைவன் சுயம்புலிங்கமாக காட்சி தந்தார். அவரை











இந்தத் தலத்தில் பிரதிஷ்டை செய்து சிறிது காலம் வழிபட்ட அகத்தியர் பின்னர் தம் தென்திசை யாத்திரையைத் தொடர்ந்தார். அவருக்குப் பிறகு அத்திரி, பரத்வாஜர், ஜமதக்னி, கௌதமர், காசியபர், வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகிய சப்தரிஷிகள் வழிபட்டனர். சிவலிங்கம் பன்னிரண்டு கோடுகளால் பிரிக்கப்பட்டிருப்பதால் இந்த மூர்த்தம் துவாதச சிவலிங்க சுயம்பு மூர்த்தம் என்று சிறப்பித்து சொல்லப்படுகிறது. இவரை தரிசித்தால் பன்னிரண்டு சிவலிங்க மூர்த்தங்களை தரிசித்த புண்ணியம் கிடைக்கும் என்கிறார்கள்.

காலப்போக்கில் சிவலிங்கம் மண்ணில் புதையுண்டு புற்று தோன்றிவிட்டது. பிற்காலத்தில் சூரியவம்சத்தில் வந்த மன்னர் ஒருவர், மூன்று நதிகள் சங்கமிப்பதால் சங்கமேஸ்வரம் என்ற பெயர் பெற்ற இந்தப் பகுதியை ஆண்டு வந்தார். அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவன் புற்று இருந்த பக்கமாக மேய்ச்சலுக்கு மாடுகளை ஓட்டி வருவது வழக்கம். அவற்றுள் ஒரு மாடு மட்டும் பால் கொடுப்பதே இல்லை. அதற்கான காரணம் தெரிந்துகொள்ள ஒருநாள் அவன் அந்த மாட்டின் பின்னால் சென்றான். மாடு ஒரு புற்றில் பால் சொரிவதைக் கண்டு கோபத்துடன் மாட்டை அடிக்கச் சென்றான். அவனிடமிருந்து தப்பிக்க நினைத்த வேகத்தில் அந்தப் பசு புற்றின் மீது காலை வைக்க, உள்ளே புதைந்திருந்த சிவலிங்கத்தின் திருமுடியில் பட்டுவிட்டது. அதன் காரணமாகவே சிவலிங்க மூர்த்தத்தின் உச்சியில் இரண்டு பள்ளங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு பள்ளத்தில் பசுவின் கோமியம் போன்ற நிறத்தில் நீர் தேங்குவதாகவும், நள்ளிரவில் இறைவனை பூஜிக்க வரும் பாம்பு அந்த நீரைப் பருகுவதாகவும் ஓர் ஐதிகம் நிலவுகிறது. பின்னர் இந்த விவரம் மன்னருக்குத் தெரிய வந்து, ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்தார் என்கிறது தலவரலாறு.

பக்தர்களின் பக்திபூர்வமான அபிஷேகத்தை மனம் உகந்து ஏற்று அவர்களைப் பரவசப்படுத்திய சங்கமேஸ்வர பெருமான், நாகாபரணம் தரித்து, சர்வ அலங்காரங்களுடன் திருக்காட்சி அருள்வதை தரிசிக்கிறோம். மூன்று புனித நதிகள் சங்கமிக்கும் தலத்தில் எழுந்தருளி தரிசிப்பவர்களுக்கு ஏழேழு தலைமுறைகளுக்கும் அளவற்ற நன்மைகளை அருளும் சங்கமேஸ்வரரின் ஆலயத்துக்கு வந்து பக்திபூர்வமாக வழிபடுபவர்களுக்கு, அவர்கள் இழந்த நிம்மதியும், தொலைத்த பொருளும் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. எல்லோருமே தரிசிக்கவேண்டிய அற்புத ஆலயம் இது என்றால் முற்றிலும் உண்மைதான்.



புவனா தியாகராஜன் | ஓவியம்: ஸ்யாம்

மாதர்குலத் திலகம்


மாங்கை



அரச பதவி என்பது சுகபோகங்கள் அனைத்தையும் தரும் என்று நம்மில் பலரும் நினைத்துக்கொண் டிருக்கிறோம். ஆனால், அது முற்றிலும் தவறான அபிப்பிராயம். அவர்களுக்குத் தான் எத்தனை எத்தனை பொறுப்புகள்? அந்நியர்களின் படையெடுப்புகளைச் சமாளிக்கவேண்டும்; மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்; நீதியை நிலை நாட்டவேண்டும்; மதம் சார்ந்த கலவரங்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எப்போதும் தேசத்தைப் பற்றிய சிந்தனையிலேயே அரசர்களின் ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் நகரும். ஆனால், பட்டத்தரசிகளின் வாழ்க்கை முறையோ கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் நிறைந்தது. யுத்த மேகங்கள் சூழும்போதுதான் அவர்களின் மனம் கவலையில் மூழ்கும். மற்ற நேரங்களில் எல்லாம் அவர்களுக்குக் குறையேதுமில்லை.

ஒரு நாட்டில் மதக்கலவரங்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய மாபெரும் பொறுப்பில் இருக்கும் மன்னனே மதம் மாறிச்சென்றால்? அந்த தேசத்தில் கலவரங்களுக்கு பஞ்சமே இருக்காது. அப்படித்தான் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுக்கும் ஒரு சோதனை ஏற்பட்டது. பொ.ஆ. 640 முதல் 670 வரை பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கூன்பாண்டியன் என்னும் நின்றசீர் நெடுமாறன், தாய்ச் சமயமான சைவம் மறுத்து புறச்

யர்க்கரசி



சமயமான சமணம் தழுவி இருந்தார். மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி என்பதற்கேற்ப பெரும்பாலான மக்களும் சமணம் சார்ந்துவிட்டனர். சைவம் தழைத்து வளர்ந்த நாட்டில், திருக்கோயில்களில் எல்லாம் வேதங்களும் திருமுறைகளும் ஒலித்து வந்த ஆன்மிக பூமியில் சைவம் புறந்தள்ளப்பட்டது; மக்களின் மனங்களில் இருள் கவ்வியது.

ஆனால், ஈசன் திருவிளையாடல்கள் நிகழ்த்திய அருள்பூமியில் புறச் சமயத்தின் ஆதிக்கம் ஓங்குவதாவது?

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் சிக்குண்டு கிடக்கும் பாண்டிய தேசத்தில் சைவம் தழைத்தோங்கச் செய்யவும், மன்னரின் மனதை மாற்றவும் சிவனருளாலே ஒரு மாதரசி தோன்றினார். அவரே, ’மாதர்குல திலகம் மங்கையர்க்கரசி மங்கையர்க்குத் தனி அரசி எங்கள்



தெய்வம் வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கைமானி செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள் தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை' என்றெல்லாம் சேக்கிழார் பெருமான் போற்றிப் புகழ்ந்திருக்கும் மானி என்னும் பெயர் கொண்ட மங்கையர்க்கரசி. இளமைப் பருவம் முதலே சைவ நெறி பிறழாது சமயப்பற்று மிக்கவராக இருந்தார்.

சோழன் மகளாகப் பிறந்த மானி திருமணப்பருவம் அடைந்ததும் நின்றசீர் நெடுமாறனுடன் திருமணம் செய்து வைத்தார் மானியின் தந்தை மணிமுடிச் சோழன்.

மன்னர் மதம் மாறிவிட்டதை மங்கையர்க் கரசியாரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. புறச் சமயம் சார்ந்து சைவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயலானது அவருடைய மனதை தணலெனச் சுட்டது. இந்த நிலையை எப்படி மாற்றுவது என்று புரியாமல் தவியாய்த்



தவித்தார். கணவன் வழியில் தானும் செல்லாமல், 'நெறி தவறிச் செல்லும் கணவனை மீட்டு நெறியுடன் வாழ வழி செய்வதே ஒரு மனைவியின் ஆகச் சிறந்த பண்பு என்பதை உணர்ந்திருந்த மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறை யாருடன் கலந்து ஆலோசித்தார்.

அப்போதுதான் உமையவள் ஞானப்பால் உகந்து ஊட்டும் பேற்றினைப் பெற்ற ஞானக்குழந்தை திருஞானசம்பந்தர் பற்றி அவர்களுக்குத் தெரிய வந்தது. அவரை மதுரைக்கு வரவேற்று மன்னனின் மனதை மாற்றுவது என்று முடிவெடுத்தனர் அரசியும், அமைச்சரும்.

அதன்படியே மதுரைக்கு விஜயம் செய்த திருஞானசம்பந்தரை தரிசித்த உடனே மங்கையர்க்கரசியாரின் மனதில் தாய்மை உணர்வு பெருக்கெடுத்து மார்பில் பால் சுரந்ததாம். இந்த நிலையை 'இலை படர்ந்த பொய்கையிடத்து அழுதல் கண்டு முலை சுரந்த அன்னையோ முன் நின் நிலையுணர்ந்து கொங்கை சுரந்த அருட்கோமகளோ' என்று வியந்து போற்றியுள்ளார்.

சம்பந்தருடைய விஜயத்தின் நோக்கத்தை அறிந்த புறச் சமயத்தவர்கள் அதை முறியடித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டு திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைத்தனர். ஆனால், அந்தத் தீயோ மன்னர் நின்றசீர் நெடுமாறனுக்கு வெப்பு நோயாக பீடித்தது. சமணர்கள் எத்தனையோ முயற்சி செய்தும் மன்னரின் வெப்புநோய் நீங்கவில்லை.

அரசியும் அமைச்சரும் சம்பந்தரிடம் சென்று மன்னரைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார்கள். சம்பந்தரும் சிவபெருமானை பிரார்த்தித்துக்கொண்டு, 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார். பாடியபடியே மன்னரின் உடலில் திருவெண்ணீற்றைப் பூச வெப்புநோய் நீங்கியது. மன்னர் மனம் மாறினார்; மாமதுரை நகரில் மறுபடியும் சைவம் தழைத்துச் சிறந்தது.

தன் கணவனுடைய மனதை மாற்றிய மாதரசி மங்கையர்க்கரசி, வழி தவறிப் போகும் கணவனைக் கண்டும் காணாமல் இருக்கும் பெண்களுக்கு தன்னுடைய வாழ்க்கையின் மூலம் ஒரு படிப்பினையை உணர்த்தியிருக்கிறார். அதை உணர்ந்து வழி தவறிச் செல்லும் தங்கள் கணவர்களை நல்வழிப்படுத்த பெண்கள் முனைந்து செயல்படவேண்டும்.

சக்தி காமராஜ் | படங்கள்: த.ஸ்ரீநிவாசன்



அனுமனின் தாகம் தணித்த அனுவாவி சுப்பிரமணியர்



கோவையிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் ஆனைக்கட்டி செல்லும் வழியில் பெரிய தடாகம் அருகே இயற்கை எழில்சூழ்ந்த வனங்களுக்கு நடுவே மலைமீது அருள்மிகு அனுவாவி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்திருக்கிறது. வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் குகைப்பாறைக்கு நடுவே மலைமீது அமைந்திருப்பதைப் போலவே, அனுவாவி சுப்ரமணியர் கோயிலும் மலைகளுக்கு மத்தியில் கம்பீரமாக அமைந்திருக் கிறது.

தல வரலாறு

ராமாயண காலத்தில் ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை சுமந்துகொண்டு வரும்போது, அவருக்கு தாகம் ஏற்றபட்டது. எங்கு தேடியும் தண்ணீர் கிடைக்காமல், இந்த மலைக்குன்று வழியே வந்தார். இங்கேயும் அவர் தாகம் தணியத் தண்ணீர் கிடைக்கவில்லை.

'குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பாரே' என்று நினைத்த மாத்திரத்தில் ஆஞ்சநேயர், தண்ணீர் வேண்டி முருகப்பெருமானிடம் பிரார்த்தனை செய்தார். அனுமனின் வேண்டுதலுக்கு மனமிரங்கிய முருகன், ஆஞ்சநேயருக்கு நேரில் காட்சி கொடுத்து, தன் வேலாயுதத்தால் பூமியை ஓர் இடத்தில் ஊன்றி ஓர் ஊற்றை உண்டாக்கி, ஆஞ்சநேயரின் தாகம் தணிக்கத் தண்ணீர் கொடுத்தார்.

'அனு' என்றால் ஆஞ்சநேயர். 'வாவி' என்றால் ஊற்று. ஆஞ்சநேயருக்குத் தாகம் தணிக்க தீர்த்தம் கொடுத்ததால், 'அனுவாவி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்' எனப் பெயர் ஏற்பட்டது.

அனுமனுக்கு அருள்செய்த குமரன் என்பதால், அனுமன்குமரர் மலை என்ற ஒரு சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு.

கச்சியப்ப முனிவர் அருளிய பேரூர் ஸ்தல புராணத்தில், இந்தக் கோயிலில் அனுமன் தீர்த்தம் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். 1957-ம் ஆண்டு காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு பெரிய பெரிய பாறைகள் ஒன்றோடொன்று மோதி இந்தக்





கோயில் பெருத்த சேதத்திற்கு உள்ளானது. அதன் பின்னர் புனரமைக்கப்பட்டு, திருப்பணிகள் செய்தபின், 1969-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

முருகனின் மகிமைகள்

இத்தல முருகன் சுயம்பு மூர்த்தியாக இருந்து பக்தர்களுக்கு அருள் செய்கிறார். திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் முருகனின் சிரசில் பூ வைத்து நற்செயலைத் தொடங்கும் வழக்கத்தை இன்றளவும் முருக பக்தர்கள் பின்பற்றி வருகிறார்கள்.

கருவறையில் வள்ளி - தெய்வானையுடன் நின்ற கோலத்தில் சுப்ரமணியர் காட்சி கொடுப்பதால், திருமணத் தடை நீங்க சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.

மேலும் தொடர்ந்து ஆறு செவ்வாய் விரதமிருந்து முருகனுக்கு செவ்வரளி மாலைசூடி, ஆறாவது செவ்வாய்க்கிழமை முருகனுக்குப் பால் அபிஷேகம் செய்து, மனமுருகி வழிபட்டு, முருகனின் வேலில் குத்தப்பட்ட எலுமிச்சம்பழத்தின் சாற்றினை திருமணமாகாத ஆண் - பெண் சாப்பிட்டால், திருமணத் தடை நீங்கி, அடுத்த ஒருசில மாதங்களில் திருமணம் கைகூடும் என நம்பப்படுகிறது. அப்படி வேண்டிக்கொண்டு திருமணமானவர்கள் இக்கோவிலுக்குப் நேர்த்திக் கடனாக பசுவை கன்றுடன் தானம் செய்யும் வழக்கமும் உள்ளது.

குழந்தை பாக்கியம் தள்ளிப்போகும் தம்பதியினர் மேற்சொன்ன விரதத்தைக் கடைப்பிடித்து முருகப்பெருமானை வேண்டிக் கொண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம். பெரும்பாலும் முருகன் கோயில்களில் ஆஞ்சநேயருக்கு சந்நிதி இருக்காது. ஆனால், இந்தக் கோயிலில் ஆஞ்சநேயருக்கும் சந்நிதி இருப்பது மிகவும் சிறப்பிற்கு உரியது. அனுமன் ஜயந்தி விழாவின்போது ஆயிரக்கணக்கான ஆஞ்சநேய பக்தர்கள் தரிசிக்க வருகிறார்கள்.

தலவிருட்சம் மாமரம். இந்தக் கோயிலில் கன்னிமூல கணபதி, வீரபாகு, ஆஞ்சநேயர், நவகிரகம், இடும்பன் ஆகிய சந்நிதிகளும்



அமைந்திருக்கின்றன. சுப்ரமணிய சுவாமி சந்நிதியிலிருந்து நாற்பது படிகட்டுகளுக்கு மேலே அருணாசலேஸ்வரர் சந்நிதி உள்ளது.

முருகன் கோயிலின் எதிரே ஓர் ஊற்று உள்ளது. இந்த ஊற்றின் ஆரம்பம் எங்கே இருந்து தொடங்குகிறது என்று இதுவரை யாருக்கும் தெரியாது. இந்தத் தீர்த்தத்தில் குளித்தால் மனநோய் மற்றும் சருமநோய்கள் குணமாகின்றன என்பது முருக பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வருகிறது.

எந்தக் காலத்திலும் வற்றாத இந்தப் புனித தீர்த்தம், பக்தர்களின் தாகத்தை தணித்து வருவதோடு, இங்கே தேங்கி நிற்கும் தண்ணீரை உள்ளூர் மக்கள் குடிநீருக்கும் பயன்படுத்தி வருகின்றனர். மைசூர் மன்னர் இங்குள்ள ஊற்றை 'காணாச்சுனை' எனப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மலைமீது முருகன் கோயிலுக்குச் செல்லும் வழியில் இடதுபுறமாக ஒரு குகை உள்ளது. பாம்பாட்டிச் சித்தர் இங்கு தவம் செய்திருக்கிறார். இக்குகை மிகச் சிறிய நுழைவுவாயிலைக் கொண்டுள்ளதால், ஓரிருவர் மட்டுமே அமர்ந்து தியானம் செய்ய முடியும். தியானம் செய்வதற்காக ஏராளமான பக்தர்கள் வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

திருவிழாக்கள்

சூரசம்ஹாரம், கார்த்திகை தீபம், சஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், அமாவாசை, பௌர்ணமி போன்ற முக்கிய திருவிழாக் காலங்களில் சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றன. ஆலயத்தில் தினந்தோறும் மதியம் 50 பேருக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. முக்கிய விழாக்கள் மற்றும் பண்டிகைக் காலங்களில் அதிகமான பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கப்படுகிறது.

நடை திறந்திருக்கும் நேரம்

காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரை பக்தர் தரிசனத்திற்குக் கோயில் நடை திறந்திருக்கும்.

பக்தர்களின் கவனத்துக்கு

கோயில் அடிவாரம் பாதவிநாயகரில் ஆரம்பித்து அருணாசலேஸ்வரர் கோயில் வரை சுமார் 580 படிக்கட்டுகள் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நூறு படிக்கட்டுகள் கடந்தவுடன் இளைப்பாறும் மண்டபம் உள்ளது. 15 நிமிடத்தில் கோயிலுக்குச் சென்றுவிடலாம். 50 வயது கடந்தவர்களுக்குச் சற்று கூடுதல் நேரம் பிடிக்குமே தவிர, அதிக சிரமம் இருக்காது.

கோயில் வனப்பகுதிகளுக்கு மத்தியில் அமைந்திருப்பதால், யானைகள், காட்டெருமைகள் முதலிய வனவிலங்குகள் நடமாட்டம் அதிகம் இருக்கக் கூடும் என்பதால், பக்தர்களுக்கு முன்னெச்சரிக்கை அவசியம்.

பேருந்து வசதி

கோவை காந்திபுரத்திலிருந்து அனுவாவி சுப்ரமணியர் கோயிலுக்கு ஒவ்வொரு மணி இடைவெளியில் 26-ஏ, 11-ஏ ஆகிய பேருந்து வசதிகள் உள்ளன.



ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.

– வள்ளலார்

மலர்:39 | டிசம்பர் 2021 | இதழ் :11

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் - வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ.180/-
ஆயுள் சந்தா ரூ.2500/-
(14 ஆண்டுகள் சிறப்பிதழ் உட்பட)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,** போன்; **0422 4322471, 0422 4322222** வெளியிட்டோர்; **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthimagazine@gmail.com

வாசகர் கடிதங்கள்

மனநிறைவு தந்த சிறப்பிதழ்

நவம்பர் ஓம்சக்தி இதழில் தருமபுர ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமி ஆசியுரை, ஆன்மிகக் கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல், நெடுங்கதை, சிறுகதை என தீபாவளி மலருக்கான அனைத்து அம்சங்களோடு வெளிவந்திருப்பது மனநிறைவை அளித்தது.

– பெ. நெடுஞ்செழியன், உடுமலை.

இதயத்தை ஊடுருவி அறியாமையைப் போக்கி, சிவஜோதியை உள்ளே புகுத்தி ஞானம் அளிக்கும் ஆற்றல் கொண்ட திருவண்ணாமலை 'அருண பாணலிங்க க்ஷேத்திரம்' சைவர்களுக்குப் புனித பூமி என்றால் அது மிகையல்ல.

– க. அருணாசலம், மதுரை.

அலோபதி சிகிச்சை முறைக்கு இணையாக சித்த மருத்துவம் விரைவாக (அறுவைச் சிகிச்சைதவிர்த்து)வளர்வதுஆரோக்கியமானது. டாக்டர் சரவணன் சித்த மருத்துவம் குறித்து வழங்கிய சிறப்புப் பேட்டி ஓம்சக்தி வாசகர் களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

– மு. தீனதயாளன், சென்னை.

தீபாவளி வரலாற்றுச் சிறப்புகளை எல்லாம் சுவைபடத் தொகுத்து வழங்கிய சுவாமி கமலாத்மானந்தருக்கு வணக்கங்களுடன் நன்றிகள்...!

– வே. பூமிநாதன், வேலூர்.


சபரி மறுஜென்மத்தில் கிருஷ்ணனின் தங்கையாகப் பிறந்ததற்கு அவளது தூய்மையான இறைபக்தியே காரணம் என்பதை புவனா தியாகராஜன் அருமையாக விளக்கியிருக்கிறார்.

– தேவானந்தன், கன்னியாகுமரி.

சாதீய வேறுபாடு பள்ளி மாணவர்கள் மத்தியில் நிழலாடுவதைக் கண்டு இந்தச் சமூகம் துளியும் வெட்கப்படவில்லை என்பதை மிக அற்புதமாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறது அகிலன் கண்ணனின் 'நிறமற்றவன்' நெடுங்கதை.

– வே. நீலாம்பரி தனசேகரன், திருப்பத்தூர்.

எஸ்.கண்ணன்கோபாலன் | படங்கள்: மதன் சுந்தர்



பொருநைக் கரையில் புனித 7 ஆலயங்கள்!



நமசிவாய கவிராயர் தன்னிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியின் சிறப்பினை உலகத்தவர்க்கு உணர்த்திட அன்னை உலகம்மை நிகழ்த்திய அருளாடலை சென்ற இதழில் பார்த்தோம். இதேபோல் அவருடைய வாழ்க்கையில் மற்றுமோர் அருளாடலையும் நிகழ்த்தினாள் அன்னை.

நமசிவாய கவிராயர் ஆன்மிகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். எனவே, இல்லறத்தில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், அவருடைய தந்தை இல்லற தர்மத்தின் அவசியம் பற்றிப் பலவாறு எடுத்துச் சொல்லி திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினார். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதால் நமசிவாய கவிராயரும் திருமணம் செய்துகொண்டார். இல்லறத்துக்கு உரிய கடமைகளைச் செய்து



கவிராயருக்கு அமுது ஊட்டிய உலகம்மை

வந்தாலும் தாமரையிலை தண்ணீர்போல் பட்டும் படாமல் இருந்து கொண்டார். சிறிது காலத்தில் உலகம்மையின் அருளால் அவருக்கு ஒரு பெண்குழந்தையும் பிறந்து நற்பண்புகளுடன் வளர்ந்து வந்தது.

சில வருடங்களில் நமசிவாய கவிராயரின் மனைவி உலகம்மையின் திருவடி சேர்ந்தாள். கவிராயரும் மறுமணம் செய்துகொள்ளாமல் பெண்ணை அன்புடன் வளர்ப்பதிலேயே வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டார்.

தினமும் காலையும் மாலையும் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்த கவிராயர், ஒருநாள் மாலை ஆலயத்துக்குச் சென்றிருந்தபோது அவருடைய மகள் பூப்பெய்துவிட்டாள். இரவு வீட்டுக்கு வரும் தன் தந்தைக்கு உணவு கொடுக்கவேண்டுமே என்பதால், பக்கத்து வீட்டுக்குச் சென்று அந்த வீட்டுப் பெண் மணியிடம் விவரம் கூறி, தன்னுடைய தந்தைக்கு உணவு பரிமாறும்படிக் கேட்டுக்கொண்டு சிறிது நேரம் அங்கேயே பேசிக்கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் கோயிலுக்குச் சென்றிருந்த நமசிவாய கவிராயர் வீட்டுக்கு வந்துவிட்டார். தன் பக்தன் பசியுடன் இருக்கக்கூடாதே என்று நினைத்த அன்னை உலகம்மை, அவருடைய பெண்ணின் வடிவில் வந்து உணவு பரிமாறினாள். உணவு உண்டு முடித்த பிறகு அவர் கை அலம்ப வெளியில் வந்தபோது, பக்கத்துவீட்டுப் பெண்மணி அவர் சாப்பிட்டு முடித்து கை அலம்புவதைப் பார்த்து, 'ஐயா,

நீங்களே உணவு பரிமாறிக்கொண்டீர்களா?' என்று கேட்டார். அதற்கு கவிராயர் தன்னுடைய மகள்தான் உணவு பரிமாறினாள் என்று கூறினார். அந்தப் பெண்மணி நடந்த விவரத்தைச் சொல்லி கவிராயரின் பெண் தன்னுடைய இல்லத்தில்தான் இருப்பதாகக் கூறினார். கவிராயர், அன்னை உலகம்மையே தன் மகளின் வடிவில் வந்து உணவு பரிமாறியதைப் புரிந்து கொண்டு அம்பிகையின் திருவருள் கருணையை பெரிதும் வியந்து பலவாறாகப் போற்றிப் பாடினார்.

கவிராயர் உலகம்மை மீது சிங்கை சிலேடை வெண்பா, இன்னிசைக் கலிப்பா, உலகம்மை பதிற்றுப்பத்து அந்தாதி, உலகம்மை சந்தவிருத்தம், உலகம்மை பிள்ளைத்தமிழ், பாவவிநாச வண்ணம், உலகம்மை அந்தாதி ஆகிய பாடல்களை இயற்றியிருக்கிறார்.

"கவிராயர், அன்னை உலகம்மையே தன் மகளின் வடிவில் வந்து உணவு பரிமாறியதைப் புரிந்து கொண்டு அம்பிகையின் திருவருள் கருணையை பெரிதும் வியந்து பலவாறாகப் போற்றிப் பாடினார்."

அருள்மிகு உலகம்மை உடனுறை அருள்மிகு பாபநாசர் திருக்கோயில் தண்பொருநைக் கரையில் கிழக்கு நோக்கி ஏழுநிலைகளுடன் கூடிய ராஜகோபுரத்துடன் அமைந்திருக்கிறது. திருக்கோயிலுக்கு எதிரே கல்மண்டபமும், படித்துறையும் அமையப்பெற்றுள்ளது. படித்துறைக்கு கீழே தாமிரபரணி தவழ்ந்துசெல்கிறது.

முதல் பிராகாரத்தில் நந்தி மண்டபம், பலிபீடம், கொடிமரம் ஆகியவை அமைந்திருக் கின்றன. ஆலயத்துள்ளே நமக்கு இடப்புறம் விநாயகர், வலப்புறம் முருகப் பெருமான் சந்நிதிகள் அமைந்திருக்கின்றன. கோயிலுக்குள் சென்றதும் முதலில் வடக்கு நோக்கியபடி அதிகார நந்தி சந்நிதி அமைந்திருக்கிறது. கருவறையில் இறைவன் பாபநாசநாதர் கிழக்கு நோக்கிக் காட்சி அருள்கிறார். இறைவனின் சந்நிதிக்கு இடப்புறத்தில் உலகம்மை சந்நிதி அமைந்திருக்கிறது.

ஆலயத்தின் முதல் பிராகாரத்தில் ஒரு சிவாலயத்துக்கே உரிய முறைப்படி சூரியன், சந்திரன், சூரதேவர், சப்தமாதர்கள், தட்சிணா மூர்த்தி, கன்னிமூல விநாயகர், உற்சவமூர்த்தி கள், பிட்சாடனர், துர்கை, சனீஸ்வரர், பைரவர் ஆகிய சந்நிதிகள் அமைந்திருக்கின்றன.

இரண்டாம் பிராகாரத்தில் பனையடியான், விசுவநாதர் சந்நிதிகளுடன் சுவாமி கருவறைக்கு நேர் பின்புறம் கோயிலின் தலவிருட்சமான களா மரம் அமைந் துள்ளது. மரத்தினடியிலும் சுவாமி சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். ஆலயத்தில் இரண்டு சந்நிதிகள் தனிச்சிறப்பு கொண்டவையாகத் திகழ்கின்றன. ஒன்று கல்யாணசுந்தரர் சந்நிதி; மற்றொன்று புனுகு சபாபதி சந்நிதி.

கல்யாணசுந்தரர் சந்நிதி:

ஆலயத்தில் இறைவனும் இறைவியும் ரிஷபவாகனத்தில் திருமணக்கோலத்தில் காட்சி அருள, இறைவனின் திருக்கோலத்தை தரிசித்தபடி அகத்தியரும் அவருடைய மனைவி லோபாமுத்திரையும் காட்சி அருள்கிறார். ஒரே கல்லில் அமைந்த கற்சிற்பம் என்பது விசேஷம்.





புனுகு சபாபதி சிறப்பு:

இந்தக் கோயிலில் தெற்கு நோக்கிய தனிச் சந்நிதியில் காட்சி தரும் ஆடல்வல்லானின் திருப்பெயர் 'புனுகு சபாபதி'. இவருக்கு புனுகு காப்பு சாத்தப்பட்டே காட்சியளிப்பார். அருகில் சிவகாமசுந்தரி அம்மையும் அழகாக காட்சித் தருகிறாள். வியாக்ரபாதர் மற்றும் பதஞ்சலி மகரிஷி ஆகியோருக்கு தைப்பூசத்தன்று இறைவன் திருநடன காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

மஞ்சள் இடிக்கும் உரல்:

உலகம்மையின் சந்நிதிக்கு முன்புறம் உரல் ஒன்று இருக்கிறது. இந்த உரலில் பெண்கள் விரலி மஞ்சளை இட்டு இடிக்கின்றனர். இந்த மஞ்சளால்தான் உலகம்மைக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. மஞ்சள் அபிஷேக தீர்த்தத்தைப் பருகினால் திருமண, குழந்தை பாக்கியங்கள் கிடைக்கும் என்பதும் பெண்கள் தீர்க்கசுமங்கலிகளாக இருப்பர் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை. நோய்களில் இருந்து நிவாரணம் கிடைப்பதாகவும் சொல்கிறார்கள்.

தலவிருட்சம் களாமரம்:

கோயிலின் தலவிருட்சம் களாமரம். முக்கிளா மரம் என்றும் அழைக்கப்படும் இந்த மரத்தின் மூன்று கிளைகளாக ரிக், யஜுர், சாம ஆகிய வேதங்கள் இருப்பதாக ஐதிகம். இவை இறைவனுக்கு நிழல் தந்தும், அதர்வண வேதம் ஆகாயமாக இருந்து வழிபடுவதாகவும் தலபுராணம் கூறுகிறது.

தீர்த்த மகிமை:

திருக்கோயிலின் தீர்த்தமாக தாமிரபரணியின் வேத தீர்த்தம், பைரவ தீர்த்தம், கல்யாண தீர்த்தம் உள்ளன. இங்குள்ள தாமிரபரணி தீர்த்தக்கட்டத்தில் முறைப்படி நீராடி, சுவாமி பாபநாசரை தரிசித்தால் நம் பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்பது ஐதிகம்.

எங்கிருக்கிறது...
எப்படிச் செல்வது..?

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நகரிலிருந்து மேற்கே சுமார் 60 – கி.மீ தூரத்தில் உள்ள பாபநாசம் செல்ல திருநெல்வேலி நகர் புதிய பேருந்துநிலையத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.


–அடுத்த இதழில்

பி.கே.ஸ்வாமி




விஞ்ஞானத்தின் அடிப்படை வேதங்களே!

வேதங்களில் வானியல் குறிப்புகள்



மகரிஷி பரத்வாஜர் எழுதிய 'இயந்திர சர்வாஸ்வா' என்ற நூல் வேதகாலத்தில் நாம் அடைந்திருந்த கருவிகளின் இயல்பு பற்றிய அறிவை எடுத்துச் சொல்லுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு சுவாமி போதானந்தர் 'வைமாணிக பிரகாரண்' என்ற நூலை எழுதி இருக்கிறார். பழங்காலத்து விஞ்ஞானம், வானியல் போன்றவற்றை நமது முனிவர்கள் நூல்களாகத் தொகுத்து வைத்திருந்த விவரங்களை அதில் நாம் பார்த்திருக்கிறோம்.

அகஸ்தியர் எழுதிய 'சக்தி சூத்திரம்', ஈசுவரர் எழுதிய 'சௌதாமினிகலா', பரத்வாஜர் எழுதிய 'அம்சுமதந்திரம்', சகாதாயனர் எழுதிய 'வாயுதத்துவப் பிரகாரண்', நாரத முனிவரின் 'வைசுவமார தந்திரம்' - 'தாமப்பிரகாரண்' ஆகியவை இவற்றில் குறிப்பிடத் தகுந்தவை. பரத்வாஜர் எழுதியுள்ள 'இயந்திர சர்வாஸ்வா' என்ற நூலில் எட்டு அத்தியாயங்களில் நூறு பகுதிகள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஐந்நூறு சூத்திரங்கள் அளிக்கப்பட்டி ருக்கின்றன. அவருக்கு முன்பு முனிவர்கள் ஆராய்ச்சி செய்து அளித்துள்ள மந்திரங்களைப் பற்றி, பரத்வாஜர்



அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

மகரிஷி பரத்வாஜர் ‘விமானம்’ என்பதை வானத்தில் பறப்பதாக மட்டும் குறிப்பிடவில்லை. தரையில் வெகுவேகமாகச் செல்லும் வாகனத்துக்கும், கடலில் மிக வேகமாகப் போகக் கூடிய கப்பலுக்கும்கூட இதில் குறிப்புகளைத் தருகிறார். இவற்றைச் செலுத்துவதற்குரிய முப்பத்திரண்டு நுட்பங்களையும் அவர் கூறுகிறார். அவற்றில் பல இன்றைய நவீன உத்திகளையும் மிஞ்சுவதாக இருக்கின்றன...

1. கிரீத்தக ரகசியம் :

விமானங்கள் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அடிப்படை மூலப் பொருள்களைப் பற்றி இது கூறுகிறது. விஸ்வகர்மா, மனு, மயன் ஆகியோர் தயாரித்த விமானங்களைப் பற்றியும் இது குறிப்பிடுகிறது.

2. கூட ரகசியம்:

யாசா, வியாசா, பிரயாசா போன்ற விண்வெளியில் உள்ள தாங்கும் வாயுப் பொருள்களைப்பற்றி இது கூறுகிறது. எதிரிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றிக் கொள்ள விமானத்தை மறைத்து வைக்கும் உபாயத்தை



இது குறிப்பிடுகிறது.

3. அபரோக்ஷ ரகசியம்:

இடியின் சக்தியிலிருந்து பெறப்படும் சிறப்பு மின்சக்தி ஒன்றை இது குறிப்பிடுகிறது. விமானத்திற்கு முன்னால் உள்ள பொருள்களைத் தெளிவாகப் பார்க்க இது பயன்படுத்தப்படுகிறது.

4. சர்ப்பகமன ரகசியம்:

சூரியனின் சக்தியைப் பயன்படுத்தி விசைக்கருவியை உபயோகிக்கும் நுட்பங்களையும், அதைக் கொண்டு விமானத்தை வளைந்து செல்லும் சர்ப்பத்தைப் போல பாதையில் செலுத்தும் யுக்தியையும் இது எடுத்துக் கூறுகிறது.

இந்த ரகசிய நுட்பங்களின் பிரயோகங்கள் அதிசயிக்கத் தகுந்த வண்ணம் நூதனமாக இருப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர் திருமதி வீலர் வில்சாக்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியா பழம்பெரும் வேதங்களைத் தந்த பெருமை கொண்ட நாடு. அவற்றில் உள்ள கருத்துக்கள் வேதாந்த - மத சம்பந்தமானவை மட்டும் அல்ல. சரியான வாழ்க்கை முறையையும், அதற்குத் தேவையான பல்வேறு நவீன கருவிகளையும் பற்றி அது எடுத்துக் கூறுகிறது. இன்றைய விஞ்ஞானத்தில் நமக்குப் புதுமையானதாகத் தோன்றும் மின்சார, மின்னணுப் பிரயோகங்கள் அதில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. வானியலை எடுத்துக் கூறி அதில் செலுத்தக்கூடிய விமானம், ஏவுகணை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் விரிவாகச் சொல்லி இருக்கிறார்கள்" என்று அவர் குறிப்பிடுகிறார்.

வேதகாலக் கண்டுபிடிப்புகளைப் பற்றி சுவாமி தயானந்தர் விரிவான நூல்களை எழுதியிருக்கிறார். இதைப் பற்றிப் புகழ் பெற்ற தொல்பொருள் நிபுணர் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "இன்றைய விஞ்ஞானத்தில் சில நூற்றாண்டுகளுக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல கருவிகளும், இயந்திரங்களும், வேதகாலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நீராவி இயந்திரம், மின்சார இயந்திரம், தொலைபேசி, தந்தித் தொடர்பு ஆகியவை பற்றிய குறிப்புகள் வேதங்களில் காணக் கிடைக்கின்றன. தயானந்தர் இவற்றைத் தகுந்த விளக்கத்துடன் எடுத்து எழுதி இருக்கிறார்."

வாயுக்களை உபயோகித்துக் கார் போல் வேகமாகச் செல்லும் வாகனங்களைப் பற்றிய குறிப்பு ரிக்வேதத்தில் வருகிறது. குதிரைகள் அல்லாத, பல்வேறு குதிரைகளுக்கு இணையான சக்தியுடன் செல்லக்கூடிய வண்டிகளைப் பற்றியும் ரிக்வேதம் கூறுகிறது. கடலில் மிக வேகமாகச் செல்லக்கூடிய மோட்டார் படகுகளைப் போன்ற வாகனங்களைப் பற்றிய குறிப்பும் ரிக்வேதத்தில் வருகிறது. கடலிலும் சென்று வானத்திலும் ஏறிப்

"இன்றைய விஞ்ஞானத்தில் சில நூற்றாண்டுகளுக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல கருவிகளும், இயந்திரங்களும், வேதகாலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன."



போகக்கூடிய விமானங்களைப் பற்றி ரிக்வேதம் குறிப்பிடுகிறது. நீராவி இயந்திரங்களை அக்னிரதம் என்று அது குறிப்பிடுகிறது.

விமானங்களைத் தவிர, பறக்கும் கருவிகள் பலவற்றையும் நமது புராணங்கள் விவரிக்கின்றன. இவற்றை அந்த காலத்துப் புராணகர்த்தாக்கள் மானசீகமாகக் கற்பனை செய்து எழுதிவிட்டதாகக் கூறிவிடக் கூடாது. புராணங்களில் வரும் சில வருணனைகள், அந்தக் கருவிகள் இயங்கிய விதத்தையும் நுட்பங்களையும்கூட நேரில் பார்ப்பதைப் போல வர்ணிக்கின்றன.

மேகங்களுக்கு மேல் சென்று பறக்கும் புஷ்பக விமானத்தைப் பற்றிய குறிப்பு ராமாயணத்தில் வருகிறது. சூரிய ஒளிக்கு நிகராகவும், இடியின் சக்திக்கு இணையாகவும் உள்ள கருவி ஒன்றில் பீமன் ஏறிச் செல்வதை மகாபாரதம் வர்ணிக்கிறது. 'வாஸ்லூத் - விண்வெளி வீரர்' என்ற இன்றைய நூலின் ஆசிரியர், "இவற்றை வெறும் கற்பனைகளாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. அன்றே புழக்கத்தில் இருந்த கருவிகளையே அவர்கள் நுட்பங்களுடன் குறிப்பிட்டிருக்கிறார்கள்" என்று விளக்கிக் கூறி இருக்கிறார்.


மகாபாரதத்தில் அஸ்திரங்களைப் பிரயோகித்தது பற்றிய வர்ணனை இது; "சூரியனைப் போல ஆயிரம் மடங்கு பிரகாசம் கொண்ட, வெண்ணிறமான புகை ஒன்று அப்போது குடைபோல எழுந்தது. அதன் ஒளியினால் சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் பார்வை இழந்தார்கள். அதன் வெப்பத்தால் சுற்றிலும் உள்ள தாவர இனங்களும், ரதம், யானை போன்றவையும் அவற்றின் மீது இருந்த மனிதர்களும் கருகிப் போனார்கள். அருகில் இருந்த நீர்நிலைகள் ஆவியாகி மிகுந்த வெப்பம் கொண்ட நீராவியைக் கக்கின. சுற்றிலும் உள்ள எல்லாப் பொருள்களும் அழிந்து நாசமான பிறகு எங்கும் ஒரு மரண அமைதி நிலவிற்று. அந்த இடத்திலிருந்து உதிர்ந்த துகள்கள் பட்ட இடமெல்லாம் அழிவு நேர்ந்தது. மனிதர்கள் கை, கால்கள் அற்றவர்களாகவும், உருக்குலைந்தவர்களாகவும் துடித்துக் கீழே விழுந்து மாண்டனர்."



இது இன்றைய அணுகுண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தின் வர்ணனைக்கு நிகரானதாக அல்லவா இருக்கிறது. அணுகுண்டு வெடித்ததும் விஞ்ஞானி ஓப்பன்ஹீமர், 'அனந்தகோடி சூரியப் பிரகாசம் போன்ற ஒளி எழுந்து விரிந்தது' என்றல்லவா கூறினார்!

வெகுதூரத்தில் உள்ள பொருள்களைத் தாக்கும் ஏவுகணைகளைப் பற்றி இன்று கேள்விப்படுகிறோம். இவ்வாறு சென்று தாக்குவது மட்டுமன்றி மீண்டும் அனுப்பிய இடத்துக்கே வந்து சேரும் கணைகளைப் பற்றி





மகாபாரதம் ஆதி பருவம் குறிப்பிடுகிறது. அக்னிபகவான் வாசுதேவனிடம் ஓர் அஸ்திரத்தை ஒப்படைக்கிறார். அந்த அஸ்திரம் அனுப்பிய இடத்திலிருந்து புறப்பட்டு, எதிரியின் இடத்தை அடைந்து, அங்கே குறிப்பிட்ட பொருளைத் தாக்கிவிட்டு மீண்டும் எய்தவரிடமே திரும்பி வந்துவிடக் கூடிய சக்தி படைத்தது.

மகாபாரதத்தில் துரோண பருவத்தில் குறிப்பிடப்படும் ஓர் ஏவுகணை, ஒன்றிலிருந்து மற்றொன்றாகப் பிரிந்து, அதிலிருந்து பல்வேறு அம்புகளை உதிர்க்கக் கூடியது. இதன் வர்ணனை இன்றையப் போர்க்கருவியான பலநிலை ராக்கெட்டுகளை ஒத்திருக்கிறது. "இந்தக் கணையினால் தாக்கப்பட்ட இடம் எரிந்து சாம்பலாகிவிடும். அந்த நிலத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பஞ்சம் நிலவும். நீர் நிலைகள் நஞ்சினால் பாதிக்கப் பட்டுவிடும். அந்த மண்ணில் பிறக்கும் குழந்தைகள் உடற்குறைவுடன், புத்திபாதிப்புடன் பிறப்பார்கள். உயிர் வாழ்பவர்கள் தீராத வியாதிகளால் அவஸ்தைப் படுவார்கள்." இன்று அணுகுண்டின் பாதிப்பினால் ஜப்பானில் உள்ள மக்கள் அடைந்துள்ள நிலை இதேபோல இருக்கிறது அல்லவா?

மகாபாரதத்தில் அர்ஜுன னுக்குச் சிவபெருமான் கொடுக்கும் பாசுபதாஸ்திரம், மிகவும் கனமான உலோகத் தகடுகளையும் துளைத்து அறுக்கக்கூடியது. அதன் சக்தியும் வேகமும் சூரிய ஒளிக்கு நிகரானவை என்று வர்ணிக்கப்படுகிறது. 'லேசர் ஊடுருவிகள்' என்று இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பாக விளங்கும் கணையின் பண்பு அதை ஒத்திருக்கிறது அல்லவா?

இதேபோல ராமாயணத்தில் வரும் பல்வேறு அஸ்திரங்களும், இன்றைய விஞ்ஞானம் தரும் அதிசய ஆயுதங்களைப் போலவே விளங்குகின்றன. இன்றைய விண்வெளி ஆயுதங்களுக்கு இயக்குபவர் தேவை இல்லை என்பதைப் போல, அன்றைய ஆயுதங்களும் தானே இயங்குவது பற்றி வர்ணிக்கப்படுகிறது.

இந்தக் குறிப்புகளை எடுத்துச்சொல்லி மேல்நாட்டு ஆராய்ச்சியாளரான எரிக்வான் டெனகின், நமது வேதங்களிலும், இதிகாச புராணங்களிலும் வரும் நுட்பமான கருத்துகளைப் பாராட்டி எழுதி இருக்கிறார்.●



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi MILK
SUPREME
Sakthi MILK SELECT
Pasteurised Toned Milk
500ml
Sakthi MILK SPECIAL
Pasteurised, Homogenised, Standardised Milk
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

காயத்ரி கிருஷ்ணராஜ்

ஆயுள் விருத்திக்கு வழிபட வேண்டிய ஆலயம்!

தர்மத்தின் அதிபதியாம் யமதர்மன், மார்க்கண்டேயன் பொருட்டு சிவபெருமானால் சம்ஹாரம் செய்யப்பட்டான். பின்னர் பூமிதேவியின் பிரார்த்தனைக்கு இரங்கி உயிர் பெற்ற யமதர்மன், தான் செய்த சிவ அபசாரத்துக்குப் பிராயச்சித்தமாக சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம்தான் தருமபுரம் ஆதீன வளாகத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு அபயாம்பிகை சமேத அருள்மிகு தருமபுரீஸ்வரர் திருக்கோயில்.

முகப்பில் ராஜகோபுரத்துக்கு பதிலாக ஒரு அலங்கார வளைவு அமைந்திருக்கிறது. அந்த வளைவின் மீது நடுவில் சிவபெருமான் உமையன்னையுடன் ரிஷபாரூடராக சுதைவடிவில் வண்ணமயமாகக் காட்சி தருகிறார். அவருக்கு இருபுறங்களிலும் தருமபுர ஆதீன குருமகா சந்நிதானங்கள் இருவரின் சுதைவடிவச் சிற்பங்கள் அமைந்திருக்கின்றன. சிவபெருமானின் வலப்புறத்தில் இருபுறங்களிலும் தேவியர் நின்றிருக்க மயில்மீது அமர்ந்த கோலத்தில் முருகப்பெருமான், சிவலிங்க மூர்த்தியை வழிபடும் அகத்தியர், விநாயகப்









பெருமான் ஆகியோரும், இடப்புறத்தில் அன்ன வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் அம்பிகை, சிவலிங்கத்தை பூஜிக்கும் யமதர்மன், சண்டிகேசர் ஆகியோர் சுதை வடிவில் வண்ணமயமாகக் காட்சி தருகின்றனர். முகப்பு வாயிலின் பக்கவாட்டில் சரஸ்வதி சாவித்திரி தேவியருடன் பிரம்மா, சங்கர நாராயணர், அர்த்தநாரீஸ்வரர் ஆகியோரின் சுதைவடிவங்கள் அமைந்திருக்கின்றன. முகப்பு வாயிலை ஒட்டி அமைந்திருக்கும் சந்நிதியில் கற்பக விநாயகர் காட்சி அருள்கிறார்.

முகப்பு வாயிலுக்கு அடுத்து அமைந்துள்ள மற்றொரு வாயில் மீது பதினெட்டு கரங்களில் ஆயுதங்களுடன் அஷ்டாதசபுஜ துர்கை நின்ற கோலத்தில் இருக்க, துர்கைக்கு வலப்புறத்தில் எட்டு முகங்களுடன் கூடிய துர்கையும், இடப்புறத்தில் வில்லும் அம்பும் ஏந்தி போருக்குப் புறப்படும் கோலத்தில் காட்சி தரும் துர்கையும் சுதைவடிவச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றனர்.

பிரதான முகப்பு வாயிலைக் கடந்து ஆலயத்துக்குள் செல்கிறோம். மிகவும் விசாலமான பரப்பளவில் அமைந்திருக்கும் ஆலயத்தின் உள்ளிருக்கும் இறைவன் நிர்மலமானவன் என்பதை எடுத்துச் சொல்வது போல் நிர்மலமான வானத்தின் பின்னணியில் மண்டபத்தையும், வண்ணச்சிற்பங்களுடன் ஐந்து கலசங்களுடன் கூடிய கோபுரமும் அமைந்திருக்கின்றன.

பிராகாரத்தில் சித்தி விநாயகர் சந்நிதி அமைந்திருக்கிறது. எண்ணிய காரியங்கள் சித்தி அடைய அருள்பவர் என்பதால் சித்தி விநாயகர் என்று போற்றப்படுகிறார். சிவாலயத்துக்கு வலப்புறத்தில் தனிக்கோயிலாக அமைந்திருக்கிறது துர்கை அம்மன் கோயில்.

விசாலமான மண்டபத்தில் அமைந்திருக்கும் சந்நிதியில் துர்கை அம்மன் பதினெட்டு கரங்களிலும் ஆயுதங்களுடன் மகிஷன் தலைமீது திருவடிகளை வைத்தபடி காட்சி அருள, அருகிலேயே உற்சவமூர்த்தியும் கரத்தில் சூலத்தைப் பற்றியபடி காட்சி அருள்கிறாள்.

துர்கை என்றால் துக்கங்களைப் போக்குபவள் என்று பொருள். அது மட்டுமல்ல எவராலும் வெல்ல முடியாதவள் என்றும் ஒரு

பொருள் உண்டு. துர்கைக்கு ஒன்பது வடிவங்கள் இருப்பதாக ஐதிகம்.

துர்கையை தரிசித்துவிட்டு பிராகாரம் வலம் வருகிறோம். பிராகாரத்தில் சனகாதி முனிவர்களுக்கு பேசாமலே மோனத்தால் ஞானம் உபதேசிக்கும் தட்சிணாமூர்த்தி, நா மணக்க மணக்க தேவாரமும் திருவாசகமும் பாடிய சமயக்குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், அடுத்து அகத்தியர் பூஜித்த சிவலிங்க மூர்த்தம் அமைந்திருக்கின்றன.

தொடர்ந்து வேலும், சேவல் கொடியும் ஏந்தி வள்ளி தெய்வயானையுடன் காட்சி அருளும் முருகப் பெருமான், ஸ்ரீசந்திரசேகரர், கருவறை கோஷ்டத்தில் லிங்கோத்பவர், பிரமா, துர்கை ஆகியோரை தரிசிக்கிறோம். சண்டிகேசர், சிவகாமி அம்மை சமேதராகக் காட்சி தரும் நடராஜப் பெருமான், நடராஜர் சந்நிதிக்கு அடுத்து மற்றொரு சந்நிதியில் தேவியருடன் ஆறுமுகப்பெருமான், காலபைரவர், சூரியன் சந்நிதிகள் அமைந்திருக்கின்றன. அடுத்துள்ள சந்நிதியில் சிவபெருமானை பூஜிக்கும் பாவனையில் கரத்தில் மலருடன் காட்சி அருளும் யமதர்மனும் அவருக்கு முன்பாக அவர்









பூஜித்த சிவலிங்க மூர்த்தமும் காட்சி தருவதைக் காணலாம். இந்த ஆலயத்தில் அருளும் அம்பிகையின் திருநாமம் அபயாம்பிகை. யமதர்மனுக்கு அபயம் அளித்ததால் அபயாம்பிகை என்னும் திருப்பெயர் கொண்டு மிக அழகுடன் பக்தர்களுக்கு அபயம் அளிக்கும் திருக்கோலத்தில் காட்சி அருள்கிறார்.

சிவபெருமான் யமதர்மனால் பூஜிக்கப் பெற்று அவனுக்கு அருள்புரிந்ததால் தருமபுரீஸ்வரர் என்னும் திருப்பெயர் கொண்டு இந்தத் தலத்தில் கோயில் கொண்டு அருள்கிறார். ஒவ்வொருவரும் அவரவர் ஜன்ம நட்சத்திரம் வரும் நாளில் இந்தக் கோயிலுக்கு வந்து அபிஷேகம், வில்வார்ச்சனை செய்து வழிபட்டால் ஆயுள் விருத்தியாகும் என்பதும், மரணபயம் நீங்கும் என்பதும் ஐதிகம்.

ஆதியில் வில்வவனமாக இருந்த தருமபுரம் வில்வாரண்யம் என்றே அழைக்கப்பட்டது. முன்னொரு யுகத்தில் தருமபுரீஸ்வரர் ஆலயம் அகத்தியரால் ஏற்படுத்தப்பட்டு, அவருடைய வழி வந்த முனிவர்களால் வழிபடப் பெற்ற கோயிலாகும். ஆதியில் வில்வ விருட்சங்கள் நிறைந்திருந்ததால் வில்வாரண்யம் என்ற பெயரில் விளங்கிய இந்தத் தலத்தில் உள்ள இறைவனை யமதர்மன் வழிபட்டதால், அவன் பெயரிலேயே ஊரும் தருமபுரம் என்று அழைக்கப்படுகிறது.

அகத்திய முனிவரும், யமதர்மனும் வழிபட்ட ஐயன் தருமபுரீஸ்வரர் அருளால்தான் அருள்மிகு சொக்கநாதரும், சிவத்திரு கமலை ஞானபிரகாசரும் ஆற்றுப்படுத்த ஸ்ரீகுருஞான சம்பந்தர் எழுந்தருளி தருமபுர ஆதீனத்தைத் தோற்றுவித்ததாக தலவரலாறு கூறுகிறது. தருமபுர ஆதீன வளாகத்தில் அமைந்திருக்கும் ஐயன் தருமபுரீஸ்வரரையும், அன்னை அபயாம்பிகையையும் அனைவரும் ஒருமுறையேனும் தங்கள் ஜன்ம நட்சத்திரம் வரும் நாளில் தரிசித்து அருள் பெறவேண்டும்.

திருப்புகழ்த் திலகம் மதிவண்ணன்

கணந்தோறும் வியப்புகள்...

தென்பாண்டித் தொடுவானில் உதித்துப் பின்னர்
திருவல்லிக்கேணிகடல் விழுந்து இங்கே
பண்வானில் பகலவனாய்ப் பயணம் செய்த
பாரதியே! நூற்றாண்டு கடந்த பின்னும்
இன்னும்உன் கவிகளிலே இளமை வேகம்!
எத்தனைநாள் படித்தாலும் தீராமோகம்!
கண்முன்னர் நீயும்ஓர் விரிந்த வானம்!
கணந்தோறும் வியப்புகளைக் காட்டுகின்றாய்!

படைநடத்தி வருகின்ற சுறுசுறுப்பும்
பாய்ந்துவரும் அலைத்திரளின் விறுவிறுப்பும்
உடைநெகிழ வருங்காற்றின் சலசலப்பும்
ஊற்றுக்கண் திறக்கின்ற கிளுகிளுப்பும்
மடைதிறந்து வரும்வெள்ளப் பரபரப்பும்
மாணிக்கச் சூரியனின் தகதகப்பும்
தடையின்றி ஒன்றாகிக் கைகுலுக்கும்
தமிழ்தந்த பாரதிநீ வியப்பின் உச்சி!

டிசம்பர் 11
மகாகவி பாரதியார்
பிறந்த தினம்



பெண்மைக்குப் பாட்டில்நீ தலைமை தந்தாய்!
பேருழைப் பாளிகளே தெய்வம் என்றாய்!
உண்மையிலே ஏழைஎன்றும் அடிமைஎன்றும்
எவனுமில்லை ஜாதியிலே என்று சொன்னாய்!
கண்ணற்ற தீவினிலே வாடி நின்ற
கன்னியர்க்குக் கவிதையினால் நியாயம் கேட்டாய்!
முன்எழுந்த புதியதொரு ருஷ்யாவிற்கு
முகமனொன்று கவிதையினால் மொழிந்துவைத்தாய்!

பாரதிநீ கண்ணாடி! உன் முன்னாடி
பார்க்கின்ற உலகத்தைப் பிரதிபலித்தாய்!
வேறெவர்க்கும் இல்லாத எளிமை! நன்கு
விளக்குகின்ற உவமைநயம்! சொல்லின் ஜாலம்!
யாருக்கும் தோன்றாத கற்பனைகள்!
இழைந்தோடும் மெட்டுக்கள்! இனிய சந்தம்!
நேருக்கு நேர்நின்று பேசும் பாவம்!
நிச்சயமாய் உனக்குநிகர் நீயே என்பேன்!

அழகுபெற்ற தத்துவம்தான் இயற்கைப் பாடல்!
ஆத்மாவின் தத்துவம்தான் குயிலின் பாட்டு!
பழகுதமிழ்த் தத்துவமே நொண்டிச் சிந்து!
பக்திக்குத் தத்துவமே கண்ணன் பாட்டு!
அழலுக்குத் தத்துவமே தேசியப் பா!
அற்புதத்தின் தத்துவமே ஊழிக் கூத்து!
தழற்கவிஞன் பாரதிநீ கவிதைக் கென்றே
தழைத்துவந்த தத்துவத்தின் முதற்பதிப்பு!

வான்பார்த்த கருமீசை! நெருப்புப் பார்வை!
வால்விட்ட தலைப்பாகை! கருப்புக் கோட்டு!
கூன்பார்த்த வைதீகச் சடங்கைஎல்லாம்
குறிபார்த்த தனிவீரம்! உள்ளத்துள்ளே
தேன்வார்க்கும் வார்த்தைகளில் நெருப்பைச் சேர்த்துத்
தெறிக்கவைத்த கவிதைநயம்! இவற்றைச் சேர்த்தால்
நான் பார்க்கும் பாரதியை நீங்கள் பார்ப்பீர்!
நவயுகத்தின் முதல்வியப்பே பாரதிதான்!

பா.ஜெயவேல் | ஓவியம்: பிரபா



துஞ்சான் இரவுகள்



அமாவாசை கழிந்து ஆறு நாளாயிற்று. தகதகவென தங்க வாணலியாய் மின்னிய நிலவு மங்கி தூரத்து நிலத்தில் புதைந்து கொண்டிருந்தது. படுக்கையில் அசைவற்று கிடந்தான் சுகுமார்.

வெள்ளைத் துணி போர்த்தி கவிழ்த்த பானையைப் போன்று மேலும் கீழுமாய் ஏறியிறங்கிக் கொண்டிருந்தது அவனின் வயிறு. கர்ண கடூரமாய் காது மடல் அருகே ரீங்காரமிட்டு எழுப்பிக் கொண்டிருந்தது சிறிய கொசு. தூக்கக் கலக்கத்தில் கன்னத்தில் அறைந்தபோது உள்ளங்கையில் ரத்தம் பிசுபிசுத்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டே கையில் படிந்த கொசுவின் ரத்தத்தைப் லுங்கியில் துடைத்துக் கொண்டான். மெல்லிய இருளில் செல்போனை துழாவி எடுத்தான். கண்களைச் சுருக்கி உற்றுநோக்கினான். 11.14 என்றதும் விலகிக் கிடந்த போர்வைக்குள் தன்னை திணித்துக் கொண்டான். கண்கள் மூடியே இருந்தாலும், அவனுக்குள் மங்கி தேய்ந்துபோன பழைய நினைவுகள் உயிர்பெறத் தொடங்கின.

அரைமணி நேரத்தில் ஐந்தாறு

> எதிர்வீட்டு நாய்களும் தங்கள் பங்கிற்கு குரைக்கத் தொடங்கின. கொண்டிருந்த வயதான செக்யூரிட்டி வெளியே வந்தார். நாய்களை

முறையாவது புரண்டிருப்பான். ஐம்புலன்களுக்கும் தென்படாத ஏதோ ஒரு விரக்தி ஆழ்மனதில் மூழ்கிக் கிடந்தது. கட்டிலில் கிடைக்காதது கட்டாந்தரையில் கிடைக்கட்டும் என்று வெறும் தரையில் இறங்கிப் படுத்துக்கொண்டான். கோடைக் காலங்களில் ஏ.சி.யின் குளிரை ஈர்த்து சில்லிட வைக்கும் வெறும் தரை அவனுக்கு இதமாய் இருக்கும். உடல் குளிர்ந்தாலும் மனம் மறுதலித்தது.

அதிகாலை நேரங்களில் விழித்துக் கொண்டால் சுகுமாருக்கு தூக்கம் தொலைந்து போகும். விடியும்வரை தூக்கம் இருக்காது. கடந்த ஓராண்டில் மட்டும் மாதத்திற்கு ஒரு முறையாவது இது போன்ற இரவுகளைச் சந்தித்திருப்பான் சுகுமார். ஆனால், முன்னிரவில் தூக்கம் வராமல் இருப்பது அவனுக்கு இதுவே முதல்முறை.

“தூக்கம் வரலைன்னா, கண்களை மூடிக்கொண்டு ஒன்றிலிருந்து நூறு வரை மனசுக்குள் சொல்லிக் கொண்டே வரவேண்டும். பிறகு தலைகீழாக நூறிலிருந்து ஒன்று வரை சொல்ல வேண்டும். இப்படியே திரும்பத் திரும்ப மனசுக்குள் சொல்லிக் கொண்டிருந்தால் தூக்கம் வந்துவிடும்.” டிவியில் பார்த்த இந்த டிப்ஸ் அவனுக்கு எப்போதாவது கருணை காட்டுவதுண்டு. ஆனால், ஒன்றுக்கும், நூறுக்கும் இடையே பத்து முறைக்கு மேல் ஏறி இறங்கினாலும் தூக்கம் வருவதாக இல்லை. காற்றில் சலசலத்துக் கொண்டிருக்கும் காய்ந்த சருகுகளைப் போல மனசுக்குள் ஓர் ஓசை தூரத்தில் கேட்டுக் கொண்டிருந்தது.

தன்னை சுற்றியே வட்டமிடுவது போன்று இருந்தது நொடிமுள் ஓசை. அடிக்கடி ஜன்னலை பிறாண்டும் எலியும் அன்றைக்குத் தவறாமல் ஆஜராகி மூடியிருந்த ஜன்னலுக்கு வெளியே க்ரீச்... க்ரீச்... என ஓடிக்கொண்டிருந்தது. சுகுமாரின் கண்கள் மட்டும் மூடியே இருந்தன. ஆனால், காதுகளுக்கு எந்த பூட்டும் போட முடியவில்லை. கண்ணில் பட்ட எல்லா கிளைகளிலும் தாவிக் குதித்து கும்மாளம் இடத் தொடங்கியது மனக்குரங்கு.

‘இன்சோம்னியா...’ இந்த வார்த்தை அவனுக்குப் புதிதல்ல. ஆனால் அனுபவம் புதிது. சுகுமாரின் பள்ளிப் பருவத்தில் சித்தப்பா கண்ணப்பனுக்கும் இதே பிரச்னை இருந்ததால் அவர் அடிக்கடி டாக்டர் பரிந்துரைத்த மாத்திரையை எடுத்துக்கொள்வார். அதே போல சுகுமாரும் சில மாதங்களுக்கு முன்பு அம்பிகா மெடிக்கலில் கெஞ்சிக் கூத்தாடி இரண்டு மாத்திரைகளை வாங்கி போட்டுக் கொண்டான். ”தூக்க மாத்திரை சாப்பிட்டா, அதே பழக்கம்தான் வரும். கண்ட மாத்திரைய போட்டு ஒடம்ப கெடுத்துக்காதீங்க.” மனைவி மஞ்சுவின் கறார் வார்த்தைகளால், அப்போதே மாத்திரைக்கு முட்டுக்கட்டை போட்டு விட்டான். இப்போதெல்லாம் அடிக்கடி தூக்கமின்மை அவனை துரத்திக் கொண்டிருந்தது.

செல்போனை எடுத்து யூடியூபில் ‘தூக்கமின்மை’ என டைப் செய்ய, ‘இந்த இசையைக் கேட்டால், உங்களுக்கு ஆழ்ந்த தூக்கம் வரும்.’ என்றது அந்த வீடியோ. அடுத்த சில நொடிகளில் அந்த மெல்லிய இசை அந்த அறைமுழுவதையும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தது. அவற்றில் சில கீற்றுக்கள் மட்டும் சுகுமாரின் காதுமடல், டெம்போரல், வெசுடிபிலார், மூளை நரம்பு எனப் பாய்ந்து சென்று மூளையில் கரைந்தது.

இதமாய் வருடும் மயிலிறகு போன்ற அந்த இசை கூட கம்பளியால் காதுகளை வருடியது போல் இருந்தது. இசைக்கு இசையாதிருந்தது சுகுமாரின் மனக்குரங்கு. அழுத்தப்பட்ட உதடுகள் இரண்டும் பிளவுற்று இணையும் அரைநொடிப் பொழுதில் வெளியான ‘ப்ச்’ என்ற ஓசை ஐந்து நிமிடமாய் அறையில் படர்ந்து கொண்டிருந்த செல்போன் இசைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. வாட்ஸ்அப், முகநூல் என விரல்கள் துழவிக் கொண்டிருந்தன. லேசாக இருந்த தூக்கமும், மொத்தமாகத் தொலைந்து போனது.

உடலை முறுக்கிச் சோம்பல் முறித்தெழுந்தான். கண்களைத் திறந்து எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு செல்போன் சகிதமாக ஹாலுக்கு வந்தான். வாட்டர் பாட்டிலில் இருந்த

வீட்டுக்கு எதிரில் உள்ள அப்பார்ட்மெண்ட்டில் சேரில் சாய்ந்து தூங்கிக் விரட்டி அடித்துவிட்டு மீண்டும் சேரில் சாய்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டார்.

தண்ணீரில் பாதியைக் குடித்துவிட்டு ஷோபாவில் அமர்ந்தான். டிவியை ஆன் செய்து விட்டு சிகரெட் பாக்கெட்டை எடுத்தான். பாக்கெட்டில் கடைசியாக மிச்சம் இருந்த அந்த ஒற்றை சிகரெட் அறையில் புகையைப் பரப்பியது. அன்றைய தலைப்புகளில் செய்திகளும், விவாதங்களும் மறுஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. சேனலை மாற்றினாலும் அந்தரங்க மருத்துவர்களும், கவர்ச்சி நடனங்களும் கச்சை கட்டின. இவை அனைத்துமே அவனுக்கு எரிச்சலூட்டியதுதான் மிச்சம். டிவியை ஆஃப் செய்துவிட்டு ஷோபாவில் சாய்ந்தான் சுகு.

மதிய நேரத்தில் மஞ்சுவிடம் பேசியதெல்லாம் சுகுமாரின் நினைவிற்கு வந்தன.

"எங்க அப்பா போன் பண்ணார். வையாபுரி சித்தப்பாவுக்கு ஒடம்பு சரியில்லையாம். வேலூர் கவர்மெண்ட் ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டு போயிருக்காங்க. ரொம்ப நாள் தாங்காது வீட்டுக்கு கூட்டிட்டு போங்கன்னு சொல்லிட்டாங்களாம். வீட்ல படுத்த படுக்கையா கெடக்குறார். கண்ணை மூடறதுக்குள்ள உங்களையெல்லாம் ஒருதடவ பாத்துட்டா போதும்னு நெனக்கிறார்."

"ரெண்டு நாள் கழிச்சு போகலாம்."

"அதுவரைக்கும் தாங்காதாம். இன்னைக்கே வந்தா நல்லதுன்னார்."

"வேலை விஷயமா நாளைக்கு முக்கியமான ஒருத்தரை பார்க்க சென்னை போக வேண்டி இருக்கு. அவசரம்னா, நீயும் கீர்த்தனாவும் மட்டும் போய்ட்டு வாங்க."

"எங்க ஆளுங்களுக்கு ஏதாவதுன்னா மட்டும் உங்களுக்கு முக்கியமான வேலை வந்துடும். ரெண்டு வயசு கொழந்தைய தூக்கிகிட்டு நான் மட்டும் எப்படி தனியா போவேன்?" சலித்துக் கொண்டாள் மஞ்சு.

"உங்கப்பா பணஉதவி செஞ்சிருந்தா கூட போன வருஷமே உனக்கு கவர்மெண்ட் வேலை கெடச்சிருக்கும். வெலைய கொறச்சி கேட்கறாங்கன்னு நெலத்த விக்காம அப்படியே வச்சிருக்காரு. வெறும் 22,000 சம்பளத்துல இந்த ஊருல குடும்பம் நடத்த முடியாதும்மா தாயி. எனக்கும் ஏதாவது நல்ல வேலை கிடைக்காதான்னு பல வருஷமா ஓடியாடி தேடிக்கிட்டிருக்கேன். எங்க ஊருக்கு பக்கத்துலேயே புதுசா ஒரு கெமிக்கல் கம்பெனி தொடங்கறாங்க. அங்க லேப் இன்சார்ஜ் வேலை வாங்கி தர்றதா என்னோட சீனியர் பாஸ்கர் சார் சொல்லி இருக்கார். வேலை கிடைச்சா 30,000 ரூபாய் வரை சம்பளம் இருக்கும். வருஷத்துக்கு ஒருமுறை இங்ரிமெண்ட்டும் போடுவாங்கன்னு சொன்னார். நாளைக்கு காலையில அது விஷயமாத்தான் நுங்கம்பாக்கம் போறேன். வேலை கிடைச்சதும் கிராமத்து வீட்டுக்கே போயிடலாம். வாடகை செலவெல்லாம் மிச்சம். எவன் கால்ல கையில விழுந்தாவது நல்ல வேலைக்கு போயிடலாம்னு நெனக்குறேன். தானா வர்ற வேலைக்கு வேட்டு வெக்க உங்க சித்தப்பா வருவார்னு நெனக்கல"

"வேற ஒருநாள்ல போய் பார்க்கக் கூடாதா?"

"கம்பெனி புராஜெக்ட் விஷயமா அந்த எம். டி நாளைக்கு ஆஸ்திரேலியா போறாராம். திரும்ப வர மூனு மாசத்துக்கு மேல ஆகும். பாஸ்கர் சாருக்கும் அவரண்டை ஏதோ முக்கியமான வேலை இருக்காம். வேளச்சேரியில இருந்து பாஸ்கர் சார் நேரா அங்கே வந்துடுவாரு. நீ வந்தா மட்டும் போதும், கன்ஃபார்மா வேலை கெடச்சுடும்னு சொன்னார். இந்த சந்தர்ப்பத்தை விட்டுட்டு எப்படி வரமுடியும்? சித்தி ஏதாவது கேட்டா, வேலை விஷயமா அவசரமா வெளிய போயிருக்கிறார். நாளைக்கு மதியம் வந்துடுவார்னு சொல்லு. 11.00 மணிக்கெல்லாம் அங்கிருந்து கெளம்பிடுவேன். அப்படியே பஸ்ஸ புடிச்சு நேரா வேலூருக்கு வந்துடுறேன்."

"ஊருக்கு வர்றேன்னு சொல்லிட்டு வீட்டுக்கு வந்து தூங்கிடாதீங்க" மூடிவைத்த குழாயில் கோத்துக் கசியும் நீர் போல மஞ்சுவின் கண்களில் கண்ணீர்த்துளிகள் சொட்டத் தொடங்கின.

வையாபுரி கவலைக்கிடமாக இருப்பது பற்றி சுகுமாருக்கு பெரிய கவலையெல்லாம் கிடையாது. மஞ்சுவுக்காக தலையைக் காட்ட வேண்டும் என்ற கட்டாயம் மட்டும்தான். மஞ்சுவையும், கீர்த்தனாவையும் பேருந்தில் ஏற்றி அனுப்பிய சாயங்கால நினைவுகளிலிருந்து

மீண்டு வந்தான்.

காலியாக இருந்த சிகரெட் பாக்கெட்டை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, வீட்டுக் கதவை வெளியில் தாழிட்டு மாடிக்கு வந்தான். நிலவு மறைந்த தடம் தெரியாமல் இருட்டியிருந்தது நள்ளிரவு வானம். வீட்டின் முன்பகுதியில் உள்ள மொட்டை மாடியிலிருந்து வெளியே பார்த்தால் இரண்டு தெருமுனைகளும் நன்றாகத் தெரியும். அங்கொன்றும் இங்கொன்று மாக தெருவிளக்குகள் திட்டுத்திட்டாக வெளிச்சத்தைப் பரப்பிவிட்டுக் கொண்டிருந்தன. வாகனங்களின் இரைச்சலும், தெருநாய்களில் குரைச்சலும் அவ்வப்போது நிசப்தத்தைச் சிதைத்துக் கொண்டிருந்தன.

வலது பக்க முச்சந்தியில் வெள்ளை வேட்டி, சற்று நேரத்தில் டு வீலரில் லத்தியுடன் வந்த இரவு ரோந்து காவலர் அவர்கள் அருகே வண்டியை நிறுத்தினார். முத்தரப்பு பேச்சு வார்த்தையாய் அந்தப் படலம் தொடர்ந்தது. சுகுமாருக்கு ஆர்வம் கூடிக்கொண்டே இருந்தது. சற்று நேரத்தில் ஆட்டோ அங்கிருந்து கிளம்பியது. டு வீலர் டேங்க் கவரிலிருந்து சிறிய பை ஒன்றை எடுத்தார் அந்த காவலர். வெள்ளை சட்டை ஆசாமி அதை நீண்ட நேரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல வாஞ்சையாய் வாங்கிக் கொண்டார். பையைப் பிரித்து தலையை கவிழ்ந்தார். பின்பு எல்லாம் சரியாக இருப்பது போலத் தலையை ஆட்டிக் கொண்டார். அவருக்குத் தேவையான ஏதோ ஒன்று அதில் இருந்திருக்க வேண்டும். சுகுமாருக்கு இன்னும் ஆர்வம் கூடிக் கொண்டே சென்றது. அடுத்த



வெள்ளை சட்டை சகிதமாக 50 வயது மதிக்கத்தக்க நபர் செல்போனில் பேசியபடி நின்றிருந்தார். அவரின் அருகே ஒரு ஆட்டோ வந்து நின்றது. ஆட்டோ டிரைவரும், அவரும் நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். “அவர்களுக்குள் ஏற்கெனவே அறிமுகம் இருந்திருக்குமா? ஆனாலும்கூட அர்த்த ராத்திரியில அப்படி என்ன முக்கியமான விஷயத்தை பேசிக்குவாங்க? ஒரு வேலை வீட்ல யாருக்காவது உடம்பு சரியில்லாமல் இருக்குமா? ஏதாவது கெட்ட சம்பவம் நடக்கப் போகுதா? அவருக்கு வேறு ஏதாவது பிரச்னை இருக்குமா? யாரையாவது எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்களா?” பாதாளக் கரண்டியின் முனைகளைப் போல கொத்து கொத்தாய் கேள்விகள் மனதை கிளறிக் கொண்டிருந்தன.


ஐந்து நிமிடங்களில் டு வீலரும் அங்கிருந்து கிளம்பியது. வெள்ளைச் சட்டை உருவமும் நகர்ந்து தூரத்து இருளில் மறைந்தது.

“அந்த பார்சலில் அப்படி என்னதான் இருக்கும்? பணம்... கஞ்சா... ச்சே, பிரியாணி பொட்டலமாகக் கூட இருக்கலாம்; இல்லைனா பிராந்தி பாட்டில் இருக்கும்! இந்த ராத்திரியில மனுஷன் வேற எதைத் தேடப் போறான். அப்படித்தான் இருக்கனுமா என்ன? அவர் தவற விட்டுட்டு வந்த பையா கூட இருக்கலாம். இல்லைன்னா, வீட்ல இருக்கறவங்களுக்கு தேவையான மருந்தா கூட இருக்கலாம்!” நானே கேள்வி நானே பதில் ரகத்தில் யூகங்களுக்கு விடையை நிரப்பிக் கொண்டிருந்தான்.

“தூங்காமல் விழித்துக் கொண்டிருக்க நான்

என்ன ஆந்தையா…? ஆமாம், ஆந்தை பகலிலாவது உறங்குமா?" மீண்டும் சுகுமாருக்கு கேள்விகள் முளைக்கத் தொடங்கின. யார் வரவையும் எதிர்நோக்காமல், தெரு முனைகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தூரத்தில் எச்சரிக்கைக்காக எழும்பிய நாய்களின் குரைப்புச் சத்தம் அவன் வசிக்கும் தெரு வரை கேட்டது. எதிர்வீட்டு நாய்களும் தங்கள் பங்கிற்கு குரைக்கத் தொடங்கின. வீட்டுக்கு எதிரில் உள்ள அப்பார்ட்மெண்ட்டில் சேரில் சாய்ந்து தூங்கிக்கொண்டிருந்த வயதான செக்யூரிட்டி வெளியே வந்தார். நாய்களை விரட்டி அடித்துவிட்டு மீண்டும் சேரில் சாய்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டார். மனசுக்குள்ளே ஆதங்கப்பட்டுக் கொண்டான் சுகுமார். மீண்டும் தெருமுனையையே



வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எனக்கு ஏன் தூக்கம் வரவில்லை? கடன் கழுத்தை நெறிக்கவில்லை. குடும்ப உறவுகளில் பெரிய விரிசல் இல்லை. வயிற்றைக் கழுவிக் கொள்ளும் அளவிற்குச் சம்பாதிக்கிறேன். என்னை விடக் கவலைகள் அதிகமாக இருப்பவர்கள் இந்த உலகத்தில் ஏராளம். அவர்களெல்லாம் உறங்குகிறார்களே… ஒருவேளை அவர்களும் உறங்குவதைப் போல நடிக்கிறார்களா?" வெட்ட வெட்டத் துளிர்க்கும் மூங்கில் போல் கேள்விகள் முளைத்துக் கொண்டே இருந்தன.

சுகுமாரின் மனக்குரங்கு பால்ய வயது கிளைகளில் துள்ளிக் குதிக்கத் தொடங்கியது. ஐந்து மணிக்கெல்லாம் எழுப்பி விட்டுப் படிக்கச் சொல்வார் அப்பா தங்கராசு. தூக்கம் கண்களை இழுத்துக் கொண்டே போகும். குரங்குகளை உச்சியில் ஏற்றிய சவுக்கு மரத்தைப் போல, சுகுமாரின் தலை சொக்கி மெல்ல கீழிறங்கும். ஓரிரு நொடிகளில் நெருப்பைத் தொட்ட விரல் போல வெடுக்கென மேலே நிமிரும். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மீண்டும் படிப்பான் சுகுமார்.

"அதிகாலையில படிச்சாதான் மனசுல நிக்கும். தூங்காம ஒழுங்கா படிடா சுகு." என அடிக்கடி மிரட்டல் தொனியில் சொல்வார் தங்கராசு. ஞாயிற்றுக்கிழமைகளில் கூட ஏழு மணிவரை தூங்க முடியாது. அதையும் மீறி தூங்கிவிட்டால் "தூங்கு மூஞ்சி… இப்படியே ஏழு மணிவரைக்கும் தூங்கினா தரித்திரம்தான் புடிக்கும்." என வசைபாடுவார்.

"ஒருநாளைக்காவது நிம்மதியா தூங்க விடறாங்களா?" என்ற ஆதங்கம் சுகுமாரின் மனதுக்குள் இருந்து கொண்டே இருக்கும். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்போது அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து படித்துக் கொண்டிருப்பான் சுகுமார். விடியற்காலை என்பதால் தூக்கம் கண்களைச் சொக்கும். தூக்கம் வராமல் இருக்க முன்னாள் இரவு பிளாஸ்க்கில் அம்மா டீ போட்டு வைத்துவிடுவாள். சுடச்சுட டீயைக் குடித்து வந்த தூக்கத்தை வலிந்து விரட்டி கண் விழித்து படிப்பான் சுகுமார். மதிய உணவு முடிந்து தொடங்கும் ஐந்தாவது பிரியட் தாவரவியல் வகுப்பில் ஒருநாள் சொக்கி விழுந்தபோது, "மக்கட்டை… மக்கட்டை… பெஞ்ச்சு மேல எழுந்து நில்லு அப்பதான் உனக்கு புத்திவரும்." பதினைந்து வருடங்களுக்கு முன்பு மூளை மடிப்புகளில் படிந்த துரைசாமி வாத்தியாரின் குரல் ரீவைண்ட் ஆனது. பள்ளி முடிந்ததும், அருகிலேயே டியூஷன் சென்றுவிடுவான். டியூஷன் முடிந்ததும் எட்டு மணி டவுன் பஸ்ஸில் வீடு திரும்புவான். ஒரு நாள் பேருந்தில் ஆழ்ந்து தூங்கிவிட்டான். இரண்டு மூன்று ஸ்டாப்பிங்கை கடந்து நடத்துனர் இறக்கி விட்டார். இரவு நேரத்தில் நடந்தே வீடு வந்து சேர்ந்ததெல்லாம் இப்போது நினைவிற்கு வந்து போனது.

கல்லூரி காலங்களில் ஹாஸ்டலில் படுக்கச் செல்லும் முன்பு ஆங்கிலப் புத்தகத்தை புரட்டுவான். அதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. படுத்தவுடனே தூக்கம் வருவதற்கு ஆங்கிலப் புத்தகம் அவனுக்குத்

துணையாய் இருந்தது. ஹாஸ்டல் நாள்களில் சிலநேரம் எட்டு மணிவரைகூட உறக்கம் இருக்கும். விடுமுறை தினமென்றால் பகலில் கூட நன்றாகத் தூங்கிப் பொழுதைக் கழிப்பான் சுகுமார். அதுதான் அவன் உறக்கத்தின் பொற்காலம்!

பக்கத்து அறையில் நண்பர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது நள்ளிரவில் காதில் தண்ணீர் ஊற்றிக் கதறவிடுவான் சுகுமார். 'டேய், நீ தூக்கமே வராம கஷ்டப்படுவடா... என்னோட சாபம் உன்னை சும்மா விடாது சுகு!' எனக் கல்லூரி நண்பன் பாலாஜி சாபமிட்டது நினைவிற்கு வந்தது. 'ஒருவேளை பாலாஜி இட்ட சாபம்தானா இது! ச்சே... அப்படியெல்லாம் இருக்காது... அவன் என்னைப் பற்றி என்னென்னமோ சொல்லி இருக்கிறான். எல்லாம் பலித்துவிட்டதா என்ன? தூங்கும் நாய் மேல தண்ணி ஊத்தி வெரட்டி இருக்கிறேன். வாலில் பட்டாசு கொளுத்தி தலை தெறிக்க ஓட விட்டிருக்கிறேன். அந்த நாய்ங்க ஏதாவது சாபமிட்டிருக்குமா?' எப்போதோ நடந்த சம்பவங்களையெல்லாம் குப்பையை கிளறுவது போல கிளறிக் கொண்டிருந்தது மனக்குரங்கு. நமட்டுச்சிரிப்பு சிரித்துக் கொண்டான் சுகுமார்.

இவையெல்லாம் நினைவிற்கு வந்ததால் தூக்கம் போனதா... இல்லை, தூக்கம் போனதால் இவையெல்லாம் நினைவிற்கு வந்ததா? இந்த கேள்விகளுக்கு அவனிடம் பதில் இல்லை. செல்போனை ஆன்செய்தான். 3.47 am... மீண்டும் ஹாலுக்கு வந்து ரிமோட்டை கையிலெடுத்தான். டிவியில் ஒளிபரப்பான பழைய பாடல்கள் அவனின் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தன. கீழ்வானம் வெளுக்கத் தொடங்கியது. வாகனங்களின் உறுமல்கள் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது.

'9.30 மணிக்கெல்லாம் போனாத்தான் அவரைப் பார்க்க முடியும் சுகு. லேட் ஆச்சுன்னா நான் பொறுப்பில்லை.' முந்தைய நாள் பாஸ்கர் அழுத்தமாகச் சொன்னது நினைவிற்கு வந்தது. காலை 8.10 ரயிலை பிடித்தால், ஒன்பது மணிக்கெல்லாம் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்துக்குப் போய்விடலாம். அங்கிருந்து ஆட்டோவில் ஐந்து நிமிடத்தில் அந்த இடத்திற்குப் போய்விடலாம் எனத் திட்டமிட்டுக் கொண்டான். தனக்குப் பிடித்த கருநீல கட்டம் போட்ட சட்டையோடு கிளம்ப ஆரம்பித்தான் சுகுமார். பீச் ஸ்டேஷன் வரை செல்லும் ரயிலுக்காக 7.50 மணிக்கே கூடுவாஞ்சேரி நடைமேடைக்கு வந்துவிட்டான்.

சுகுமார் ரயில் பயணம் தொடங்கிய நேரத்தில், வையாபுரியின் வாழ்க்கைப் பயணம் நிறைவு பெற்றிருந்தது. வார்த்தைகள் வராமல் கதறிக் கொண்டிருந்தாள் மஞ்சு. அடுத்தடுத்து வேலைகளில் எல்லோரும் மும்முரமானார்கள். "அவருக்கு நீயே தகவலை சொல்லிடும்மா..." என அங்கிருந்தவர்கள் சொல்ல, விசும்பிக் கொண்டே தலையசைத்தாள் மஞ்சு.

தாம்பரத்தை ரயில் நெருங்கிக் கொண்டிருந்தது. காலியான ஜன்னலலோர இருக்கையைப் பிடித்து அமர்ந்தான் சுகுமார். சுகுமாரின் செல்போன் அலறியது...

"தாம்பரம் தாண்டி வந்துகிட்டு இருக்கேன் சார். ஃபிப்டீன் மினிட்ஸ் முன்னாடியே அங்க இருப்பேன்."

"ஓகே... ஓ.கே... நானும் கிளம்பிட்டேன்."

பாஸ்கருக்கு பதில் அளித்துவிட்டு செல்போனை தற்காலிகமாக சைலன்ட் மோடுக்கு மாற்றிக் கொண்டான் சுகு. ரிலாக்ஸாக சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு, அவருடன் என்ன பேசுவது, அடுத்ததாக என்ன செய்யவேண்டும் என்பது பற்றி நினைக்கத் தொடங்கினான். 'வேலை கிடைச்சதும் மொதல்ல மஞ்சு நகையை மீட்டுக் கொடுத்துடனும். ஒன்னுத்துக்கும் உதவாத அந்த பழைய பைக்கை வித்துட்டு லேட்டஸ்ட் புல்லட் ஒன்ன வாங்கிடனும். கீர்த்தனாவையும் சி.பி.எஸ்.சி ஸ்கூல்ல சேர்த்துடலாம்.' என மனசுக்கு மனு போட்டுக் கொண்டிருந்தான் சுகு.காலை 9.40-க்கு சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் 'செங்கல்பட்டு வரை செல்லும் அடுத்த மின் தொடர்வண்டி இன்னும் சற்று நேரத்தில் இரண்டாவது நடைமேடையிலிருந்து புறப்படும்.' என வழக்கம் போலப் பயணிகளுக்கான அறிவிப்பு ஒலித்துக் கொண்டிருந்தது. மஞ்சுவிடமிருந்தும், பாஸ்கரிடமிருந்தும் தொடர்ந்து அழைப்புகள் வந்து கொண்டே இருந்தன. ஆனால் இவை எதுவும் சுகுமாரின் காதுகளுக்கு எட்டவில்லை.

ஜன்னலோர இருக்கையில் சாய்ந்தபடி ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் சுகுமார்! இரவெல்லாம் தேடி அலைந்த நித்திராதேவி அவனை ஆரத் தழுவிக் கொண்டிருந்தாள். ●

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்



சந்தாதாரர் ஆகுங்கள்!

ஊர் கூடி தேர் இழுப்போம் வாருங்கள், ஆன்மிகமும் தேசியமும் தம்முடைய இருவிழிகளாகக் கொண்ட அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள், ஆன்மிகத்துக்கு வள்ளலாரையும், தேசியத்துக்கு அண்ணல் காந்தியடிகளையும் வழிகாட்டியாகக் கொண்டவர். தமிழ்ச் சமூகத்தின்பால் ஆழ்ந்த அன்பும் பற்றும் கொண்டிருந்தவர். அந்த வகையில், தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள விஷயங்களைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் அருட்செல்வர் அவர்களால் கடந்த 1983-ம் வருடம் தை மாதம் ஆன்மிகம், கலை, இலக்கிய மாத இதழாகத் தொடங்கப்பட்டதுதான் உங்கள் 'ஓம் சக்தி' மாத இதழ்.

தரம் குறையாமலும், நம்முடைய கலாசாரம், பாரம்பர்யம் ஆகியவற்றின் தொன்மையை எடுத்துச் சொல்லும் வகையிலும் கடந்த 39 வருடங்களாகத் தொடர்ந்து ஓம் சக்தி மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அருட்செல்வர் எந்த லாபநோக்கமும் இல்லாமல் தொடங்கிய இந்த இதழை அவரைத் தொடர்ந்து சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், இதழ் நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் சிறப்பான முறையில் கொண்டு வருகிறார்.

கடந்த ஏப்ரல் இதழில் இருந்து 'ஓம் சக்தி' இதழ், ஆன்மிகம், தேசபக்தி, மருத்துவம், சாதனைப் பெண்கள் என்று மிகத் தரமாக வெளிவருவதாகப் பல தரப்பில் இருந்தும் வெளிப்படும் பாராட்டுகள் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவே செய்கிறது. அதே நேரம், ஓர் இதழை லாப நோக்கம் இல்லாமல் நடத்துவது என்பது ஊர் கூடி தேர் இழுப்பதைப் போன்றதுதான். அந்த வகையில் நாங்கள் வாசகர்களின் பேராதரவை எதிர்பார்க்கிறோம். மதிப்புக்கு உரிய சந்தாதாரராக ஓம் சக்தி இதழுடன் இணைந்து பயணிக்க அன்புடன் அழைக்கிறோம்.

சந்தா விவரம்	
1 வருடம்	ரூ.180/-
3 வருடம்	ரூ.500/-
5 வருடம்	ரூ.800/-
ஆயுள் சந்தா (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)	ரூ.2,500/-

சந்தா தொடர்பான விவரங்களுக்கு : 0422 - 4322471

சந்தா விவரம்

☐ 1 வருடம் - ரூ.180/- ☐ 3 வருடம் - ரூ.500/- ☐ 5 வருடம் - ரூ.800/- ☐ ஆயுள் சந்தா- ரூ.2,500/- (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)

வாசக அன்பர்கள் இந்த சந்தா ஃபாரத்தை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை M.O/Cheque/D.Dயாக 'SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI' என்ற பெயருக்கு எடுத்து ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

பெயர்:..

முகவரி:..

செல்பேசி:.................... மின்னஞ்சல்:....................

சந்தா விவரம்:..

செ.சரத்



இளமையை மட்டும் வசப்படுத்தும் தன்மையை இறைவன் அருளி இருந்தால் என்றோ இவ்வுலகம் புத்துயிர் பெற்றிருக்கும். ஏனென்றால் அன்றைய நாளில் நிகழ்ந்த தேச விடுதலை புத்துணர்ச்சி தொடங்கி இன்றைய நாளில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு புரட்சி வரையில் வித்தாய் இருந்து வீரியமாய் வெகுண்டு எழுந்த படைதான் இந்த இளைஞர் படை.



இளங்காற்று வீசுதே!

ஏன் 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்னும் கூற்றுக்கு இணையானதுதான் இளைஞர் தேசம். அதிலும் நாம் மார் தட்டி பெருமைபட சொல்லலாம் நம் பாரத தேசம் அறுபது சதவீத இளைஞர்களை கொண்டுள்ள தேசம் என்று. அப்படிப்பட்ட தேசத்தில் உள்ள இளைஞர்களின் வழியில் ஒரு சிறிய பயணம்...

புரியாத புதிர்

இன்றைய இளையவர்களை முதலில் புரிந்துகொள்வதே கடினம்தான். அதைவிட அவர்களை புரிந்துகொண்டு ஏற்று நடப்பவர்கள் மிகச் சிலரே. அதற்கான காரணங்கள் குடும்ப பிரச்னை, கருத்து வேறுபாடு, காதல் பிரச்னை, சமூக பிரச்னை என்று பிரச்னைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். எதுவாயினும் பிரச்னைக்கான தீர்வு அவர்களிடத்தில்தான் உள்ளது. இவ்விடத்தில் ஒரு சிறிய உதாரணத்தை கூறுகிறேன். இன்றைய சமூகம் மாணவர்களிடத்தில் மதிப்பெண் ஒன்றையே பிரதான ஒன்றாக எதிர்பார்க்கிறது. அப்படித்தான் ஒருவர் பத்தாம் வகுப்பில் 76% பெற்று தேர்ச்சியடைகிறார். அதனைக் கண்ட அவரின் உறவினர்கள் ஆறுதல் கூறி சற்றே பாராட்டுகின்றனர். மேலும் ஒருவர், 'நல்ல மதிப்பெண் எடுத்திருந்தால் டாக்டர் ஆகியிருக்கலாம். பரவாயில்லை எதற்கும் வருத்தப்படாதே' என்று வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுகிறார். இவற்றையெல்லாம் அவர் பொருட்படுத்தாமல் அடுத்த கட்ட வாழ்க்கையை நோக்கி பயணப்படுகிறார். பின்பு இதுநாள்வரை யில் யாருமே அவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண்ணை கேட்டதே இல்லையாம். எப்படிக் கேட்பார்கள், அவர்தான் தற்பொழுது எழுத்தாளர் சேத்தன் பகத் (Chetan Bhagat) ஆயிற்றே. எனவே மனிதன் மனிதனுக்கு காட்டிய வழிமுறைப்படி ஒன்றை மறக்க மற்றொன்றை சிறப்பாய் செய்துவிட்டால் போதும், இயல்பாகவே அங்கு மனிதம் பிறந்துவிடும். இப்படித்தான் இறைவன் நியதியை வகுத்துள்ளான் போலும்.

இயக்கும் இணையம்

தற்போதைய காலப்போக்கில் பல இளைஞர்களையும் இயங்க வைப்பது சமூக இணையதளங்களே ஆகும். வீரம்,விவேகம் என்று விளையாடிய இளைய தலைமுறையை இன்று சமூக வலைதளங்கள் ஆக்கிரமித்து விட்டன. ஒரு காலத்தில் ஓடியாடித் திரிந்த இளமையின் வசீகரம் தற்போது இல்லை.ஏன், இல்லை என்பதைவிட அதற்கு உண்டான சூழலை தற்போதைய தலைமுறை வழங்கவில்லை. உடனே இதனை படிப்பவர்களுக்கு ஒரு கேள்வி எழும்பலாம். 'இணையதளம் இல்லாமல் எப்படி உலக நடப்பை அறிய முடியும், வர்த்தகம், வாணிபம் போன்றவை நடைபெறும் என்று?' ஆம். இவ்விடத்தில் இணையத்தை முழுமையாகக் குற்றம் சுமத்துவதற்கு அறிவார்ந்த இளமை என்னை அனுமதிக்கவில்லை. ஏனெனில் அந்த அறிவார்ந்த இளமைதான் விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைத்தது,கால நேரத்தை துரிதமாக்கியது, மானுடம் பிழைக்க வழிகோலியது, காற்றையும் மின்சாரமாக்கியது, ஒருபடி சோறை இருபடியாக்கியது. ஏன், மனிதனின் உடம்பையும் நகல் எடுத்து அச்சாக்கியது. இப்படி இணைய வழிவந்த இளமையின் தேடல்கள் ஏராளம். இருந்தும் ஒருசிலவற்றில் புதைகுழியில் செடி வளர்த்த கதைதான் ஆகிக்கொண்டிருக்கிறது.

வழிகாட்டிகளின் வழி

இந்த வழிகாட்டிகளின் வழியில் முதலாவதாக பெற்றோர். யார் அவர்கள்? தங்களின் கனவை மறந்து அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தையே கனவாய் சுமக்கும் புண்ணியவாதிகள். இருந்தும் என்ன பயன்? சில சமயங்களில் உங்களின் கனவு களுக்கு எங்களால் உயிரூட்ட முடிவதில்லை. ஆயினும், எங்களின் அரும்பெரும் கனவுகளின் விழுதுகளாய் வலம் வரும் எழுத்தாளர், ஓவியர், புகைப்படக் கலைஞர், பேச்சாளர், விளையாட்டு வீரர் என்று மனதுக்குள் பூட்டிவைத்து சொல்லிக்கொள்ளாத ஆசைகளுடன் உயிரூட்டுகிறோம். எனவே, அன்பான பெற்றோர்களே உங்களின் ஆசையும் எங்களின் கனவும் உயிர்ப்பிக்க வாழ்த்துங்கள். அதுவே எங்களின் காலம் காட்டும் கலங்கரை விளக்காய் அமையும்.

இரண்டாவதாக ஆசிரியர். சொல்லிய சொல்லுக்கு எதிர்க்கேள்வி கேட்கும் மாணவனை சற்றே முறைத்தாலும் உங்களின் ஆழ்மனதில் நாங்கள் அக்கணமே பதிந்துவிடுவோம் என்பதை நன்கு அறிவோம். ஒரு அறிவுசார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கும் வர்க்கத்தை வார்த்தெடுக்கும் மதிப்புமிகு ஆசான்கள் நீங்கள். உங்களின்



வழித்தோன்றலில் எங்களின் ஞானோதயம் பிறக்கிறது.

அப்படி இல்லையென்றால் ராமகிருஷ்ணரைத் தொடர்ந்து விவேகானந்தர், விவேகானந்தரைத் தொடர்ந்து அப்துல் கலாம், அப்துல் கலாமைத் தொடர்ந்து இந்த மாபெரும் இளைஞர் கூட்டம் என்னும் வழித்தடம் உருவாகி இருக்காது. இவற்றைக் கடந்தும் இன்றும் இளமை வீணடிக்கப்படுகிறது என்றால் அங்கு சரியான வழிகாட்டி இல்லையென்றுதான் அர்த்தம். அதனால்தான் சரியும் தவறாகிறது, தவறும் மேலும் தவறாகிறது. எனவே தவறுக்கு முற்றுப்புள்ளி வைக்க உங்களின் அருள்வாக்கை பாகுபாடின்றி அனைவருக்கும் உபதேசியுங்கள். மறவாமல் மதிப்பெண் மட்டுமே உன்னை எதிர்காலத்தில் அடையாளம் காட்டாது என்பதை மாணவர்களிடம் சொல்லி அவர்களின் மதிப்புமிக்க எதிர்காலத்திற்கு விதை போடுங்கள். ஏனென்றால் உங்களின் வீச்சு எங்களின் வழித்தடம்.

மூன்றவதாக சமூகம். யாரைச் சொல்வது, எதற்காக சொல்லலாம், எப்படி சொல்லலாம் என்பதை கூறுபோட்டு விற்கப்படும் ஒரு பாரம்பரிய நாகரிக இடம். காரணம் ஏதும் அறியா குருட்டு மனப்பான்மை. முதியவர் சாலையைக் கடக்க ஓடிப்போய் மனமுவந்து உதவும் வாலிபனையும் பார்த்துள்ளேன், அதே சாலையில் ஒரு பெண்ணிடம் நகையை பறித்துச் செல்லும் வாலிபனையும் கண்டுள்ளேன். இருவருமே இளைஞர் என்னும் வர்க்கம்தான். ஒரே சமுதாயத்தில் வளர்ந்தவர்கள்தான். ஆயினும் பண்பும், சூழ்நிலையும் அவர்களை வேறுபடுத்தியது,


பொறுப்பான பொறுமை

இன்றைய இளைஞர்களிடத்தில் அவசரம் என்பது மிக அவசரமாகவே உள்ளது.காரணம் அதுவும் அவசரம்தான்.நிதானமாய் உண்பது, திருப்தியாய் சாப்பிடுவது, நிம்மதியாய் தூங்குவது என இவற்றைக் கடந்துதான் இன்றைய இளைஞர்களின் வாழ்வு இருந்து வருகிறது. தோனியின் பொறுமையில்தான் இந்தியாவின் உலகக் கோப்பை மின்னியது. ஆகவே பொறுமையை மட்டும் ஒருபோதும் இழந்துவிட வேண்டாம்.ஏன் என்றால் பொறுமை கடலினும் பெரியது.

சாதனையின் சபதம்

இவ்வுலகில் தோன்றினால் புகழோடு தோன்ற வேண்டும். இல்லையென்றால் தோன்றாமையே நன்று என்று வள்ளுவர் கூறியுள்ளார். இதனை செயல்படுத்தும் கடமை என்பது ஒவ்வொரு இளைஞரிடத்திலும் உள்ள சபதம் ஆகும். இன்றைய இளையவர்களிடம் முயற்சி என்பது சற்றே குறைந்துள்ளது. அதற்கு முழுமுதற் காரணம் சமூகம்தான். ஒரே ஒருமுறை தோற்று விட்டால் போதும் உடனே, 'இவனா, இவன் எதற்கும் சரிப்பட மாட்டான், ராசியில்லாதவன், பொறுப்பு இல்லாதவன் என்று வசைபாடுகிறோமே தவிர பலரும் வேறென்ன செய்கிறோம். எனவே, இனியேனும் தோற்றவர்களிடம், 'பரவாயில்லை, மறுபடியும் முயற்சி செய்' என்னும் மந்திரச்

சொற்களைச் சொல்லுங்கள், அன்பான ஆதரவைத் தாருங்கள், மீண்டும் ஊக்கப் படுத்துங்கள். அந்தக் கணத்திலேயே அவர்கள் வெற்றிவகை சூடியதாய் எண்ணி மகிழ்வார்கள்.



இனிமையான இளமை

சக தோழனே/தோழியே இதுவரை நான் கூறியதெல்லாம் ஓர் அறிவுரையாக தென்படலாம், அறுவையாக அறுபடலாம். எனவே அதனை பூமாலையாய் சூடினாலும் சரி, உதிரிப் பூவாய் உதிர்த்தாலும் சரி எதுவாயினும் அது உங்கள் விருப்பம். இருப்பினும் பூவாய் என்றும் மலர வேண்டிய தருணத்தில் தற்போது நானும் உள்ளேன். ஏன் என்றால் இளமை என்னும் ஒரு தார்மிகப் பொறுப்பை நானும் தற்போது சுமந்து வருகிறேன். அதனால்தான் என்னவோ ஒரு சிலவற்றை உங்களிடம் பகிர்ந்தேன். இறுதியாய் ஒரு சில பார்வைகள்:

- உங்களுக்குப் பிடித்தவற்றில் எது சரி என்று படுகிறதோ அதனை தாராளமாய் செய்யுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் யார் என்பதை உங்களால் உணர முடியும்.

- அதிகாரத்தில் உள்ளவர்களால்தான் எதையும் செய்யமுடியும் என்று எண்ணி விடாதீர்கள். ஏன் அந்த அதிகாரத்தில் இருப்பவர்களும் ஒருநாள் சாதாரண மனிதராய் இருந்தவர்கள்தான்.

- அரசியல் பேசுங்கள்.அதனை நாகரிகமாய் கையாளுங்கள். ஏன் நாளைய தலைவர் நம்மில் ஒருவராகக்கூட இருக்கலாம்.

- தவறைத் தட்டிக் கேளுங்கள்.அதனை மட்டும் என்றும் தட்டிக் கழித்து விடாதீர்கள்.

- சுதந்திரமாய் முடிவு எடுங்கள்.உங்களின் முடிவு சுதந்திரமாய் இருக்கும் பட்சத்தில் அதனை எவராலும் தடுத்துவிட முடியாது.

- ஒருபோதும் தவறான முடிவுகளை எண்ணாதீர்கள். அப்படி எண்ணினால் உங்களை நீங்களே இழக்கிறீர்கள் என்று அர்த்தம்.

- அறிவார்ந்த உலகம். அறிவார்ந்த மனிதர்கள்.எனவே உங்களை நீங்களே செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.

- மதிப்பை தலையில் வைத்து, தலைக்கனத்தை காலின் கீழ் வையுங்கள்.


- தீண்டாமையை தகர்த்தெறியுங்கள். வீண்பேச்சுகளை விட்டொழியுங்கள்.

- சமுதாயத்தில் உங்களை அடையாளப் படுத்துங்கள்.

- தோழமையை நேசியுங்கள், பாராட்டுங்கள், ஊக்கப்படுத்துங்கள், கொண்டாடுங்கள்.

இவைதான் ஓர் இளைஞனின் பார்வையில் என்றும் இருக்கவேண்டியவை.எனவே இளைஞனே, பின்னாளில் நம் இளமையை எண்ணிப் பார்த்து நாம் பெருமை அடைய வேண்டும். ஏன் என்றால் நமக்குக் கடவுள் கொடுத்த வாழ்க்கை ஒன்றுதான். அதில் இளமை போனால் வராது.வந்தால் திரும்பிவிடும். மொத்தத்தில் இளமை இனிமையான இளமைதான்!

கட்டுரையாளர்
வேளாண் ஆராய்ச்சியாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003



ரசித்து ருசிப்போம்

குதிரைவாலி கேழ்வரகுக் கூழ்

தேவையானவை:

கேழ்வரகு மாவு	- 200 கிராம்
குதிரைவாலி	- 50 கிராம்
பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம்	- 100 கிராம்
தயிர்	- தேவையான அளவு
உப்பு	- தேவையான அளவு

கூழ் செய்வதற்கு முதல்நாள் இரவே கேழ்வரகுடன் தண்ணீர் சேர்த்து திடமாகக் கரைத்து மூடி வைத்துக் கொள்ளவும். மறுநாள் காலை மாவு புளித்துவிடும். குதிரைவாலியை தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவிய பிறகு போதுமான தண்ணீர் விட்டு அரைவேக்காடு அளவுக்கு வேகவைத்து, அத்துடன் கரைத்து வைத்திருக்கும் கேழ்வரகு மாவைச் சேர்த்து மிதமான தீயில் வைத்து கெட்டியாகும் வரை வேக வைக்கவும். கூழை ஒரு கரண்டியில் சிறிது எடுத்துத் தொட்டுப் பார்த்தால் கையில் ஒட்டாத பதத்தில் இருக்கவேண்டும். நன்றாக வெந்த பிறகு அத்துடன் தேவையான தயிர், பொடியாக நறுக்கிய சின்னவெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கரைத்தால் சுவை யான குதிரைவாலி கேழ்வரகுக் கூழ் தயார்.

கேழ்வரகு சப்பாத்தி

தேவையானவை:

கேழ்வரகு மாவு, கோதுமை மாவு, வெந்தயக்கீரை மூன்றும் சம அளவில் எடுத்துக்கொள்ளவும்.

கடலை எண்ணெய் - சிறிதளவு,

உப்பு - தேவையான அளவு

கேழ்வரகு மாவு, கோதுமை மாவு, வெந்தயக்கீரை ஆகியவற்றை சிறிது உப்பு, தண்ணீர் சேர்த்து பிசைந்து 30 நிமிடம் ஊற வைக்கவும். பின் அவற்றை சிறு உருண்டைகளாக உருட்டி மனையில் வைத்து பூரிக்கட்டையால் சப்பாத்தி போல் தேய்த்துக்கொள்ளவும். பிறகு தோசைக்கல்லில் போட்டு, இரண்டு பக்கமும் எண்ணெய் விட்டு வேகவிட்டு எடுக்கவும். வழக்கமான கோதுமை சப்பாத்தியை விடவும் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துகள் கொண்டிருப்பதுடன், சுவையும் அபாரமாக இருக்கும். •





புத்தக
மதிப்புரை

விஜயபாரதம் தீபாவளிமலர் எப்போதும் போல் இந்த ஆண்டும் புதுப்பொலிவுடன் வந்திருக்கிறது. 316 பக்கங்கள் கொண்ட இந்த மலரில், தேச விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளின் வரலாறு நம்மை அந்தக் காலத்துக்கே அழைத்துச் செல்வது போல் இருக்கிறது.

ஆன்மிகத்துக்கும் குறைவில்லை என்பதுபோல், ஆன்மிகம் சார்ந்த ஸ்ரீராம பட்டாபிஷேகம், கௌதம நீலாம்பரனின் நரகாசுரன் - புதிய சிந்தனை மேலும் மலருக்கு அழகு சேர்க்கிறது. முல்லைப் பெரியாறு கட்டுரை, 95 வயதான டாக்டர் ஹெச்.வி. ஹண்டே அவர்களின் 70 ஆண்டுகால பொது வாழ்க்கையின் அனுபவங்கள் என மலர் வாசகர்களை கவரும் வண்ணம் உள்ளது.

புதுமைப்பித்தன், ஆர் சூடாமணி, பி.எஸ். ராமையா. லா.ச.ரா, ராஜேஷ்குமார் உள்ளிட்ட பிரபலமானவர்களின் தேர்ந்தெடுத்த 13 சிறுகதைகள் சிறுகதைப் பிரியர்களுக்கு நல்ல விருந்து. ஈசன் எழுதிய விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள்- சுதந்திரத்திற்காக பாடுபட்ட பத்திரிகைகள் எதிர்கொண்ட சிரமங்களை அறிய உதவியது.

“விஜயபாரதம் தீபாவளிமலர்-2021”.
வெளியீடு. விஜயபாரதம்
தேசிய வார இதழ், சென்னை-6000084.
விலை ரூபாய்.100.






வள்ளலாரின்
சிதம்பர தரிசனம்...

சிதம்பர ரகசிய ஒடுக்கம் என்பது துரியாதீத நிலை. சுட்டு நிலை அகன்று, உருவம் அகன்று, அருவும் அகன்று, ரகசிய ஐக்கியம் பெறுவதே துரியாதீத நிலை. இதனை திருச்சிற்றம்பல தெய்வமணி மாலையிலும், சற்குரு மணிமாலையிலும் வள்ளலார் பெருமான் பாடியிருக்கிறார். இந்த நிலை ஏழு திரைகளையும் கடந்த நிலை.

நடராஜப் பெருமானை தரிசிக்கும்போது கண் மறைந்து, கலை மறந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து இறுதியில் ஜோதி மயமாகத் தோன்றி இறுதியில் அதுவும் மறைந்து எல்லாமாய்த் தாமாய் இறை ஐக்கியம் ஏற்படவேண்டும். இப்படி ஓர் அதி அற்புத தரிசனம் வள்ளலார் பெருமானுக்கு ஏற்பட்டது. தம்முடைய அந்த அனுபவம் பற்றி ‘இறைவன் தன்னை ஈர்த்து ஐந்தொழில் நீ இயற்று’ என்று அருள்வடிவப் பேறு என்ற பகுதியில் பாடியுள்ளார். •

எஸ்.கண்ணன்கோபாலன் | படங்கள்: குடந்தை ப.சரவணன்





ஏரகம் ஏர்-அகம்: ஏர்- அழகிய: அகம்-முருகன் அமர்ந்த இடம். அழகுக்கே நாயகனான முருகப் பெருமான் திரு என்னும் செல்வம் பொழிய அமர்ந்த இடமே, இந்த சுவாமிமலை. இதற்கு குருமலை, தாத்ரிகிரி, சுந்தராசலம், சிரகிரி, சிவகிரி போன்ற பல பெயர்களும் உண்டு. ஆறுபடை வீடுகளில் வரிசைப்படி சுவாமிமலை நான்காவதாக இருந்தாலும் ஈசனுக்கே ஞானம் சொன்ன குருவாக உயர்ந்த நிலையில் நின்றதால் இது ஆறுபடைவீடுகளில் தனிசிறப்புப் பெற்றதாகத் திகழ்கிறது!

ஆம்; சூரபத்மனை அழிப்பது, வள்ளி-தெய்வ யானையை மணப்பது, பழம் உதிர்த்து விளையாடுவது, தந்தையுடன் கோபித்துக் கொள்வது ஆகிய குழந்தை விளையாட்டு, இளங்குமர விளையாட்டுக்களை விட, சர்வேசுவரனான தந்தைக்கே குருவாய் நின்று விளையாடிய அருட்சிகர திருவிளையாடல் உன்னதமானது அல்லவா?

இந்தத் தலத்தில் படிகள் அமைந்திருப்பதே ஒரு புதுமை. இரண்டு கட்டாக அறுபது படிகள் அமைந்திருக்கின்றன. இந்த அறுபது படிகளும் அறுபது வருடங்களைக் குறிக்கின்றன.

ஒவ்வோர் ஆண்டின் பெயரும் ஒவ்வொரு படியில்

சிவன் உகந்தேற்ற சாபம் நீங்கிய படைவீடு!







குறிக்கப்பட்டிருகின்றன. அந்தந்த ஆண்டின் தேவதைகள் அங்கு அருளோடு காவல் புரிவதாக ஐதிகம்.

ஒருமுறை அந்த அறுபது படிகளிலும் ஏறி, குருநாதனைத் தரிசித்துவிட்டால், எந்த ஆண்டு பிறந்திருந்தாலும், அந்த ஆண்டுக்குரிய தேவதைகளின் அனுக்கிரகம் பெற்று உய்வார்கள் என்று விளக்கம் தருகிறார் ஆலய அர்ச்சகர்.

அவர், சிவபெருமானுக்கு முருகபெருமான் பிரணவத்தை உபதேசித்த சம்பவத்தையொட்டி இன்னொரு தெய்விக வரலாற்றுச் செய்தியும் கூறுகிறார். அது...

ஒருமுறை பிருகுமகரிஷி ஒரு தவத்தை மேற்கொண்டிருந்தாராம்... அது மகா உக்கிரத் தவம். அது முழுமையாக நிறைவேறிவிட்டால் உலகமே அந்த தவத்தின் தீட்சண்யம் தாங்காமல் பஸ்பமாகி விடும் என்ற பேரபாய நிலை.

இந்தத் தவத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நெருக்கடி தேவர்களுக்கு ஏற்பட்டது. மும்மூர்த்தி களை அணுகினர்.

சிவபெருமான் ஒருவராலேயே அதைத் தடுக்க முடியும் என்று அனைவரும் முடிவு செய்தனர். எனவே, பிருகு மகரிஷியின் தவத்தைப் பற்றி இறைவனிடம் முறையிட்டனர். சர்வேஸ்வரன் அவர்கள் முறையீட்டைக் கேட்டு புன்னகைத்தபடி,

"முனிவர்களின் தவத்தை தேவாதி தேவர்கள் மட்டுமல்ல, நாம் தடுக்க முயன்றாலும், அதற்கேற்ற பலாபலன்களைச் சந்தித்துதான் ஆகவேண்டும். அது ஒரு சத்திய தர்மம். அதை சர்வேஸ்வரன் கூட மீற முடியாது. ஆனால், பிருகு முனிவரின் தவத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். முன்பு உலக நன்மைக்காக ஆலகால விஷத்தை விழுங்கியதுபோல் இப்போது பிருகு முனிவரின் தவத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்படும் சாபத்தையும் நானே ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அந்த தவபூமிக்குச் சென்றார்.

தவமுனிவரான பிருகுவின் உக்கிர தவத்தைக் கலைத்தார். அதன் காரணமாக ஒரு தண்டனையும் பெற்றார் ஈசன். அதாவது...

ஈசனின் பிரம்ம ஞானமே அவருடைய நினைவிலிருந்து மறந்து போய்விட்டது.

அப்படி மறந்துபோன பிரம்ம தத்துவத்தை ஈசன் திரும்பப் பெறுவதற்காகத்தான் முருகப் பெருமான், சுவாமிக்கு பிரணவத்தை



உபதேசித்தாராம். ஆக, சிவபெருமான் தான் உகந்து ஏற்றுக்கொண்ட சாபம் நீங்கப் பெற்ற தலம் இது!

இரண்டு சுற்றாக இருக்கும் அறுபது படிகளில் ஏறிச்சென்றால் அங்கே 'நேத்திர விநாயகர்' என்ற பெயரில் தெற்குமுகமாக எழுந்தருளியிருக்கிறார். அப்படித் தெற்குமுகமாய் விநாயகர் இருப்பது இந்தத் தலத்தின் சிறப்பம்சம்

தெற்கு என்பது யமனுடைய திசை. மக்களுக்கு மரண பயம் உண்டாக்கும் என்பார்கள். அந்த திசையை நோக்கி விநாயகப் பெருமான் அமர்ந்திருக்கிறார் என்றால் அதற்குமேல் நமக்கு என்ன காவல் வேண்டும்?

விநாயகரைத் தரிசித்து தங்க முலாம் பூசப்பட்டுள்ள துவஜஸ்தம்பத்தைக் கடந்து உள்ளே சென்றால், முருகப்பெருமானின் வாகனங்களில் ஒன்றான யானையைக் காணலாம். கந்தபுராணத்தில் முருகனுக்கு யானையும் ஒரு வாகனம் என்று கூறியிருக்கிறது. அதற்கேற்ப இங்கு யானை வாகனமாக இருக்கிறது.

அதற்குத் தலவரலற்றில் இன்னொரு செய்தியும் இருக்கிறது.

ஒருமுறை இந்திரனுக்கு ஒரு பிரச்னை.

ஹரிகேசன் என்ற கொடிய அரக்கனிடம் போரிட்டு தன் வலிமையையும், தன் படை வலிமையையும் இழக்கிறான். அப்போது அவனுக்கு அசரீரியாக ஒரு வாக்கு கிடைக்கிறது: "ஈசனுக்கே குருவாய் அமர்ந்த பெருமையை முருகனுக்களித்த சிறப்புத் தலம் சுவாமிமலை. அங்கு சென்று முருகனை வழிபட்டால், இறைவன் அருளால் ஒவ்வொரு சக்தியும் பன்மடங்காகப் பெருகும். ஏழை வணங்கினால் செல்வந்தன் ஆவான். அஞ்ஞானி அங்கு சென்று ஞானியாவான். அதுபோல் உடல் வலிமை இழந்தவர் சென்றால் பெரும் வலிமை பெறுவார். நீயும் அங்கு சென்று சுவாமிநாதனைப் பணிந்தால் பழைய பலத்தைப் பெறுவாய்."

இந்த அருள்வாக்கு கேட்டு, இந்திரன் சுவாமிமலைக்கு வந்தான். மனோ- வாக்கு-காயம் சுத்தமாக அருந்தவம் இயற்றி அம்பிகைபாலன் அருள் பெற்றான்.

சுவாமிமலை வாழ் சுவாமிநாதன் பேரருளால் மீண்டும் தன் வலிமையைப் பெற்றான். அதன் நினைவாக 'ஐராவதம்' என்ற தனது வெள்ளை

யானையை முருகப்பெருமானுக்கு காணிக்கை யாகச் செலுத்திவிட்டுச் சென்றான். அந்த ஐராவதம் என்ற வெள்ளை யானையே இன்றும் இறைவன் சந்நிதியில் மயிலுக்குப் பதிலாக இடம் பெற்றிருக்கிறது.

இந்திரனைப் போல் பல்வேறு தேவதைகளும் இந்த ஆலயத்தில் பல்வேறு சிறப்பம்சத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

பூமாதேவி இந்தத் தலத்தின் தலவிருட்சமாகவே மாறியிருக்கிறாள். ஒருமுறை சிவபெருமானு டைய நெற்றிக்கண் தீப்பொறிகளால் பூமாதேவி பாதிக்கப்பட்டாளாம். அதற்குப் பரிகாரமாக இந்தத் தலதிற்கு வந்து, முருகப்பெருமானை வணங்கினால் பாதிப்பு நீங்கப் பெறும் என்று அவளுக்கு மகாவிஷ்ணுவே ஆலோசனை கூறி அனுப்பினாராம். அதன்படி இங்கு வந்து முருகப் பெருமானை பூஜித்து நிவாரணம் பெற்ற பூமாதேவி அந்த இடத்தை விட்டு நீங்க மனமில்லாது இந்தத் தலத்திலேயே தல விருட்சமான நெல்லி மரமாக மாறிவிட்டாள்.

தலவிருட்சம்போல் தலத்திலுள்ள தீர்த்தங் களுக்கும் விசேஷ தெய்விக வரலாற்றுச் சிறப்புகள் அமைந்திருக்கின்றன இந்தத் தலத்தில். இந்தத் தலத்தில் உள்ள வஜ்ர தீர்த்தம் பிணிநீக்கும் சக்தி பெற்றதாம். ஒருமுறை யக்ஞமித்திரன் என்பவன் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்து சுவாமிநாதனின் அருளைப் பெற்று, தன் மகனுக்கு பேச்சு வரப்







பெற்றானாம்.

'நேத்திர புஷ்கரணி' என்று இன்னொரு தீர்த்தம். ஒருமுறை கொங்கு நாட்டுப் பிரமுகர் ஒருவர் தனது பிறவிக் குருட்டுத் தன்மையை இந்த புஷ்கரணியில் தீர்த்தமாடி, விநாயகப் பெருமானைத் தரிசித்தபோது நீங்கப் பெற்றாராம். அதனால்தான் அந்த புஷ்கரணிக்கு 'நேத்திர புஷ்கரணி' என்று பெயர். விநாயகருக்கு 'நேத்திர விநாயகர்' என்று பெயர். மேலும் குமாரதாரை, சரவண தீர்த்தம், பிரம தீர்த்தம் என்று பல தீர்த்தங்கள் உள்ளன.

இறைவனின் கருவறையை வலம் வரும்போது கோஷ்டங்களில் முருகப்பெருமானின் திருவடிவங்களே காட்சி தருகின்றன. அந்தக் கருவறை மண்டபத்தில் கண்கொள்ளா அழகுத் திருக்கோலத்தில் ஒரு தேவி அமர்ந்திருக்கிறாள்.









அவள் வேறு யாராக இருக்க முடியும்?

அந்த ஞானத் திருக்குன்றத்தில் தென்றலிலே ஞானம் கமழும் அந்தத் திருத்தலத்தில் ஞானகுருநாதனாக ஐயன் முருகப்பெருமான் அருளோச்சி நிற்கும் அந்தப் புனிதத் திருத்தலத்தில் ஞானமாகிய வித்தைகளுக்கு நாயகியான சரஸ்வதிதேவிதான் அங்கே எழிற்கோலத்துடன் காட்சியளிக்கிறாள். அவளுடைய எழிலுருவைக் காண மனது பரவசத்தால் நெகிழ்ந்து உருகுகிறது.

ஞானம், கல்வி இவற்றொடு இந்தத் திருத்தலத்தில் தூய்மையும் அருளும் மணக்கிறது. காரணம், சரவணப் பெருமானாகிய முருகனை சரவணப் பொய்கையிலிருந்து எடுத்து வளர்த்த கார்த்திகைப் பெண்கள் இங்குதான் முருகனை வழிபட்டு நிலைபெற்றார்கள். அதனால், கார்த்திகை மாதத்து கிருத்திகை தினம் இங்கு மிகச் சிறப்பான விழா நாளாகும். முருகப்பெருமான் குருவாய் அமர்ந்த இடமாதலால் குருவாரம், அதாவது வியாழக்கிழமை விசேஷ தரிசன நாள்.

கந்த சஷ்டி ஆறுநாள், ஐப்பசி மாதத்தில் தேவசேனா கல்யாணம் ஆறுநாள். வள்ளித் திருமணம் பங்குனி மாதம் நடைபெறும். பங்குனி மாதம் நடைபெறும் வள்ளிக் கல்யாண உற்சவத்தில் ஒரு சிறப்பம்சம். முருகனுக்கும் வள்ளிக்கும் திருமணம் நடத்த விநாயகர் யானையாக வந்து மிரட்டினாரே, அந்தச் சம்பவத்தை நினைவூட்டுவதுபோல் இப்போதும் அசல் யானையைக் கொண்டே விரட்டச் செய்து இந்த விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

விருட்சம், தீர்த்தம், தலமகிமை ஆகிய அனைத்துப் பெருமைகளும் பொங்கிச் சிறக்கும் அந்த சுவாமிமலையின் நாயகனைத் தொழ அவன் சந்நிதி நோக்கிச் செல்கிறோம்.

நமக்குமுன் கோடானுகோடி பக்தர்கள், ரிஷிகள், அருள்நெறிப் புலவர்கள் அனைவரும் வழிபட்டு உய்ந்த அந்தத் திருச்சந்நிதியை நோக்கிக் கைத்தொழுதவாறே செல்கிறோம். அங்கே செல்லச் செல்ல இன்னமுத இசைவெள்ளமாய் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழும், நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையும் நம் மனதில் வரிவடிவங்களாகத் தோன்றுகின்றன. இவர்கள் மட்டும்தானா?

வடமொழியில் அமைந்த சுவாமிநாத புஜங்கம், பஞ்சரத்ன ச்லோகம், சுப்ரபாதம், தேவேந்திர

அஷ்டோத்திரம் இப்படி எண்ணற்ற துதிகள் சுவாமிநாதப் பெருமானின் புகழைப் பாடுகின்றன.

முருகப்பெருமானின் திருக்கை வேல் போன்ற அமைப்புள்ள வேல் வேறு எந்தச் சந்நிதியிலும் கிடையாது. இச்சசக்தி, கிரியாசக்தி, இரண்டு சக்திகளோடு ஞான சக்தியாக முருகனும் இணைந்து ஒரே வேலாக அமைந்த மூன்று முகத்து ஆயுதம். அதன் பெயர் ‘திரிசக்தி ஆயுதம்’ என்றார்கள். ஏன் இங்கு முருகன் அப்படி மூன்று சக்திகளும் சேர்ந்த திரிசக்தி ஆயுதத்தை ஏந்தியிருக்கிறார்? அதற்கும் ஒரு சுவையான விளக்கம் இருக்கத்தான் செய்கிறது.

"இந்தத் தலத்தில் மூலவரான முருகப்பெருமான் ஓர் இளம் நைஷ்டிக பிரம்மசாரியாக இருக்கிறார். திருமண பந்தம் இல்லை. அதனால் அந்த பிரம்மசாரி குணத்திற்கேற்ற ஞான சொரூபம்தான் பெருமானுக்கு இங்கே அமைந்திருக்கிறது. ஆனால், பக்தர்களான நமக்கு ஞானம் மட்டும் போதாதே... இவ்வுலக வாழ்க்கை வாழ செல்வமும், சுகபோகமும் தேவைதானே. அவற்றையும் நமக்கு முருகப்பெருமான் தரவேண்டுமே... அதனால் அருகில் உற்சவராக வள்ளி, தெய்வயானை சமேதராக சண்முகப் பெருமானாகவும் எழுந்தருளியிருக்கிறார். கூடவே வள்ளி தெய்வயானையாகவே இச்சாசக்தி, கிரியாசக்தி என்ற இரு சக்திப் பிராட்டியாரையும் தன் வேலிலே கொண்டு அந்த மூவரோடு தானும் அமர்ந்து ஒரு புதுமையான ‘திரிசக்தி’ ஆயுதமாக மூலஸ்தானத்திலேயே அமையப் பெற்றிருக்கிறார். ஞானம் வேண்டுவோர்க்கு மூலகுருநாதன் ஞானத்தையும் அளிக்கிறார்" என்று விளக்குகிறார் குருக்கள்.

அந்த சத்குருநாதனின் தேஜோமயமான திவ்ய பிரம்மசரிய சொரூபத்தில் மனம் திளைக்க நிற்கிறோம்.அவன் சிரசிலே ஊர்த்துவ சிகை (முன்புறமாகச் சரிந்த குடுமி) கையிலே பலாசம் (அத்திமர தண்டம்) இடையில் கௌபீனம், மார்பில் மான்தோல் சம்பந்தப்பட்ட யக்ஞோபவீதம் (பூணூல்).

வேதமும் ஞானமும், சின்னஞ்சிறு பாலகனாக எழிலுருக் கொண்ட அந்த சற்குருநாதரின் பாதாரவிந்தங்களில் சரணடைந்து தொழுகிறோம்.

ஆதிக்கும், அந்தத்துக்கும் பாலமாகி, அதற்கப்பாலும் எழுந்தருளியிருக்கும் ஞானக் கோலமாய் நிற்கிறான் சுவாமிநாதன். உள்ளம் உகந்து உருகி வேண்டும்போது ஒளியாய் நம்முள் அமர்பவனும் அந்த சுவாமிநாதன்தான்.

அகரம், உகரம், மகரம், நாதம், பிந்து என்னும் ஐவகை ஓங்காரத்தின் உருவமும் அவனே!



அந்தப் பிரணவத்தின் நாதனும் அவனே! அட்டமூர்த்த சொரூபமாய் அருள்பாலிப்பவனும் அவனே! அட்டாங்க யோகத்தின் முடிவில் குருவாய் நின்று அருள்பாலிப்பவனும் அவனே! மெய்ஞ்ஞான ஒளியூட்டும் ஞானதீபமும் அவனே!

நூற்றாண்டு கண்ட சுப்பிரமணிய பாரதியார், ‘துய்யோனே! மணியே! துயர் தீர்க்கும் சுவாமிநாதா!’ என்று போற்றித் துதித்திருக்கிறார்.

“பொன்னிசூழ் ஏரகத்துப் பொருப்பினிற்கோயில் கொண்ட பன்னிருகையன் வேலைப் பணிவதே எமக்கு வேலை”

"ஆடும் மயிலில் ஏறி அமரர்கள் சூழவலம் வரு மிளையோனே" என்று அமுதத் தமிழால் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் போற்றுகிறார்.

பொருளொடு நல் ஞானமும் அருளும் அந்த கந்தப்பெருமானின் கவின் மிகு அழகு திருக்கோலம் நம் மனமெல்லாம் நிறைந்திருக்க ஆலயத்திலிருந்து புறப்படுகிறோம். ●



godrej interio®
N.MAHALINGAM & COMPANY
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand Coimbatore - 641 018.
Email : homeappliances@nmanco.com, godrej@nmandco.com
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811, Mob : +91 98438 40000

Registered with Registrar of Newspapers for India
No. 42582/83 Licensed to post without Pre-payment
under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23
Regd. No. : CB/016/2021-23
Date of Publication : 28th Every Month

OM SAKTHI - DECEMBER - 2021